தமிழ் மாலை

இரா. நாகசாமி

19829



தமிழ் மாலை

கலைமாமணி, சிலைமீட்ட செம்மல்
வித்யாவாசஸ்பதி
டாக்டர் இரா. நாகசாமி

தமிழ் ஆர்ட்ஸ் அகெடமி
சென்னை - 600 090

2004

தமிழ் ஆர்ட்ஸ் அகெடமி நூல் எண்.6
தமிழ் மாலை
டாக்டர் இரா. நாகசாமி
©ஆசிரியருக்கு

ஜூலை 2004
விலை ரூ. 80.00

வெளியிடுவோர்:
தமிழ் ஆர்ட்ஸ் அகெடமி
பதிவு செய்யப் பெற்ற மையம்
11, 22வது குறுக்குத் தெரு,
பெசண்ட் நகர், சென்னை – 600 090.
தொலைபேசி : 24916005
E-mail :<nagasamy@xlweb.com>

படங்கள் – டாக்டர் இரா. நாகசாமி

நூலும், படங்களும் அச்சிட்டது:
சென்னை, சாந்தோம்
ஜெய்கணேஷ் ஆப்செட் பிரிண்டர்ஸ்

முன்னுரை

'தமிழ்' என்றாலே இன்பத் தேன் வந்து பாயுது காதினிலே" என்றானே பாரதி அந்த நினைவு தான் வருகிறது. 'இனிமை', 'எளிமை', 'தெய்வத்தன்மை' என்று பல பொருள்களில் வழங்கும் மொழியையே தமிழ் என்கிறோம். இளமை என்றால் வலுவான வளர்ச்சியை உடையது என்பது பொருள். பல்வேறு காலத்தாலும் ஏற்படும் மாற்றங்களையும் ஏற்று வளர்ந்துள்ளதே இம்மொழியின் ஏற்றத்துக்கு காரணம் எனலாம்.

ஆனால் வெள்ளைக்காரர்கள் நம்மை ஆண்ட போது, அவர்களது தொடர்புதான் நமக்கு சிறந்த மாற்றங்களைத் தந்தது என வரலாற்றில் ஒரு மாயை ஏற்படுத்தியுள்ளனர். எடுத்துக்காட்டாக அகர வரிசையில் சொல்லைத் தொகுத்தல், அகராதி அமைத்தல் எல்லாம் வெள்ளைக்காரர்கள் நமக்கு கொடுத்தவை எனக் கருதுகிறார்கள். அது சரியல்ல. சொற்களை மட்டுமல்ல, பாடல்களையே அகரவரிசைப்படுத்தி பாடியுள்ள பாங்கை அப்பர் பெருமானின் தேவாரத்தில் காண்கிறோம். சித்தத்தொகை, குறுந்தொகை, என்னும் தேவாரம் உயிரெழுத்துக்களில் தொடங்கும் அகரவரிசைப்படி பாடல்களை அமைத்து அதைத் தொடர்ந்து மெய்யெழுத்துக்களின் வரிசைப்படி பாடலை அமைத்து முப்பது பாடல்களாகத் திகழ்வதைக் காண்கிறோம். காஞ்சியை ஆண்ட இராஜசிம்மன் என்ற பல்லவ மன்னன் 1300 ஆண்டுகளுக்கு முன்பே தன்னுடைய பட்டப்பெயர்களை எல்லாம் அகரவரிசைப்படி கல்லிலே வெட்டி வைத்துள்ளான்.

வெள்ளைக்காரன் வரும் முன்பே நம் நாட்டில் எத்தனையோ அகராதிகள் தொகுக்கப்பட்டுள்ளன. இவற்றில் பலவிதமான தமிழ் அகராதிகள் ஒரே சொல்லுக்கு பல பொருள்கள் உண்டு என்பதைக் குறிக்கின்றன. "ஒரு சொல் பல பொருள் அகராதி" என்று ஒன்று

உண்டு. அதே போல ஒரே பொருளை பல சொற்கள் எடுத்துரைக்கும். இதற்கு "ஒரு பொருள் பல சொல் அகராதி" என மற்றொரு அகராதி உண்டு. இவைகள் எல்லாம் செய்யுள்களாக இருப்பதால் மனப்பாடம் செய்வது சுலபம். மனப்பாடம் செய்வதால் நமக்கு மொழிவளம் சிறக்கும், இடத்துக்கும் பொருளுக்கும் ஏற்ப இனிமையான, எளிமையான சொற்களை பயன்படுத்த இயலும். ஆதலின் தமிழின் வளம் சிறந்தது. இது போன்று காலப்போக்கில் தமிழோடு இணைந்து பல சொற்களை அவ்வப்போது அகராதியில் சேர்த்து விரிவாக்கியிருக்கிறார்கள். அது போன்ற பல அகராதிகள் உள்ளன.

இவை எல்லாம் பண்டைய காலத்திலிருந்து தொடர்ந்து வளர்ந்த கலையாக இயல், இசை, நாடகம் என பலதுறைகள் வளர்ந்தது போல தமிழ் மொழியில் நீதித்துறை, நிர்வாகத்துறை, வேளாண்துறை, என பலதுறைகளிலும் பல சொற்கள் தோன்றியுள்ளன. அவற்றை பிரதிபலிப்பவையாக, கல்வெட்டுகள் விளங்குகின்றன. இவற்றை வழக்கில் இருந்த சொற்கள் எனலாம். இலக்கியங்களில் உள்ள செம்மையாக ஆக்கப்பட்ட செய்யுட் சொற்களையும் வழக்கிலிருந்த சொற்களையும் அறியத்தான் நமது இலக்கணங்கள் மலர்ந்தன. ஆதலின் கல்வெட்டுகள் வாயிலாகவும் தமிழ் கற்க வேண்டும். இதில் ஒரு சிறப்பும் உண்டு. கல்வெட்டுகள் அந்தந்தக் காலக்கட்டத்தை நமக்கு துல்லியமாக எடுத்துக் கூறுபவை. ஆதலின் ஒரு சொல் தமிழில் எப்பொழுது வழக்கில் வந்தது என அறியவும் இயலும். அதாவது காலந்தோறும் தமிழ் வளர்ந்ததை ஆதாரத்துடன் அறிய முயலும். இவை வழக்குச் சொற்களின் வரலாற்றையே நமக்கு எடுத்தியம்பும்.

நமது தேவாரத் திவ்ய பிரபந்தங்கள் எல்லாம் ஆழ்ந்த தெய்வீக அனுபவத்தையும், பண்பாட்டின் உன்னத நிலையையும் எடுத்துக் காட்டுவதுடன் படிப்போர் மனதில் ஈடில்லா ஆனந்தத்தை

அளிக்கும் அமுதங்களாகத் திகழ்கின்றன. அவற்றைப் படிக்க படிக்க மேலும் மேலும் படிக்க வேண்டும். அனுபவிக்க வேண்டும் என்ற எண்ணமே மேலோங்கி எழுவதைக் காண்கிறோம். நம்மில் பலர் அவற்றின் கவிதை நயத்தையும், சொல் ஆக்கத்தையும் பொருளின் ஆழத்தையும் அறிய ஆர்வம் கொண்டுள்ளனர். தருமபுரம் ஆதீனம் தேவாரப் பதிகங்களுக்கு பெரும் முயற்சியுடன் பொழிப்புரையும் குறிப்புரையும் முன்னர் வெளியிட்டு உதவியுள்ளனர். இப்பொழுது அவ்வாதீனத்தை அலங்கரிக்கும் மஹா சந்நிதானம் அவர்கள் அவ்வுரையை மீண்டும் திருத்தி பதிப்பித்து நம்மனோர்க்கு பேருதவி செய்துள்ளனர். அவ்வுரை செய்தோர்களை நாம் தலையார வணங்குகிறோம். பிரபந்தங்களுக்கு ஈடு உரைகள் பண்டைய காலத்திலேயே எழுதப்பட்டு வைணவ மக்களை மட்டுமின்றி ஏனையோரையும் அனுபவிக்க நெறி வகுத்துக் கொடுத்துள்ளன.

இவற்றை எல்லாம் மேலும் மேலும் படிக்க புதிய கருத்துக்கள் நம் உள்ளத்தே தோன்றத்தான் செய்கின்றன. நான் முன்னர் எழுதியுள்ள 'தவம் செய்த தவம்', 'பொய்யிலி மாலை', 'சொல் மாலை' என்ற நூல்களில் என் மனத்தே தோன்றிய கருத்துகள் பலவற்றையும் தொகுத்துக் கொடுத்துள்ளேன். அதைப் பல ஆன்றோர்கள் பாராட்டி என்னை ஊக்குவித்துள்ளனர். அந்த வரிசையில் இந்நூலில் பல பதிகங்களுக்கு – பதிகங்களின் தன்மைக்கு ஏற்ப பொருள் அளித்துள்ளேன். இவற்றை ஆங்காங்கே கோயில்களில் உள்ள சிற்பங்களின் பின்னணியிலும் பார்த்தால் பொருள் சிறப்பதையும் காணலாம். இந்நூலை எனது அருமைச் செல்வன் மோகனின் புதல்வன் பஞ்சநதீஸ்வரன் என்னும் விஷ்ணுவின் உபநயன பிரும்மோபதேசத்தன்று என்றும் மணக்கும் மாலையாக தொகுத்து அளிப்பதில் பெருமை கொள்கிறேன்.

இந்நூலை அருள்பாலித்து காஞ்சி ஸ்ரீ காமகோடி பீடாதிபதி

ஜகத்குரு பூஜ்ய ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள் அவர்களும் ஜகத்குரு சங்கர விஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள் அவர்களும், ஸ்ரீ முகம் அளித்து என்னை ஆசீர்வதித்து மேலும் ஊக்குவித்து இருக்கிறார்கள். அவர்கள் ஸ்ரீ பாதங்களில் எனது நமஸ்காரங்களை மீண்டும் மீண்டும் சமர்ப்பித்துக் கொள்கிறேன்.

எனது இப்பணியை பலமுறையும் பாராட்டி எனது கட்டுரைகளை படித்ததோடன்றி அருளுரை கூறும் தருமபுரம் குரு மஹாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ ஷண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள் அவர்களின் பொன்னார் திருவடிகளுக்கு எனது நமஸ்காரத்தை உரித்தாக்குகிறேன். திருவாவடுதுறை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ சிவபிரகாச பண்டார சந்நிதி சுவாமிகள் அவர்களும், திருப்பனந்தாள் காசிவாசி கயிலைமாமணி சுவாமிகள் அவர்களும் என்னை இப்பணியில் பலவாற்றாலும் அன்புடன் ஈடுபடுத்தி வரும் திருவுளப் பாங்கை நமஸ்கரித்து வணங்குகிறேன்.

இந்நூலில் பலகட்டுரைகளை அகில இந்திய வானொலியில் பேசும் வாய்ப்பு பெற்றேன். வானொலி நிலையப் பெருமக்களுக்கு எனது நன்றி. திரு. ஜெய்கணேஷ் அச்சகத்து உரிமையாளர் திரு. இரவி அவர்களும், திரு. சுரேஷ் அவர்களும் இந்நூலை அழகுற அச்சிட்டு உதவியுள்ளனர். அவர்களை எவ்வளவு பாராட்டினாலும் தகும். அவர்களுக்கு எனது நன்றி.

இந்நூலுக்கு அப்பர் பெருமானின் பாடலை குறிக்கும் இடத்து சேக்கிழார் கூறும் "தமிழ் மாலை" என்னும் பெயர் சூட்டியுள்ளேன். எனது நூல்களுக்கு ஆக்கம் அளித்து வரும் தமிழ் உள்ளங்கள் இந்நூலின் மணம் நுகர்ந்து அது எங்கும் பரவும் நிலைக்கு உதவ வேண்டுகிறேன்.

இரா. நாகசாமி

சிவன் எனும் ஓசை அல்லது அறையே உலகில்
திருநின்ற செம்மை உளதே

அரிதரு கண்ணியாளை ஒருபாகமாக
அருள் காரணத்தில் வருவர்

அவனும் ஓர் ஐய்யம் உண்ணிஅதள் ஆடையாவது
அதன்மேல்ஓர் ஆடல் அரவம்
கவண் அளவு உள்ள உண்கு கரிகாடுகோயில்
கலனாவது ஒடு.

“நங்கைமுன் செங்கண் ஏனத்தின்பின் நடந்த
காடகக் கால்”

உ

Phone : (04112) 222115
Fax : (04112) 224305

Email : skmkanchi@md3.vsnl.net.in.

Sri Chandramouleeswaraya Namaha:

Sri Sankara Bhaghavadpadachgarya Paramparagatha Moolamnaya Sarvagnapeeta

His Holiness Sri Kanchi Kamakoti Peetadhipathi

JAGADGURU SRI SANKARACHARYA SWAMIGAL

Srimatam Samsthanam

No.1, Salai Street, Kanchipuram – 631 502.

Date: 29.6.2004.

[illegible]

"[illegible]" [illegible] "[illegible]" [illegible]

30 [illegible]

[illegible]

11.7.2004 ல் [illegible]

[illegible]

நாராயணஸ்ம்ருதி:

தமிழ் மாலை

உள்ளடக்கம்

1.	கூற்றாய்	1
2.	சிவன் எனும் ஓசை	10
3.	அரிதரு கண்ணியாள்	15
4.	உறைவது காடு	19
5.	செய்ய பொன்	25
6.	கொட்டி எடுத்தது	29
7.	வல்லேன் புகவும்	34
8.	அரி மால் தேரல்	38
9.	தேற்றப்பட	46
10.	மூவிலைவேல் கூத்தன்	49
11.	பெரும்பித்தன்	54
12.	சதி	57
13.	வடிவம்	61
14.	ஒலி	64
15.	உடன்பாடல்	66
16.	தீர்த்தம்	69
17.	முடி	72
18.	ஆனத்து	75
19.	நந்திக்கலம்பகம்	77
20.	குவாகுவா	80
21.	திருவயிறு	84

22.	கையூட்டு	86
23.	சந்திராதித்தவரை	88
24.	இறை	90
25.	இறை இலி	94
26.	கழிதல்	96
27.	குறிப்பேடு	98
28.	பிரமாதம்	101
29.	கணி	103
30.	கொக்கி	105
31.	ரதகாரர்	108
32.	கல்	111
33.	கல் நாட்டல்	113
34.	திருக்கற்றளி	115
35.	உருவகம்	118
36.	பொன் காண்பது	120
37.	அத்வைதத் தொண்டர்	123
38.	சொல்லின் செல்வன்	127

அவனது பெற்றி கண்டும் அவள் நீர்மை கண்டும்
அகம் நேர்வர் தேவர் அவரே உமையொருபாகர்



புயங்கராக மாநடத்தார்



ஒடு கலனா இறை இவர் வாழும் வண்ணம்

திருநின்ற செம்மையே செம்மையாய்க் கொண்ட திருநாவுக்கரையர்

1

கூற்றாய்

அப்பர் பெருமான் திருவதிகைக்கு அமண்குழாம் தவிர்த்து வந்து திலகவதியாரிடம் திருநீறு பெற்று ஐந்தெழுத்தை ஓதி வீரட்டானத்துள் நுழைந்து பாடிய முதல் தேவாரப் பதிகம் கூற்றாயினவாறு என்பதாம்.

'கூற்றாயினவாறு விலக்ககிலீர்
கொடுமை பல செய்தன நானறியேன்
ஏற்றாய் அடிக்கே இரவும் பகலும்
பிரியாது வணங்குவன் எப்பொழுதும்
தோற்றாதென் வயிற்றினகம் படியே
குடரோடு துடக்கி முடக்கியிட
ஆற்றேன் அடியேன் அதிகைக் கெடில
வீரட்டானத் துறை அம்மானே'

என்று பாடுகிறார். அப்பர் பெருமானின் இம்முதல் பாட்டில் "கூற்றாயினவாறு விலக்ககிலீர்" எனில் என் வயிற்றுச் சூலை நோய் கொடுங் கூற்றுப்போல் என்னை வாட்டுகிறது. அதனை பெருமானே! தாங்கள் இன்னும் அகற்றவில்லை. அது என்னால் தாங்கொணாததாய் உள்ளது. கெடிலநதியின் கரையில் உள்ள வீரட்டானத்தில் உறைகின்ற ஏறு ஊறும் பெருமானே என்னால் தாங்க இயலவில்லை என வேண்டுகிறார் என, "சூலை நோய் நீக்கப் பாடிய பதிகம்" எனக் கூறுவர் அல்லவா!

இங்கு ஒரு மரபைக் காண்போம். திருஞானசம்பந்தர் சீர்காழிப்பதியில் "தோடுடைய செவியன்" எனத் தமது முதல் தேவாரத்தைத் தொடங்குகிறார். இதில் "தோடு" எனில் அருளுருவாம் அன்னையையும், "செவியன்" என்பதால், சிவபெருமானைப் பாடுகிறார் என ஆன்றோர் கூறுவர். அதே போன்று சுந்தரமூர்த்தியும் "பித்தா" எனப் பரமனையே முதலில் விளித்து, தமது தேவாரத்தில் பாடுகிறார் அல்லவா! அதன் பின்னணியில் கூற்றாய் என்னும் பாடலின் பொருளையும் கொள்ள முடியுமா? கொண்டால் சிறக்கும் அன்றோ? ஆதலின் அப்பர் பெருமானின் கூற்றாயினவாறு என்னும் முதல் அடியைப் பின்வருமாறு பிரித்துப் பார்ப்போம்.

"கூற்றாய்! இன+ஆறு+விலக்க+கில்+ஈர்" எனக் கொண்டால் பின்வரும் பொருள் பெறுகிறோம். கூற்று என்றால் "சிவபெருமான்" எனப் பொருள். ஸம்ஹார காரணன் ஆனதினாலே சிவனுக்கு கூற்று எனப்பெயர் உண்டு. புறனானூற்றுப் பாடலில் நான்கு தெய்வங்கள் கூறப்பட்டுள்ளன. "கூற்று = சிவபெருமான், வாலியோன் = பலராமன், புகழ் = கண்ணன், முருகு=முருகப் பெருமான்" என வருவதைப் பார்ப்போம். இப்பாடலில் கூற்று என்பது சிவபெருமானைக் குறிக்கிறது. என்று அப்பாடல் வாயிலாகவே அறியலாம்.

"ஏற்று வலன் உயரிய எரிமருள் அவிர்சடை
மாற்றருங் கணிச்சி மணிமிடற்றோனும்
கடல்வளர் புரிவாளை புரையும் மேனி
அடல்வெந் நாஞ்சில் பனைக்கொடியோனும்
மண்ணுறு திருமணி புரையும் மேனி
விண்ணுயர் புட்கொடி விறல் வெய்யோனும்
மணி மயில் உயரிய மாறா வென்றிப்
பிணிமுக ஊர்தி ஒண்செய்யோனும்
என ஞாலம் காக்கும் கால முன்பின்

தோலா நல்லிசை நால்வர் உள்ளும்
கூற்று ஒத்தீயே மாற்றரும் சீற்றம்
வலி ஒத்தீயே வாலியோனை
புகழ் ஒத்தீயே இகழுநர் அடுநனை
முருகு ஒத்தீயே எண்ணியது முடித்தலின்" – புறம் 56

என நால்வரையும் தெளிவாக கூறுகிறது. ஆதலின் கூற்று என்பது சிவபெருமானைக் குறிக்கும். ஆதலின் அப்பர் பெருமான் "கூற்று ஆயினவாறு" எனக் கொள்ளாமல் "கூற்றாய்" என பரமனையே விளித்து அழைக்கிறார் எனக் கொள்ளுதலே பொருந்தும்.

"கூற்றாய் எனப்பிரித்த பின் உள்ளது "இன ஆறு" என்பதாம். இனவாறு என்பது "சமண மார்க்கம்" எனப் பொருள் பெறும். "இன ஆறு" என்பது சந்தி பெற்று "இனவாறு" என வரும். இன ஆறு எனில் என்ன பொருள்? "இனம்" எனில் "கூட்டம்" என்பது பொருள். "ஆறு" எனில் "வழி" என்பது பொருள். அப்பர் பெருமான் சமணர் கூட்டத்தில் இருந்து அவர்வழி பின்பற்றி அதில் இருந்து விடுபட திருவதிகை வந்துள்ளார். சமணத்துறவியர் கூட்டம் கூட்டமாக அழைக்கப்படுவர். அவர்கள் கூட்டத்தை "கணம்" என்று அழைப்பர். இது அவர்களின் சமய வழி. இன + ஆறு எனில் "சமண கணங்களின் மார்க்கம்" என்பது பொருள்.

'விலக்ககிலீர்' என்பதில் 'கில்' என்ற ஒரு இடைச்சொல் உள்ளது. "விலக்க+கில்+ஈர்" என்பது சொல் ஆக்கம். "கில்" என்ற இடைச்சொல்லுக்கு "ஆற்றல்" "வலிமை" என்பது பொருள். ஆதலின் அப்பர் பெருமான் இங்கு கூறுவது சிவபெருமானே நீரே சமணர் கூட்டத்தின் வழியிலிருந்து என்னை விலக்க ஆற்றல் உடையவர் என வேண்டுகிறார்.

"கூற்றாய் சிவனே, நீரே என்னை சமண் மார்க்கத்திலிருந்து விலக்க வல்லீர்" எனப் பொருள் கொள்ள வேண்டும் எனத்

காலனுக்கும் கூற்றாய்த் திகழும் காலகாலன்
காஞ்சிபுரம்



தோடுடைய செவியன் என அம்மை அப்பனைச்
சுட்டி ஆடும் ஞானக் குழந்தை

தோன்றுகிறது. இதனால் அப்பர் பெருமானும் முதலில் சிவபெருமானைத் தான் அழைக்கிறார். ஞானசம்பந்தர் போலும் சுந்தரர் போலும் எனப் பெறுகிறோம்.

அப்பர் பெருமான் இப்பாடல் பாடிய இடத்தை சேக்கிழார் எவ்வாறு சித்தரிக்கிறார் என்றும் அறிதல் வேண்டும். திருநாவுக்கரசு சுவாமிகள் சரிதத்தில் 60 முதல் 70 வரையுள்ள பாடல்கள் இந்நிகழ்ச்சியைக் குறிக்கின்றன. அவற்றில் சில முக்கிய பகுதிகள் மட்டும் காண்போம்.

அப்பர் திருவதிகை வந்து திலகவதியாரை வணங்கி கூறுவது கீழ்வருமாறு அமைகிறது. கொடுஞ்சூலை நோய் என்னை வந்தடைந்தது. இனி மயங்காது உய்ந்து கரையேறும் நெறி உரைத்தருளும் என்று கேட்கிறார். அப்பர் தாம் உய்ந்து கரை ஏறும் நெறியைக் கேட்கிறாரே ஒழிய சூலை நோயைப் போக்க வழி கேட்கவில்லை.

அதற்கு திலகவதியார் என்ன கூறினார், சேக்கிழார் கூறுவதைப் பாருங்கள்.

"கோளில் பரசமய நெறிக்குழி விழுந்து அறியாது
மூளும் வருந்துயர் உழந்தீர் எழுந்திரீர்"

என்று தான் திலகவதியார் கூறினார். பரசமயநெறிக் குழிவிழுந்து மூளும் துயர் உழந்தீர் எழுந்திரும் என்கிறாரே ஒழிய 'சூலை நோய் உற்றனையோ'. அது போக பரமனைப் பாடும் எனக் கூறவில்லை. இதுவே வழி எனச் சொல்லவில்லை.

இறுதியில் அப்பர் தமது முதல் பதிகம் பாடிய போது நடந்ததையும் சேக்கிழார் கூறுகிறார். அப்பாட்டையும் பாருங்கள்.

"நீற்றான் நிறைவாகிய மேனியுடன்
நிறை அன்புறு சிந்தையில் நேசம் மிக

இது சமணத் தீர்த்தங்கரரின் உரு
அவர்கள் வழிபடும் மார்க்கம் இனஆறு



ஒரு சமணத் துறவியின் தோற்றம்

ஆற்றாது மாற்றார் புரம் மாற்றிய வேதியரை
மருளும் பிணி மாயை அறுத்திடுவான்
கூற்றாயினவாறு விலக்ககிலீர் என
நீடிய கோதில் திருப்பதிகம்
போற்றால் உலகேழின் வரும் துயர்
போமாறு எதிர் நின்று புகன்றனரால்"

என்று பாடுகிறார். இங்கும் தமது சூலை நோய் அகல வேண்டி அப்பர் பெருமான் பாடியதாக சேக்கிழார் கூறவில்லை. ஆனால் "மாற்றார் புரம் மாற்றிய வேதியரை" எனத் திரிபுர சம்ஹாரத்தைக் குறிப்பால் கூறி இவர் மாற்றார் புலம் இருந்து மாற்றவே வேண்டினார் என உணர்த்தி அருளினார். சூலை நீங்கியது இதன் பின் நடந்த நிகழ்ச்சி.

ஆதலின் அப்பர் கூற்றாயினவாறு என்ற பதிகத்தில் முதலில் எடுத்ததும் சூலை நோயின் கொடுமையைக் கூறி தம்மைக் காப்பாற்ற வேண்டவில்லை. ஆனால் "கூற்றாய்" என பரமனையே பாடினார் என்று கொள்வதே அப்பரின் பக்திக்கு சிகரம் போல் அமையும் என்பதில் ஐயமில்லை.

இங்கு மற்றும் ஒரு சிறப்பையும் காணலாம். அது "மாற்றார் புரம் மாற்றிய வேதியரை" என்பதில் உள்ள நுணுக்கமாம். சமண சமயம் வேதத்தை ஏற்றுக் கொள்ளவில்லை. அது வைதிக சைவத்துக்கு மாறான சமயம். அதை மாற்றிய வேதியர்" என தொனிக்கும்படி உள்ளது கண்டு இன்புறலாம். தமக்கு மட்டும் அப்பர் வேண்டிக் கொள்ளவில்லை. ஏழு உலகின் துயர் நீங்க வேண்டினார் என்னும் மாபெரும் உண்மையையே சேக்கிழார் குறித்துள்ளார் என்பதில் சந்தேகம் இல்லை. ஆதலின் அப்பர், சிவபெருமானை "கூற்றாய்" என்று முதலில் விளித்து அமண மார்க்கத்தை தவிர்த்து உலகுய்ய வேண்டிப் பாடினார் எனக் கொள்வது சிறப்பாக அமையும் எனக் கருதுகிறேன்.

2
சிவன் எனும் ஓசை

"சிவன் என்னும் ஓசை அல்லது அறையோ
உலகில் திருநின்ற செம்மை உளதே
அவனும் ஓர் ஐயம் உண்ணி அதள் ஆடையாவது
அதன் மேல் ஓர் ஆடல் அரவம்
கவண் அளவு உள்ள உண்கு கரிகாடுகோயில்
கலன் ஆவது ஓடு கருதில்
அவனது பெற்றி கண்டும் அவநீர்மை கண்டும்
அகம் நேர்வர் தேவர் அவரே"

என்ற அப்பர் பிரானின் பாடல் மிகவும் புகழ் வாய்ந்தது. இதற்கு தருமை ஆதினப் பதிப்பில் பொழிப்புரை பின்வருமாறு உள்ளது.

"உலகிலே சிவன் என்னும் ஓசை திருவானது நிலை பெறக் காரணமான செஞ்சொல் வேறு இல்லை என்று ஆணை இட்டுக் கூறுவேன். எம்பெருமான் பிச்சை எடுத்து உண்பவன். தோலையே ஆடையாக உடையவன். அத்தோல் மேல் ஆடும் பாம்பை இறுகக் கட்டியவன், கவண்கல் அளவே சிறிதே உண்பவன், சுடுகாடு இருப்பிடம், அவனுடைய உண்கலன் மண்டை ஓடு, ஆராய்ந்து பார்த்தால் அவன் உடைமைகளைக் கண்டும், அவன் தன்மையைக் கண்டும் தேவர்கள் தம் உள்ளத்தை அப்பெருமானுக்கு அர்ப்பணம் செய்வர்" என்று பொழிப்புரையில்

கொடுக்கப்பட்டுள்ளது. இதற்கு மாணிக்க வாசக முதலியாரின் நீண்ட குறிப்புரை ஒன்றும் உண்டு. ஏறக்குறைய பொழிப்புரையும், குறிப்புரையும் ஒன்றாகவே உள்ளன.

இங்கு இதன் பொருளை மாற்றி அறிந்தால் சிறக்கும் எனத் தோன்றுகிறது. பொது என்னும் தலைப்பின் கீழ்வரும் இப்பதிகத்தின் ஏனைய ஒன்பது பாட்டுக்களிலும் சிவபெருமானை உமையன்னையோடு இணைத்தே அப்பர்பிரான் பாடுகிறார். ஆதலின் முதல் பாட்டாகிய இப்பாடலிலும், உமையன்னையைப் பாடாமல் இருந்திருக்க மாட்டார் என்பது திண்ணம். அந்த அடிப்படையிலேயே இப்பாடலைக் காண்போம். அத்துடன் "நிந்தாஸ்துதி" யாகவும் (பழிப்பது போல் புகழ்வது) இப்பாடல் உள்ளது.

"சிவன் என்னும் ஓசை அல்லது அறையோ உலகில்"

சிவன் என்ற ஒரு ஓசையைத் தவிர கூவியழைக்க உலகில் வேறு ஒலி இல்லையோ! "திருநின்ற செம்மை உள்ளதே", இங்கு "திரு" என்றால் "பெருமை வாய்ந்த பெண்" என்பது பொருள். எழிலார்ந்த உமையாகிய சிவை என்னும் பெண் (என்னும் சொல்லும்) இருக்கிறதே என்பது பொருள். "செம்மை உளதே" என்பது அதை எடுப்பாகவே குறிக்கிறது.

பின்னர் வரும் வரிகள் எல்லாம் சிவனைப் பழிப்பது போல் புகழ்வதாகும். சிவன் என்னும் ஓசையை நீர் சொல்கிறீரே அவனே பிச்சை உண்பவன். (ஐயம் உண்ணி) உடுப்பதோ தோல் அதன் மேல் ஆடுகின்ற உயிரோடுள்ள பாம்பு! அவன் உண்பதோ கவணளவு உள்ள உணவு தான்! பிச்சையில் கிடைப்பது தானே! கரிகாடு கோயில், இருப்பதோ சுடுகாடு! உண்ணும் கலமோ மண்டை ஓடு! இவற்றை எல்லாம் எண்ணிப் பார்க்கும் போது, அவன் பெற்றி கண்டு பெற்றி என்றால் காரியங்கள் செய்யும் முறை

கண்ணியாளை ஒருபாகமாக
அருள்காரணத்தில் வருவர்

என்று பொருள். ஆதலால் அவன் பெற்றி கண்டு என்றாலே மேலே சொன்ன அவன் செய்யும் காரியங்களைக் கண்டு என்பது பொருள். "அவநீர்மை" என்பதை அவன் நீர்மை என பிரித்து அவனது (சிவனது) தன்மை என்று பொழிப்புரையும், குறிப்புரையும் கூறுகின்றன.

ஆனால் அவநீர்மை என்பதை "அவள் நீர்மை" என்று பிரிக்க வேண்டும். நீர்மை எனில் தன்மை, சிறந்த குணம், சௌலப்யம் என்பது பொருள். அவள் நீர்மை என்பதால் உமையின் தன்மை, சிறந்த குணங்களும், சுலபமான நிலையும் குறிக்கப்படுகின்றன. இதனால் உமையாகிய அவளது மென்மையான எழிலார்ந்த தன்மையையும் கண்டு எனப் பொருள் கிடைக்கிறது. "நேர்வார்" என்றால் அர்ப்பணம் செய்வர் என்று கோபலையரும் தேர்வர் என்று மாணிக்க வாசக முதலியாரும் கொண்டுள்ளனர். நேர்வர் எனில் நிச்சயிப்பார் என்பதே பொருத்தமாகத் தெரிகிறது. சிவபெருமான், உமை ஆகிய இருவரது தன்மையையும் கருதி, தங்கள் மனத்தகத்தே தேவர்களே நிச்சயிப்பர் எனப் பொருள் கொள்ள வேண்டும். யார் சிறந்தவர்கள் என நிச்சயிக்கவில்லை அப்பர். அம்மை அப்பனில் யார் சிறந்தவர் என நிச்சயிக்க முடியுமா? இருவரும் ஒருவரே அன்றோ! ஆதலின் தேவர்கள் தாமே தம் அகத்தில் நிச்சயிப்பர் என முடித்து விடுகிறார்.

அம்மையின் எழில் தன்மையைப் புகழ்ந்து அண்ணலின் செயல்களை வஞ்சப்புகழ்ச்சியாக புகழ்ந்து அடியார் அகத்தே தேர்ந்தெடுப்பார் எனப் பாங்குற கூறியிருக்கும் ஈடு இணையற்ற பாடல் இது. அப்பர் பெருமானின் பாடல்களை சுவைக்கவும் அறிந்தால் பேரின்பம் பருகலாம்.

கிருஷ்ணயஜுர் வேததத்தில் ருத்ரனைக் குறிக்கும் பகுதி ஒன்று உண்டு. அதில் கோரம், சிவை என இரண்டு உருவங்களும்

இணைந்த தன்மை குறிக்கப்படுகிறது. "தஸ்ய ஏதே தனுவௌ" "கோரா அன்யா சிவா அன்யா" என்கிறது. இங்கு தான் அர்த்தநாரியாக சிவபிரான் இணைந்துள்ளதை வேதம் கூறுகிறது. ஒருபால் கடுமையாகவும், மறுபால் அருளுடையதாகவும் உள்ளது என்கிறது வேதம். சிவா என்பது சிவையைக் குறிக்கும். இவ்விரு தன்மையையும் தான் அப்பர்பிரான் சிவன் என்னும் இப்பாடலிலும் பாடுகிறார். பதிகம் முழுவதும் உமையோடு கூடிய சிவனையே அப்பர் பாடியுள்ளதைக் காணலாம். சிவன் என்னும் ஓசை மட்டுமல்ல. சிவை என்னும் ஒலியும் உள்ளது என மிக அழகாகப் பாடுகிறார் அப்பர்.

3
அரிதரு கண்ணியாள்

அப்பர் பிரானின் பாடல்கள் எளிமையான பொருளுடன் இயற்றப்பட்டவை. இப்பாடல்

"விரிகதிர் ஞாயிறல்லர் மதியல்லர்
வேதவிதியல்லர் விண்ணும் நிலனும்
திரிதரு வாயுவல்லர் செறுதீயுமல்லர்
தெளிநீருமல்லர், தெரியில்
அரிதரு கண்ணியாளை ஒருபாகமாக
அருள் காரணத்தில் வருவார்
எரி அரவார மார்பர் இமையாருமல்லர்
இமைப்பாரும் அல்லர் இவரே"

இப்பாடலுக்கு மிக அழகாக பொழிப்புரை தந்துள்ளார் கோபாலையர். குறிப்புரையும் அதுபோல் நன்றே கொடுக்கப்பட்டுள்ளது. மொழிப்புரையைக் காண்போம். "இப்பெருமானார் ஒளிக்கதிர்கள் விரியும் சூரியனும் அல்லர், சந்திரனும் அல்லர், பிரமனும் அல்லர் வேதத்தில் விதித்தனவும், விலக்கியனவும் அல்லர். விண்ணும், நிலனும், அலையும், காற்றும், துன்புறுத்தும் தீயும், தெளிந்த நீரும் அல்லர். செவ்வரி, கருவரி பரந்த கண்களையுடைய பார்வதி பாகராக அருள் காரணத்தால் காட்சி வழங்கும் இவர், கோபிக்கின்ற பாம்பினை மார்பில்,

மாலையாக உடையவர். இவர் கண் இமைக்காத தேவருமல்லர். கண் இமைக்கும் மக்களும் அல்லர். இவர் எல்லாமாகி அல்லராய் உடனும் ஆவார்".

இதில் "வேதவிதியல்லர்" என்பதற்கு 'நான்முகனல்லர்" வேதத்தில் விதித்துள்ளனவும், விலக்கியனவும் அல்லர்' எனப் பொழிப்புரை கூறுகிறது. விதி எனில் நான்முகன் என்றும், வேத விதி என்றும் இருபொருள்கள் உண்டு. "வேதத்தின் தலைவன் நான்முகன் எனக் கொள்ளலாம். ஆனால் மீண்டும் வேதத்தில் விதித்துள்ளனவும் விலக்கியவனவும் அல்லர்" என்று பொழிப்புரை கூறுகிறது. 'வேத விதி' எனில் வேதத்தில் கண்டிப்பாகச் செய்ய வேண்டியது எது என்பதை மட்டும் சுட்டுமே ஒழிய விலக்கியவை கூற வாய்ப்பில்லை. விலக்கியவைக்கு "நிஷேதம்" என்று கூறுவர்.

மேலும் "அரிதருகண்ணியாளை" என்பதற்கு செவ்வரி கருவரி பரந்த கண்களை உடைய பார்வதி எனப் பொருள் கொடுக்கப்பட்டுள்ளது. இது பொருத்தமாகப்படவில்லை. இவ்வாறு பொருள் கொண்டதற்குக் குறிப்புரையே காரணம் எனலாம். குறிப்புரையில் மாணிக்கவாசக முதலியார் 'அரிதருகண்ணியாள்– செவ்வரி படர் தரும் கண் உடையவள். கண்ணி–கண்ணள்' என்று குறித்திருப்பதே காரணம் எனத் தோன்றுகிறது. இது சரியல்ல அன்னையாகிய பார்வதி, செவ்வரி படர் தரும் கண் உடையவள் எனக் கொள்வதன் காரணம் கூறவில்லை. இதை வேறு விதமாகக் கூறலாம் எனத் தோன்றுகிறது.

அரிதரு கண்ணியாள் எனில் "திருமாலால் சிவபெருமானுக்கு கன்யாதானமாக அளிக்கப்பட்ட பார்வதி" என கல்யாணசுந்தரக் கோலத்தை இது சுட்டுகிறது எனக் கூறலாம். மேலும் 'கண்ணியாள்' எனில் அருள் வடிவானவள் என்பது பொருள். 'கண்' என்றால் அருள் என்பது பொருள். கண்ணோட்டம் என்பது காண்க.

அரிதரு கன்னியாள்

அவளுக்கு ஒரு பாகம் அளித்து அருள் காரணத்தில் வருவர் என்பது அடுத்து வரும் வரி. அவளால் தான் அண்ணல் அருள் வடிவாயுள்ளார் என்பது நமது சித்தாந்தம். "அருளுண்டாம் ஈசர்க்கு அது சக்தியன்றே" என்பது சித்தாந்த வாக்கு. உமையன்னை, திருமாலின் தங்கை எனப்படுவர். ஏராளமான சிற்பங்களில் திருக்கல்யாணக் காட்சியில் திருமால் பார்வதி தேவியை தாரை வார்த்துக் கொடுப்பதாக உள்ளதைக் காணலாம். சங்காரக் கடவுளாகிய சிவபெருமானுக்கு காத்தல் கடவுளாகிய திருமால் அருள் வடிவாம் உமையைத் தாரை வார்த்துக் கொடுக்க அவளுடன் வரும் சிவன் உலகைக் காக்க அருள் காரணத்தால் வருகிறார் என்பதே பொருத்தமாக காணப்படுகிறது. அதை விட்டு செவ்வரி பரந்த கண்ணாள் என்பது அருளுடைமைக்குப் பொருந்தாது.

4
உறைவது காடு

அப்பர் பெருமான் தமது தேவாரத்தில் (நான்காம் திருமுறை) கீழ்வரும் பாடலைப் பாடியுள்ளார். இது எந்த ஊரையும் குறிக்காமல், பொது என்ற தலைப்பின் கீழ் வருகிறது.

"உறைவது காடு போலும் உரிதோல் உடுப்பர்
விடை ஊர்வது ஓடு கலனா
இறை இவர் வாழும் வண்ணம் இதுபோலும் ஈசர்
ஒருபால் இசைந்தது ஒருபால்
பிறை நுதல் பேதை மாதர் உமை என்னும் நங்கை
பிறழ்பாட நின்று பிணைவான்
அறை கழல் வண்டு பாடும் அடி நீழல் ஆணை
கடவாது அமரர் உலகே"

இதற்கு தருமை ஆதினப் பதிப்பில் பொழிப்புரை பின்வருமாறு உள்ளது. "இவர் தங்கும் இடம் காடு. உரித்தெடுக்கப்பட்ட புலி முதலியவற்றின் தோலை உடுப்பர். இவர் காளையை ஊர்வர். மண்டை ஓடு உண் கலம். தலைவராகிய இவர் வாழும் வகை இது. இவர் எல்லோரையும் அடக்கி ஆள்பவர். எனினும் இவருக்கு உரியது இவரது வலப்பகுதியே. மற்றொரு பகுதியால் பிறை போன்ற நெற்றியளாய் மடம் என்னும் பண்புள்ளவளாய் திகழும் விரும்பத்தக்க உமை என்னும் நங்கை உள்ளாள். இடம் பெயர்ந்து

ஈசர் ஒருபால் இசைந்தது
ஒருபால் : அரிஹரர் - நாமக்கல்

ஒரு பால் அரியுருவம் திகழ்ந்த
செல்வர் - பிள்ளையார்பட்டி

உமையொருபாகன்

3

ஆடுவதற்காகப் பார்வதியோடு கூடியிருப்பார். வீரக்கழல் ஒலிக்க வண்டுகள் பாடும். திருவடியின் நிழலாகிய அப்பெருமானுடைய ஆணையைத் தேவர் உலகம் மீறிச் செயல்படாது" என்று கோபாலையர் பொழிப்புரை உள்ளது.

குறிப்புரையும் இது போன்றே உள்ளது. இவ்வுரைகள் இப்பாடலின் உட்கிடையை வெளிப்படுத்துகின்றனவோ எனின் ஐயமே!

இப்பாடலுக்கு கீழ்வருமாறு பொருள் கொள்ளலாம் எனக் கருதுகிறேன். இப்பாடல் உள்ள பதிகம் முழுவதிலும் அதாவது பத்து பாடல்களிலும் சிவபெருமான் உமையன்னையோடு தோன்றுகின்ற பாங்கை குறித்தே அப்பர் பாடுகிறார். அதுவும் அர்த்தநாரி உருவை சிறப்பாகப் பாடுகிறார். ஆண், பெண் என்ற இருவேறு தன்மையை பாடுவதால் இப்பாடல் முழுவதும் இருவேறு தன்மைகளைப் பாடுகிறார் என்பது தெளிவு. இப்பாடலில் வந்துள்ள சொற்கள் இதைத் தெளிவாக்குகின்றன. "இவர் ஈசர், அவள் பேதை" "இவர் இசைந்தார், அவள் பிறழ்பட்டாள்" என வந்துள்ளதைக் காணலாம். இந்த அடிப்படையில் பாடல் முழுவதின் பொருளையும் காணல் வேண்டும்.

இவர் உறைவது காடு. காட்டான் போல் உரித்த தோலாடையை உடுத்தியுள்ளார். இவர் ஊர்வதோ கத்திக் கொண்டு வீறிட்டு ஓடும் காளைமாடு, உண்ணும் கலனோ மண்டை ஓடாகிய கபாலம். இவர் வாழும் முறை இதுவாயிருந்தாலும், இவர் இறைவன் ஈசன். இவர் ஈசனாக அனைவரையும் ஆள்பவராக ஒருபாகத்தே திகழ்கிறார். (இசைந்தவராக) ஆனால் மறுபாகத்தே அதற்கு மாறுபாடாக இசைந்தது எனில் ஆட்பட்டவராய் திகழ்தல்; எனில் ஒருபால் திருமாலாகத் திகழ்கிறார். லிங்கோத்பவர் வரலாற்றில் அடிகாணாத திருமாலைத் தன் இடப்பாகத்தே ஆட்கொண்டார்.

ஆதலின் அரிஹரர் உருவை ஈசர் ஒருபால் என்றும் திருமலாய் இசைந்தது ஒருபால் என்றும் கொள்ளலாம். அர்த்தநாரி உருவைக் குறிக்கிறது என்றும் கொள்ளலாம். நிலா போன்ற முகமுடைய பெண்ணான உமை நங்கையாகத் திகழ்கிறார். ஒருபால் ஈசனாகிய இவர் ஒரு பெண்ணுக்கு இசைந்து நிற்கிறார் என்றும் பொருள். பிறழ் என்றால் துள்ளல் என்பதும் பொருள். துள்ளல் பாட என்பது கூத்துக்கு ஏற்ப பாடுதல். உமை கூத்துக்கு ஏற்ப பாட இவர் நின்று இணைகிறார்.

பிறழ் என்றால் துள்ளல் என்றும் கண்டோம். துள்ளுதல் வேறு, நிற்றல் வேறு. இங்கு துள்ள என்றும் நின்று என்றும் மாறுபட்ட கருத்துக்களைக் குறிக்கும் சொற்களைக் காணவும்.

அறைகழல் வண்டின் ரீங்காரத்தை ஒத்து ஒலிக்கும் சிலம்புடை அடி. அதன் கீழ் (நிழல் என்றால் நிழல் என்றும் குடிமை என்றும் பொருள்) குடிமை ஆணையை பகைவரின் உலகம் மீறி நடவாது என்றும், அவர் அடிக்கீழ் ஆண்மையை தேவருலகம் மீறாது என்றும் இரு பொருள்.

இப்பாடலில் சில சொற்களுக்கு இரண்டு பொருள்கள் என்கிறோம். பிறழ்பாட எனில் 'மாறுபாடாக' என்றும் 'துள்ளல்' என்றும் இரு பொருள்கள் உண்டு. அதே போல பிணைபடு எனில் உடன்படு என்றும், இணைவான் என்றும் பொருள். அடி நிழல் என்றால் திருவடி நிழல் என்றும் குடிமை என்றும் பொருள்.

அமரர் எனில் தேவர் என்றும் பகைவர் என்றும் பொருள். சிவபெருமான் அர்த்தநாரியாக இரு தன்மை உடையவராக வெளிப்படுவது இங்கு தெள்ளனத் தெரியும். இல்லை எனில் மாறுபட்ட பொருள் கூறும் சொற்களை அப்பர்பிரான் பயன்படுத்தியிருக்க மாட்டார் என்பதில் ஐயம் இல்லை. ஆதலின் தேவாரப் பாடல்களுக்கு உரை கூறும் போது பதிகம் முழுவதின்

தன்மையையும், கொண்டு கூறினால் சிறக்கும் எனத் தெரிகிறது. ஆதலின் இறைவன் கானவன் போல் தோன்றினாலும், மிகவும் பண்பட்டவனாகவும் விளங்குவது நோக்கத்தக்கது.



உறைவது காடு போலும் உரித்தோல் உடுப்பர்
விடை ஊர்வது

5
செய்ய பொன்

திருவதிகையில் அப்பர் பாடிய பாடல் ஒன்று பின்வருமாறு உள்ளது.

"முளைக்கதிர் இளம்பிறை மூழ்க வெள்ள நீர்
வளைத்தெழு சடையினர் மழலை வீணையர்
திளைத்ததோர் மான்மறிக் கையர் செய்யபொன்
கிளைத்துழித் தோன்றிடும் கெடில வாணரே"

இங்கு தருமை ஆதினப் பதிப்பில் கோபாலையர் பொழிப்புரை பின்வருமாறு உள்ளது. "மண்ணைத் தோண்டிய அளவிலே சிவந்த பொன் வெளிப்படும். கெடில நதிக்கரையில் உகந்தருளியிருக்கும் பெருமான் கிரணங்களை உடைய பிறை மூழ்குமாறு கங்கை வெள்ளத்தை தேக்கிய நிமிர்ந்த சடையன், வாய் இனிய வீணையை ஒலிப்பவராய், மான்குட்டி மகிழ்ந்திருக்கும் கையில் உடையவராய், அடியவர் கண்ணுக்குக் காட்சி வழங்குவார்" என்று.

'செய்ய பொன் கிளைத்துழித் தோன்றிடும் கெடிலவாணர்' என்பதற்கு மண்ணைத் தோண்டிய அளவிலே செம்பொன் வெளிப்படும் என்று பொருள் கொண்டுள்ளார். குறிப்புரை எழுதிய மாணிக்கவாசக முதலியார் "கிளைத்தல்" மண்ணைத் தோண்டுதல் உழி என்றால் இடம் என்றும் பொருள் கூறுகிறார்.

மழலை வீணையர் வலம்புரத்தே
வட்டணைகள் பட நடந்த நாயகர்

"முளைக்கதிர் இளம்பிறை மூழ்க வெள்ளநீர்
வளைத்தெழு சடையினர்"

கிளைத்தல் என்றால் 'பெருக்குதல்' என்று பொருள் உண்டு. அதுபோல உழி என்றால் பக்கம் என்றும் பொருள் உண்டு. இங்கு செய்ய செம்பொன் பெருக்குகின்ற பக்கங்கள் எனக் கொள்ள வேண்டும். பொன் விளையும் பூமி என்றால் மண்ணைத் தோண்டினால் பொன் வரும் என்பதைக் காட்டிலும் பயிர் செழிக்கும் என்பதே சிறந்தது. இப்பொழுதும் திருவதிகை சென்றால் பச்சை பசேல் என்று பயிர் நிலங்கள் நிறைந்து விங்குவதைக் காணலாம். ஆதலின் இப்பாடலில் கெடிலக்கரையின் பக்கங்கள் செம்பொன் பெருக்கும் வகையில் பயிர் நிறைந்து தோன்றுகின்றன விளங்குகின்றன எனப் பொருள் கொண்டால் அதில் மேலும் ஒரு சிறப்பைக் காணலாம். பாட்டின் தொடக்கத்தில் முளைக்கதிரைக் கூறுகிறார். வெள்ள நீரைக் கூறுகிறார். அது கதிர்களை மூழ்கடித்து விடாமல் நீரை வளைத்துப் போட்டதைக் கூறுகிறார்.

இளம்பிறை முளைக் கதிர்களை கொண்டது. அதை மூழ்கடிக்கும் போல் வந்த கங்கை வெள்ளத்தை (கருணையினால்) தமது சடையில் வளைத்து தடுத்துள்ளார் சிவபெருமான். அதனால் கதிர்கள் பிழைத்து செழித்தன. அது போன்றது கெடிலநதி. அதன் வெள்ள நீர் பக்கங்களில் உள்ள இளம் கதிர்களை மூழ்கடிக்கவில்லை. செழித்து வளரும்படியாகச் செய்கின்றன. அதனால் செல்வம் மிகுந்து வாழும் வாணராக – கெடிலவாணர் விளங்குகிறார். வாணர் எனில் "வளம் மிகுந்து வாழ்பவர்" என்பது பொருள். ஆதலின் முதலில் முளைக்கதிர் கூறி, வெள்ள நீரில் மூழ்காது அதைக் காத்த கருணை கூறி, கெடிலக்கரை கூறி பக்கத்தில் பொன் பெருக விளையும் பயிர் நிலங்களை கூறி அதன் தலைவர் எனக் கூறும் பாங்கு கண்டு இன்புறத்தக்கது. மேலும் நிலவின் கதிர் பொன்நிறமாய் காட்சி தருகிறது. முளைநிலா ஆதலின். அது போல கெடிலக் கரையில் விளையும் பயிர்களும் பொன்னிறமாகத் திகழ்கின்றன எனவும் கூறலாம்.

6
கொட்டி எடுத்தது

அப்பர் பிரானின் கீழ்வரும் பாட்டு திருநல்லூர்ப் பதிகத்தில் உள்ளது.

"அட்டுமின் பலி என்றென்று அகம் கடை தோறும் வந்து
மட்டவிழும் குழலார் வளை கொள்ளும் வகை என் கொலோ!
கொட்டிய பாணி எடுத்திட்ட பாதமும் கோளரவும்
நட்ட நின்றாடிய நாதர் நல்லூர் இடம் கொண்டவரே"

இப்பாடலில் "மட்டவிழும் குழலார்" என்பதற்கு தேன் ஒழுகும் கூந்தலை உடைய மகளிர் என கோபாலையரும், "கள்விரியும் குழலினராகிய மகளிர்" என மாணிக்க வாசக முதலியாரும் தருமை ஆதீனப் பதிப்பில் பொருள் கொடுத்துள்ளார். 'மட்டு' எனில் 'தேன்' என்றும் 'கள்' என்றும் பொருள் உண்டு. இருப்பினும் "வாசனை" என்ற மற்றும் ஒரு பொருளும் உண்டு, அது போல் "அவிழும்" என்றால் 'ஒழுகுதல்' 'பரவுதல்' எனப் பொருள்கள் உண்டு. ஆதலின் 'தேன் ஒழுகும் குழல்' அல்லது 'கள் பரவும் குழல்' என்பதைக் காட்டிலும் "வாசனை பரவும் கேசமுடைய மகளிர்" என்பது இங்கு பொருள் சிறக்கும் எனத் தோன்றுகிறது. இன்பச் சுவை பற்றிய பாடலாதலால்

மேலும் "கோள் அரவு" என்பதற்கு "கொலைத் தொழிலை செய்யும் பாம்பு" எனக் கோபாலையரும், "கொலைப் பாம்பு, கோள்–



அட்டுமின் பலி என்றென்று அகம்கடைதொறும் வந்து
மட்டவிழும் குழலார் வளை கொள்ளும்
வகை என்கொலோ



மட்டவிழும் குழலார் வளை கொள்ளும்
வகை என்கொலோ

கொலை" என மாணிக்க வாசக முதலியாரும் கொண்டுள்ளார். ஆனால் கோள் என்பதற்கு 'விஷம் என்னும் பொருள் உண்டு. 'கொலை செய்யும் பாம்பு' என்பதைக் காட்டிலும் "விஷப் பாம்பு" என்பது சிறப்பாகப்படுகிறது.

அகத்துறைப் பாடல்களில் "வளை கொள்ளுதல்" எனில் தலைமகன் மீது காதலுற்ற பெண் அவனை அடைய தாமதமானதால் உடல் மெலிந்து, அவள் கையில் உள்ள வளையல்கள் நெகிழ்ந்து விழும். அதற்கு காரணமாயிருந்தது தலைமகன் என்று நயம்பட உரைத்தல் மரபு. "வளை கொள்ளுதல்" என்றால் பெண்களின் வளையல்களுடைய கரத்தைப் பற்றினான் என்பது பொருளல்ல. இலக்கிய நயமுமல்ல, கோபலையர் கொடுத்துள்ள பொழிப்புரையில் "மகளிரின் வளையல்களைக் கைப்பற்றும் செயல்" என்று குறித்துள்ளார். இப்பொருள் மாற்றம் பெற்றால் சிறக்கும். இதற்கு காரணம் சிவபெருமான் தாருகாவனப் பெண்களிடம் விடங்கராக பாடியும் ஆடியும் சென்றவர். பெண்கள் யாரையும் தொடவில்லை. அவர் கொண்டது பாசுபத வேடம். பாசுபதர்கள் காதலுற்றவர் போல் நடிக்க வேண்டுமே ஒழிய தாம் காதலில் ஈடுபடக் கூடாது என்பது கோட்பாடு. சிவபிரான் தாருகா வனத்தில் எந்த பெண்களின் கையையும் பற்றியதாக புராணங்களில் இல்லை.

இப்பாடலில் மேலும் ஒரு சிறப்பும் காண்கிறோம். கொட்டிய– எடுத்திட்ட என்றும் பாணி – பாதம் என்றும் அப்பர் ஒரே அடியில் பயன்படுத்தியுள்ளார் இதை ஒருவகை முரண் அணி அல்லது அலங்காரம் என இலக்கிய மரபு கூறும். கொட்டுதல்– எடுத்தல் என்பன மாறான செயல்கள். பாணி என்றால் கை– பாணி– பாதம் என்பவை மாறான அங்கங்கள். கொட்டிய பாணியும் எடுத்த பாதமும் என்பதை, "விரோத அணி" என்பர். சமஸ்கிருதத்தில் "விரோதாபாசம்" என்பர். மாறுபட்டவை போல் தோன்றுவது.

"பலி இடுமின் என்றென்று" என இருமுறை கூறியது ஒவ்வொரு அகத்திலும் சென்று பலி கேட்பதைக் குறிக்கிறது.

ஒவ்வொரு வீட்டு வாசலிலும் சென்று பலி இடுமின் இடுமின் என்று கேட்கிறார். அவ்வகத்துப் பெண்கள் தங்கள் வாசனை நாறும் கேசங்கள் நெகிழ வெளிவந்து காண்கின்றனர். இவரது அழகு அவர்கள் மனதைக் கவர்கிறது. இவரோ கைகளால் தாளம் போட்டுக் கொண்டு, திருவடிகளால் நடம் இட்டுக் கொண்டு வருகிறார். இவர் இடையில் பாம்பு ஒன்று மட்டும் உள்ளது. இவர் நிற்கிறார், நடமாடுகிறார். இவர் அழகில் மயங்கிய பெண்கள் இவரை அடைய ஏங்குகின்றனர். இவரோ ஆடிக் கொண்டே அகல்கிறார். ஆதலின் அவர்கள் மெலிகின்றனர். அவர்களது கரங்களில் உள்ள வளையல்கள் சோர்கின்றன. நல்லூரில் இடம் கொண்ட இவர் இவ்வாறு செய்தல் அழகோ (என் கொலோ!) என்பது பொருள்.

இது தாருகாவனத்து நிகழச்சியை, திரு நல்லூரில் நடைபெற்றதாக எழிலுற உருவகப்படுத்துவது.

7
வல்லேன் புகவு

அப்பர் பிரானின் திருநல்லூர்ப் பதிகத்தில் கீழ்வரும் பாடல் வருகிறது.

"செல்லேர் கொடியன் சிவன் பெருங்கோயில் சிவபுரமும்
வல்லேன் புகவு மதில்சூழ் இலங்கையர் காவலனைக்
கல்லார் முடியோடு தோளிறச் செற்ற கழலடியான்
நல்லூர் இருந்த பிரானல்லனோ நம்மை ஆள்பவனே".

செல்லேர் என்ற சொல்லுக்கு பொருள் என்ன என்பது விளங்கவில்லை என மாணிக்கவாசக முதலியார் தருமை ஆதினப்பதிப்பில் குறிக்கிறார். ஆனால் கோபாலையர் தமது பொழிப்புரையில் 'ஏர்' என்பது 'ஏறு' என்பதின் திரிபு எனக் கொண்டு ஏற்றை கொடியன் கொடியாக உடைய சிவபிரானார் எனக் குறித்துள்ளார். இது சரியாகவே தோன்றுகின்றது. ஆயினும் வேறு பொருளும் கொள்ளலாம். இனி அவரது பொழிப்புரையைப் பார்ப்போம்.

"இடியை ஒத்து ஒலிக்கும் காளை வடிவு எழுதப்பட்ட கொடியை உடைய சிவபெருமானுடைய சிவபுரக் கோயிலகத்துப் புகவல்லேன் அடியேன். மதில்களால் சூழப்பட்ட இலங்கை நகர மக்களின் தலைவனான இராவணனுடைய மலையை ஒத்த

உறுதியுடைய முடிகளோடு தோள்கள் நெரியுமாறு துன்புறுத்திய திருவடிகளை உடையவனாய் நல்லூரில் உறையும் பெருமானே நம்மை அடிமையாக ஆள்பவன் ஆவான்" என்பது கோபாலையர் பொழிப்புரை.

குறிப்புரையில் சற்றுத் தெளிவு இல்லை எனப்படுகிறது. கல்லார் முடி என்பதற்கு முதலியார் "நவரத்தினக் கற்கள் பதித்த அவனது முடியோடும் கூட" எனப் பொருள் கொடுத்துள்ளார். கோபாலையர் "மலையை ஒத்த உறுதியுடைய முடிகளோடு தோள்கள் நெரியுமாறு துன்புறுத்திய திருவடிகளை உடைய" என்கிறார். இதற்கு எளிமையாகவே பொருள் கொள்ளலாம் எனத் தோன்றுகிறது. "கல்லோடு கூடிய சிகரத்துடன் அவன் தோள் இற்று வீழ காலை பதித்தவர்" எனக் கொள்வது பொருந்தும் எனத் தோன்றுகிறது.

"செல்லேர் கொடியன்" என்பது சிவபிரானைத் தழுவும் எனக் கொண்டு, செல்கின்ற ஏற்றை – காளையைத் கொடியில் உடைய (கொடியின்) சிவபெருமான் எனப் பொழிப்புரைக் கூறுவதைக் கண்டோம். ஆனால் "செல்லேர் கொடியன் இலங்கையர் காவலனை" என இராவணனுக்கு அடைமொழியாக்கினால் பாட்டுச் சிறக்கும். ஏர் என்றால் "எழுதல்" என்று பொருள் உண்டு. "உலகம் உவப்ப வலன் ஏர்பு திரிதரு" என்ற முருகாற்றுப்படை அடியில் வலன் ஏர்பு எனில் எழுந்த என்ற பொருள் காணவும். ஆதலின் 'செல்லேர் கொடியன்' என்பதற்கு செல்ல எழுந்த கொடியவனர்கிய இராவணன்" எனப் பொருள் பெறுகிறோம். கொடியன் ஆதலின் சிவன் பெருங்கோயில் சிவபுரமும் வல்லேன் புகவ்" என்றான். பரன் அவன் இறுமாப்பை அழித்தார். ஆதலின் பாடல் தன்மைக்கு ஏற்றதாய் பொருள் அமைகிறது.

மேலும் கோபாலையர் "வல்லேன் புகவு" என்பதற்கு "கோயிலகத்து புகவல்லேன் அடியேன்" எனப் பொருள்



கொட்டியபாணி எடுத்திட்ட பாதமும் கோள் அரவும்
நட்டநின்றாடிய நாதர் நல்லூர் இடம் கொண்டவரே
திருநல்லூர்

கொண்டுள்ளார். இங்கு 'அடியேன்' என்ற சொல்லை வருவித்துக் கொண்டுள்ளார். இதற்கு பதிலாக 'வல்லேன் புகவு' என்ற இடத்தில் "என்னும்" என்ற சொல்லை வருவித்துக் கொண்டால் பொருள் சிறக்கும். வல்லேன் என்பதை இராவணனின் வாக்காகக் கொள்வது பொருந்தும். இப்பொழுது "சிவன் பெருங்கோயில் சிவபுரமும், புகவும் வல்லேன் என்னும் மதில் சூழ் இலங்கையர் காவலனை" என்று பொருள் தெளிவாகிறது.

மேலும் "புகவு" என்னும் சொல்லுக்கு "புக" என கோபாலையர் பொருள் கூறுகிறார். புகவும் என முதலியார் பொருள் கொண்டுள்ளார். 'புகவு' என்பதற்கு 'மேலே ஏறவும்' என ஒரு பொருள் உண்டு. இராவணன் கயிலையங்கிரியின் மேல் தனது தேரில் செல்கிறான். அவனது சாரதி– ஐய இது சிவன் உறையும் மலையாம் கைலாயம். இதன் மேலே செல்ல முடியாது என, அவன் அதை அப்பால் எறிந்து விட்டு செல்ல வல்லேன் என இறுமாப்புடன் கூறுகிறான். மலையை தன் பத்து தலைகளையும் இருபது கரங்களையும் கொண்டு தூக்க விழைகிறான். பரமனோ தனது கால்விரல் ஊன்றி அவனது அகங்காரத்தை அழித்தார் என்பது வரலாறு. ஆதலின் 'புகவு' என்பதற்கு கயிலங்கிரியில் புகவும் வல்லேன் என்பதைக் காட்டிலும் அதன் மேல் ஏறிச் செல்லவும் வல்லேன் என்பது சிறக்குமோ எனத் தோன்றுகிறது.

மேலும் இராவணனை தோளிறச் செய்தவராயிற்றே என்று கருத வேண்டா. இவர் நல்லூர் (நல்ல ஊரில்) அமர்ந்த பிரானல்லவோ இவரல்லவோ. நம்மை ஆள்பவரே நல்லதே கிட்டும் என்பது தொனிக்கிறது எனலாம்.

8
அரி மால் தேரல்

அரிமால் ஏறுதல் என்னும் ஒரு வழக்குண்டு. அப்பர் பிரானின் திருஐயாற்றுப் பதிகத்தில் அதைக் காணலாம்.

"பாடகக் கால், கழற்கால், பரிதிக்கதிர் உக்க அந்தி
நாடகக்கால், நங்கை முன் செங்கண் ஏனத்தின் பின் நடந்த
காடகக்கால், கணம் கைதொழும் கால்,எம்கணாய் நின்ற கால்,
ஆடகக்கால், அரிமால் தேர வல்லன ஐயாற்றனவே"

இங்கு அரிமால் தேரவல்லன எனில் என்ன பொருள்? இதற்கு தருமை ஆதினப்பதிப்பில் கோபாலையர் பொழிப்புரை கீழ்வருமாறு உள்ளது "பாடகம் என்னும் மகளிர் காலணியை அணிந்த கால், கழல் என்ற ஆடவர் காலணியை அணிந்த திருவடி. சூரியனுடைய கதிர்கள் மறைதற்குரிய மாலையிலே கூத்தாடும் திருவடிகள். பார்வதிக்கு முன்னர் சிவந்த கண்கள் உடைய பன்றியின் பின்னே, காட்டுப் பகுதியில் நடந்த திருவடிகள். அரியாகிய திருமால் திருவடியின் இருப்பை பன்றி வடிவெடுத்து பூமியை அகழ்ந்து சென்று ஆராயுமாறு பேராற்றலுடையன, என்னுமாறு ஐயாறு எம்பெருமானுடைய திருவடிகள் உள்ளன" என்பது பொழிப்புரை இங்கு 'அரிமால்' என்பதற்கு அரியாகிய திருமால் என்றும் 'தேர வல்லன' என்பதால் பன்றி வடிவில் பூமியை அகழ்ந்து சென்று ஆராயுமாறு பேராற்றல் உடையன" என்று பொருள் கொண்டுள்ளார்.

பரிதிக் கதிர் உக்க அந்தி நாடகக்கால்

நாடகக்கால் நங்கைமுன் செங்கண் ஏனத்தின் பின் நடந்த
காடகக்கால் கணம் தொழும் கால், எம்கணாய் நின்ற கால் -
கிராதராகக் கொண்ட கோலம்

அருச்சனர்க்கு அம்பும் வில்லும் துடியுடை வேடராகித்
தூயமந்திரங்கள் சொல்லி கொடிநெடுந்தேர் கொடுத்தார்

லிங்கோத்பவர்



அரி மால் தேரஅல்லன
அரி மால் உருவில் அகழ்ந்தும்
காணமுடியா லிங்கபுராண தேவர்

குறிப்புரை எழுதியுள்ள மாணிக்கவாசக முதலியார், விரிவான விளக்கம் கொடுத்துள்ளார்.

"அரிமால் தேரவல்லன் என்னும் (மதுரை ஞான சம்பந்தப் பிள்ளையின் பதிப்பில் உள்ள) பாடம் பொருந்தும். அரிமான் தேர்வல்லன் என்பது பற்பல பழைய பதிப்புகளில் உள்ள பாடம். அரிமால் – அரியாகிய திருமால். தேர அடி தேடித் தெரிந்து கொள்ள காண்டற்கு எளியன் அல்லன். அரி பிரமன் என்று கொண்டு அயனும் மாலும் எனலுமாம். "பரிமான் தேர்வல்வினை" என்று பாடபேதம் உண்டு" என்று முதலியார் குறிக்கிறார்.

'அரிமால் தேரவல்லன்' என்ற தொடரைக் காட்டிலும் இப்பொழுது கொண்டுள்ள 'அரிமால் தேரஅல்லன்' என்ற தொடர் பொருத்தமாகத் தோன்றுகிறது. 'அரிமால்' என அரி என்றும் மால் என்றும் அடுத்தடுத்து வந்துள்ளதால் பொருள் கொள்வதிலே இவ்வாறு நெரடல் ஏற்பட்டுள்ளது எனத் தெரிகிறது. ஆனால் இதற்கு பொருள் மிகவும் எளிமையாகவே கொள்ளலாம். 'மால்' என்றால் 'பன்றி' என்ற பொருள் பல இடங்களில் வந்துள்ளது. ஆதலின் 'அரி பன்றியாகி தேடுவதற்கு கிட்டாதவை' என்பது நேராகவே பெறப்படுவதால் 'அரி மால்' என்ற சொற்களைக் கண்டு குழம்ப வேண்டியதில்லை. இங்கு மற்றும் ஒரு நுண் குறிப்பும் உள்ளது காணலாம்.

எந்தக் கால்கள் ஒரு பெண்ணின் முன்னே பன்றியின் பின்னே காட்டகத்தே சென்றதோ அதே கால்களை பன்றியாகிய திருமால் தேடி அறிய முடியவில்லை. யார் அந்தக் காட்டில் சென்ற பெண் – சிவபிரான் வேடனாகவும் உமை அன்னை வேடிச்சியாகவும் பன்றியைப் பின் தொடர்ந்து சென்றது கிராதார்ஜுன வரலாற்றில் பிரசித்தம். இதை இங்கு நயமாக கூறுகிறார் அப்பர் பிரான். அது மட்டுமல்ல "பாடகக் கால்" "கழற் கால்" என்பதால் அர்த்தநாரி

திருவடிவைக் கூறுகிறார். அந்தி நாடகக் கால் என்பதால் சந்தியா தாண்டவத்தைக் குறிக்கிறார். காடகக் கால் என்பதால் கிராதர் வடிவைக் கூறுகிறார். காடகம் – காட்டில் என்று பொருள் காட்டில் சென்ற கால் என்பதால் காடகக் கால்.

"கணம்" கைதொழும் கால்
எம் கணாய் நின்ற கால்"

என்பதால் அப்பர் பெருமான் கணங்கள் எல்லாம் தொழும் பெருமையுடைத்து என்றும் எம்கணாய் நின்றது என்பதால் அடியார்களாகிய எமது கண்ணில் நின்றவர் (கண்ணால் காணமுடிந்தவர்) என்றும் எமக்கு பற்றுக் கோடாக நிற்கும் கால்கள்" என்றும் கூறுகிறார்.

அப்படிப்பட்ட கால்களை திருமாலால் காண இயலவில்லை. ஏன் மலம் நிறைந்து நின்றால் ஐயன் பொன்னடிகளைக் காண இயலாது. இது ஐய்யனுடைய, 'ஆறு' மார்க்கம். ஐய்யாறு ஐய்யனின் அடிகளான இவை எங்குள்ளன? இதோ ஐய்யாற்றில் உள்ளனவே என்கிறார் அப்பர் பெருமான்.

அரி மால் தேர அல்லன
அரி மால் உருவில் அகழ்ந்தும்
காண முடியா லிங்கபுராணதேவர்

9
தேற்றப்பட....

அப்பர் பெருமான் திருநல்லூர்ப் பதிகத்தில் கீழ்வருமாறு பாடுகிறார்.

"தேற்றப்படச் சென்று திருநல்லூர் அகத்தே சிவனிருந்தால்
தோற்றப்படச் சென்று கண்டு கொள்ளார் தொண்டர்
துன்மதியால்
ஆற்றில் கெடுத்துக் குளத்தினில் தேடிய ஆதரைப் போல்
காற்றில் கடுத்து உலகெல்லாம் திரிதர்வர் காண்பதற்கே"

இதற்கு திரு. கோபாலையர், தருமை ஆதீனப் பதிப்பில் பொழிப்புரை அளித்துள்ளார். அதில் கீழ்கண்டவாறு கூறுகிறார்.

"எல்லார் உள்ளத்தும் தெளிவு ஏற்பட சிவபெருமான் திருநல்லூரிலே நிலையாகி உறைந்திருந்தால் தங்களுக்கு அவன் காட்சி வழங்குமாறு அடியவர்கள் அவனைக் கண்டு கொண்டு நெஞ்சு நிறைவு பெறாதவராய், தம் பொருத்தமில்லாத புத்தியினால் ஆற்றில் இழந்த பொருளைக் குளத்தில் தேடும் அறிவிலிகள் போல் எம்பெருமானை தரிசிப்பதற்கு காற்றை விட வேகமாக உலகெல்லாம் சுற்றித் திரிதர்வர்" என்று கூறுகிறார்.

இப்பாடலுக்கு எழுதியுள்ள குறிப்புரையும் தெளிவு பெறுமாறு

இல்லை. இவற்றைத் தவறு எனக் கூறிவிட முடியாது. இருப்பினும் இதை சற்றுத் தேற்றமாக அறியலாமோ எனத் தோன்றுகிறது. இப்பாடல் திருநல்லூரில் பாடியது ஆதலின் இப்பாடல் நல்லூரின் சிறப்பைக் கூறுகிறது எனலாம்.

சிவபெருமான் திருநல்லூரில் தான் இருக்கிறார். அவரை இங்கேயே கண்டு தெளியலாம். அவரது தேற்றத்தைக் கண்டு தெளியலாம். அவரது தோற்றத்தைக் கண்டு உய்யலாம். அவர் இங்கே இருந்தாலும் கூட தம் துன்மதியால் தொண்டர்கள் அவர் இங்கே இருப்பதை அறியாது அவரைக் காண்பதற்கு காற்றுப்போல் வேகவேகமாக (நல்லூரை விட்டு) உலகெல்லாம் தேடித் திரிகின்றனர். ஆற்றில் இருப்பதைக் குளத்தில் தேடுகின்ற ஆதர் போல் என்கிறார் அப்பர்.

'ஆதன்' என்றால் 'குருடன்' என்ற பொருள் உண்டு. திவாகரம் ஆதன் என்ற சொல்லுக்கு குருடன் என்னும் பொருள் கூறுகிறது. ஒரு குருடன் தன் பொருளை ஆற்றில் தொலைத்து விடுகிறான். குளத்தை இதுவே ஆறு எனக் கருதி அதில் தேடுகிறான் அது போல என்கிறார். தொண்டரே ஆயினும் அவரது துன்மதி அவனது காணும் அறிவை மறைத்து விடுகிறது. அதனால் பெருமானை 'காண்பதற்கே' என்ற சொல்லை அப்பர் பயன்டுத்தியிருக்கிறார். எவ்வாறு குருடன், காணமுடியாதோ அவ்வாறு துன்மதியால் இவர்களாலும் காண முடியாது. அதுவும் ஆற்றில் தொலைத்ததை குளத்தில் குருடனால் காணமுடியுமா? அது போல என்கிறார்.

மீண்டும் பாடலின் தொடக்கத்தைக் காணலாம் சிவபெருமான் நல்லூரகத்தில் தான் இருக்கிறார். அவரைத் தம் அகத்தே தெளிவுடக் காணலாம். அகம் என்றால் வீடு, இருப்பிடம் என்று பொருள். தம் வீட்டிலேயே காணலாம் என்பது ஒரு பொருள். அகம் என்றால் தன் மனதுள்ளே என்று மற்றுமொரு பொருள். தம்

மனத்துள்ளேயே காணலாம். அவரது தோற்றத்தையும் காணலாம். இவர் இங்கிருக்க உலகெல்லாம் தேடுவது வீண். இங்கேயே கண்டுகொள் என்பது கருத்து. "தோற்றபடச் சென்று கண்டு கொள்ளார்" என்ற பாங்கைக் காணுங்கள். அப்பர் பிரானின் பாடல்களில் உள்ள ஒவ்வொரு சொல்லும் ஆழ்ந்த கருத்துடையவை. அவற்றை தெளிதல் இன்றியமையாதது.

தேற்றப்படச் சென்று திருநல்லூர் அகத்தே சிவனிருந்தால்
தோற்றப்படச் சென்று கண்டு கொள்ளார் தொண்டர் துன்மதியால்

10
மூவிலை வேல் கூத்தன்

சிவபெருமான் ஆடுகின்றார். சுழன்று ஆடுகிறார். தனது காலை விண்ணுயரத் தூக்கி ஆடுகிறார். கரங்களையெல்லாம் மட்டித்து ஆடுகிறார். அதைச் சித்தரிக்கிறது இப்பாடல். இவ்வாறு ஆடுகின்ற பெருமானை "மூ இலை வேல் கூத்தன்" என்கிறது பாடல். திரிசூலத்தை வேல் என்று கூறுவது மரபு. மூன்று கூர்முனைகள் உள்ளது ஆதலால் மூ இலை வேல் என்பர். அது அசுரத்தன்மையை அழிப்பது ஆதலின் கொல் நவிலும் மூஇலைவேல் என்றார். சிவபெருமான் ஆடும்போது அவர் கையில் இருக்கும் சூலமும் சுழன்று ஆடுகிறது. அவர் சுழலும்போது ஆகாயத்தில் விளங்கும் தாரகைகளாகிய நக்ஷத்திரங்களும் சுழல்கின்றன. அச்சூழ் நிலையிலே இனிமையாக வீசும் மந்தமாருதமும் அவரைச்சுற்றி சுழல்கிறது. அவரது கரதலங்கள் எல்லாம் சுழல்கின்றன. அவருக்கு ஒன்றா இரண்டா கரதலங்கள்! ஆயிரம் தோளகள் உடையவர் அல்லவா. ஆயிரம் தோள்களும் மட்டித்து ஆடுகின்றன. அவரது கால்களோ விண்ணுற வீசி ஆடுகின்றன. அதிர வீசி ஆடும் தாண்டவ மூர்த்தி அல்லவா ? ஊர்த்துவ தாண்டவம் புரிகிறார். மேகங்கள் எல்லாம் மின்னல் அலை வீசி எரி வீசிச் சுழல்கின்றன. அவர் தலையிலோ சடாபாரம் அவைகளும் சுழல ஆடுகிறார். இப்படிச்சுழன்று ஆடுகிறாரே ? எங்கே ஆடுகிறார் ?

மூவிலை நெடுவேல் கூத்தன்



சுழன்றாடும் கூத்தன்

தவம் செய்யும் ஒருவர் முன் ஆடுகிறார். தவம் செய்வது தான் யார்? முற்றும் துறந்த முனிவரா? இல்லை. ஒரு பெண் தவம் செய்கிறாள். வெண்ணிலாப்போன்ற நகையாள். நுண்ணிடையாள். பவழம் போன்ற இதழ் உடையாள். பொன் நிறத்தாள். இவ்வளவு எழிலான பெண் தவம் செய்கிறாள். மென்மையான அப்பெண் எதற்காக தவம் செய்கிறாள். தனக்குப் பிடித்த ஒரு கணவனை அடைய வேண்டி தவம் செய்கிறாள். அவளது எழில் மேனி வாட அவளது உணர்வுகள் எல்லாம் ஒடுங்கத் தவம் புரியும் அப்பெண் வேறு யாரும் அல்ல. உமை தான் அவ்வாறு தவம் கொண்டாள் காமாக்ஷியாக. அவள் காண சிவன் ஆடிய ஆடலைத்தான் இவ்வழகிய பாடல் கூறுகிறது. அப்பாடலைப் பாருங்கள்.

"மன்னு மலை அரையன் பொற்பாவை – வாள்நிலா
மின்னும் அணி முறுவல், செவ்வாய் உமை" என்னும்
அன்ன நடை அணங்கு, நுடங்கு இடை சேர்
பொன் உடம்பு வாட, புலன் ஐந்தும் நொந்து அகல,
தன்னுடைய கூழைச் சடாபாரம் தான் தரித்து, ஆங்கு,
அன்ன அருந்தவத்தின் ஊடு போய் ஆயிரம் தோள்
மன்னு கரதலங்கள் மட்டித்து, மாதிரங்கள்
மின்னி எரி வீச, மேல் எடுத்த சூழ் கழல் கால்
பொன்னுலகம் ஏழும் கடந்து உம்பர் மேல் சிலம்ப
மன்னு குல வரையும் மாருதமும் தாரகையும்
தன்னின் உடனே சுழல, சுழன்று ஆடும்
கொல் நவிலும் மூவிலை வேல் கூத்தன்,
பொடி ஆடி, அன்னவன் தன்
பொன் அகலம் சென்று அங்கு அணைந்திலளே"
இந்தப் பாடல்

"அருமான வாண்முகத்தாள் அமர்ந்து காண
அமரர் கணம் முடிவணங்க ஆடுகின்ற பெருமான்"

என்ற அப்பர் பெருமானின் வரிகளை நினைவுக்கு கொண்டு வருவன அல்லவா? இவ்வழகிய பாடலை யார் பாடியிருக்க முடியும். நல்ல பழுத்த சிவன் அடியார் தானே பாடியிருக்க முடியும்! இதைப் பாடியவர் தான் யார் எனில் சிவன் அடியார் அல்ல. நல்ல பரம வைணவர் ஒருவர் தான் இந்த பாடலை பாடி இருக்கிறார். அதுவும் ஆழ்வார் என நாம் வணங்கும் ஒருவர் இதைப் பாடி இருக்கிறார்.

இப்பாடலைப் பாடியவர் திருமங்கை ஆழ்வார் தான். பெரிய திருமடல் என்ற தமது பாடலில் இவ்வாறு சிலபெருமான் ஆடிய ஆடலை பாடியுள்ளார். பெரிய திருமடல் என்னும் பாடல் தேன் சொட்டச் சொட்ட விளங்கும் தமிழ்ப் பாடல்களிலே ஒன்று. அதில் வரும் பாடல்கள் நம்மை பரவசம் ஆக்குவிக்கும்.

11
பெரும்பித்தன்

"பித்தா பிறைசூடீ" என்று சுந்தரமூர்த்தி பரமனைப் பாடினார் அல்லவா. பித்தனாகிய பரமனின் ஈடிலா அடியார்கள் தாமும் பெரும்பித்தராய்த்தாம் திகழ்வர். பரமனை அன்றி வேறொன்றும் அறியார். ஆதலின் பல இடங்களில் அடியார்களை பித்தராய் திரிவர் என நம் பதிகங்கள் கூறும். அப்பர் பெருமான்

"குணங்கள் பேசிக் கூடிப் பாடித்தொண்டர்கள்
பிணங்கித் தம்மில் பித்தரைப் போல் பிதற்றுவர்!"

என்று தொண்டர்களின் நிலையைத் திருவாதிரைப் பதிகத்தில் கூறுகிறார். இந்நிலை பித்தனாகிய சிவபெருமானின் அடியார்கள் மட்டும் அடைந்த நிலை அல்ல. திருமால் அடியார்களாகிய ஆழ்வார்கள் நிலையும் அஃதே.

குலசேகர ஆழ்வார் தமது பாசுரத்தில் நாரணா நான் உன் பித்தனாய் திரிகிறேன் என்கிறார். இம்மண்டலத்தே வாழும் மக்கள் உண்டியையும், உடையையும் தேடி ஓடுபவர்கள் தாம். அவரோடு நான் கூடேன். காமனின் சிலைக்கு என்னை ஆட்செய்யும் மகளிரோடு கூடுவேனல்லன். திருமால் அடியாரல்லாதவருடன் கூடேன். உம்பர் வாழ்வை நாள் பெரிதாகக் கருதமாட்டேன் என்று கூறுவார். தம்மைப் பற்றி அவர் கூறுவதைத் தான் காணுங்கள்.

'பேய்முலை உண்ட வாயன் தன்
உன்மத்தன் காண்மினே'

'தாமரைப் பேதை மாமணவாளன்
தன் பித்தனே'

'அத்தனே அரங்கா என்றழைக்கின்றேன்
பித்தனாய் ஒழிந்தேன் எம்பிரானுக்கே'

என்றெல்லாம் கூறும் அவர் "எம்பிரானுக்கு நான் ஏழ் பிறப்பும் பித்தனே" என்கிறார். பித்தன், பேயன், உன்மத்தன் என்றெல்லாம் தம்மை கூறிக் கொள்ளும் இவ்வாழ்வாருக்கு யாரைக் காணிலும் அவர்கள் பித்தராகவே தென்படுகின்றனர்.

"பேயரே எனக்கு யாவரும் யானுமோர்
பேயனே எவர்க்கும் இது பேசி என்
ஆயனே அரங்கா என்றழைக்கின்றேன்
பேயனாய் ஒழிந்தேன் எம்பிரானுக்கே"

என்று தம்மைப் பேயன் என்றழைத்துக் கொள்கிறார். இவரது மனநிலை எவ்வாறு இருந்தது என அவரே கடைக்காப்பில் கூறுகின்றார். அரங்கருக்குப் பெரும்பித்தனாய் குலசேகரன் சொன்னவை இவை என

"அங்கை ஆழி அரங்கன் அடியிணை
தங்கு சிந்தைக் தனிப் பெரும்பித்தனாய்க்
கொங்கர் கோன் குலசேகரன் சொன்ன சொல்
இங்கு வல்லவர்க்கு ஏதம் ஒன்றில்லையே"

என்று கூறுகிறார். இக்கொங்கர் கோமான் இவ்வாறு கூறி வருபவர் மற்றொரு இடத்தில் கூறுவதைக் காணுங்கள். திருமாலின் அடியார்கள் பித்தராய் திரிவரேனும் அவர் உள்ளத்தில் பித்தரல்ல அவ்வாறில்லாத மற்றவர் தான் பித்தர் என்கிறார்.

'அத்தன் அச்சன் அரங்கனுக்கு
அடியார்களாகி அவனுக்கே
பித்தராமவர் பித்தரல்லர்கள்
மற்றையார் முற்றும் பித்தரே'

என்று கூறுகிறார் அது தான் உண்மைப் பக்தியின் அடையாளம்.

ஏதோ பித்தராம் சிவபெருமானின் பக்தர் தாம் பித்தர் போல் இருப்பர் என்று எண்ண வேண்டாம். திருமால் அடியாரும் அவ்வாறே தான் இருந்தனர் என இதனால் தெளிவு பெறலாம்.

அந்த நிலையைத் தான் அப்பர்
'விம்மா வெருவா விழியாத் தெழியா வெருட்டுவார்
தம் மாண்பிலராய் தரியார் தலையால் முட்டுவர்
எம்மானீசன் எந்தை என்னப்பன் என்பார்கட்கு
அம்மான் ஆரூர் ஆதிரை நாளால் அது வண்ணம்'
என்று பாடுகிறார்.

சைவ சமயப் பிரிவுகளில் பாசுபத சைவம் என்ற ஒரு பிரிவு உண்டு. இப்பாசுபதத்தில் பல பிரிவுகள் உண்டு. இதில் ஒரு பிரிவை லகுளீசர் என்பவர் இந்தியாவின் வடபால் நிலைநிறுத்தினார். அவர் பாசுபத சூத்ரங்கள் என்ற நூலை எழுதியிருக்கிறார். இந்நூலில் பாசுபதத் துறவு மேற்கொண்டோர் எப்படி இருக்க வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. பொதுமக்கள் உள்ள பகுதியில் அவர்கள் பித்துப் பிடித்தவர் போல நடித்தல் வேண்டும்.

சம்பந்தமற்ற பொருளற்ற சொற்களை உளறவேண்டும். மக்கள் இவர்களை தூஷித்தாலும், புகழ்ந்தாலும் இரண்டினுக்கும் அப்பாற்பட்டு பரமனையே நினைத்து வாழ வேண்டும். என்றெல்லாம் நியதிகள் கூறப்பட்டுள்ளன. அதை சரிவர அறியாதவர் பித்தர்களுடைய சமயம் அருவருக்கத்தக்க சமயம் என்று எழுதுவர். ஆனால் உண்மை அது அல்ல.

12
சதி

சதி என்ற ஒரு சொல் இருக்கிறது. 'என்னய்யா சதி பண்றே?' என்றால் முரண்டு பண்ணுகிறே என்று பொருள். அவன் சதி செஞ்சிட்டான் என்றால் வஞ்சித்துவிட்டான் என்று பொருள். சதி என்ற சொல்லுக்கு இதுபோல பல பொருள்கள் உண்டு. கற்புடைய மனைவிக்கு சதி என்ற பெயர். தன் கணவன் இறந்ததும் அவன் பிரிவு தாங்காது அவனது ஈமத்தீயில் பாய்ந்து உடன் கட்டை ஏறும் பெண்டிருக்கும் சதி என்று கூறுவர். உமையன்னையையும் சதி என்று கூறி வணங்குகிறோம். சதி என்றால் வட்டம் என்று கூட ஒரு பொருள் உண்டு.

இரண்டாவது இராஜராஜ சோழன் கும்பகோணத்துக்கருகில் தாராசுரத்தில் ஒரு கோயில் கட்டியிருக்கிறான். அங்கு உறைகின்ற பரமனைத் தலைவனாகக் கொண்டு அந்த இராஜராஜனின் அவையில் இருந்த புலவன் ஒட்டக்கூத்தன், அதில் கடவுள் வாழ்த்துச் செய்யுள் ஒன்று இயற்றியிருக்கிறான்.

'சதகோடி விததாள சதிபாய முகபாகை குதிபாய் கடா
மதகோடி உலகேழும் மணம் நாற வரும் யானை வலி பாடுவாம்'

என்றுள்ளது அப்பாட்டு. இப்பாட்டில் 'சதிபாய' என்ற சொல் வருகிறது. சதிபாய என்றால் இங்கு என்ன அர்த்தம். யானை

சதகோடி விததாள சதிபாய முகபாய குதிபாய் கடா
மதகோடி உலகேழும் மணம் நாற வரும் யானை வலிபாடுவாம்

நடம் சதிவழி வருவதோர் சதிரே
சதிவழி வருவதோர் சதிருடையீர்

வலிபாடுவோம் என்பதால் யானை முகத்தோன் ஆன பிள்ளையாரை வணங்குவோம் என்பது பொருள். தக்கயாகப் பரணி ஒரு நாட்டிய நாடகம். அதனால் இங்கு கணபதி நாட்டியம் ஆடிக் கொண்டு வருகிறார். சதகோடி வித தாளசதிபாய நர்த்தனம் ஆடிக் கொண்டு வருகிறார்.

நாட்டியத்தில் ஆடலுக்கு ஏற்ப கூறும் தாள ஒத்தை ஜதி என்பார்கள் இதை சொல்லுக்கட்டு என்று கூட சொல்வார்கள். ஜதிஸ்வரம், ஸ்வர ஜதி என்றெல்லாம் நாட்டியக் கலைஞர் கூறுவர்.

அதற்கேற்ப ஆடுவார்கள். 'தா–தை–தொம், தத்திக்கின்னத்தோம் ததிங்கினதோம் தறிகிடதோம் தறிகிடதோம் தா' என்று சொல்லி ஆடுகிறார்கள் அல்லவா. அது தான் ஜதி என்பது. அதைத்தான் 'சதி' என்று தமிழில் சொல்வது. சதி பலவகைத் தாளங்களில் வரும். முன் சொன்ன பாடலில் ஆடிவரும் நிருத்த கணபதி ஒன்றல்ல, இரண்டல்ல நூறுகோடி விதமான தாளஜதி வேகமாக ஒலிக்க நர்த்தனம் புரிந்து வருகிறார் என "சத கோடி வித தாள சதிபாய வரும் யானை" என ஒட்டக்கூத்தன் பாடுகிறான்.

ஆதலின் சதி என்றால் நாட்டிய தாள சொல்லுக் கட்டு என்று பொருள். இதையே இன்னும் தெளிவாக ஞானசம்பந்தர்

'விதிவழி மறையவர் மிழலை உளீர் நடம்
சதி வழி வருவதோர் சதிரே
சதி வழி வருவதோர் சதிருடையீர் உமை
அதிகுணர் புகழ்வதும் அழகே'

என்று பாடுகிறார் சம்பந்தர் "நடம் சதிவழி வருவதோர் சதிரே" என்கிறார். இது போன்ற பல நாட்டிய இசைச் சொற்களும் தமிழில் உண்டு.

13
வடிவம்

'வடிவம்' என்ற சொல் நாம் எல்லோரும் அறிந்த ஒன்று தான். 'வடிவு', 'வடிவம்' என்றாலே "உருவம்" "அழகு" என்று சொல்வது மரபு. கடைந்தெடுத்த சிற்பம் போல இருக்கிறாள் என்று சொல்லுவதும் உண்டு. வடிவம் என்பது சிற்ப உருவத்தைக் குறிக்கும். சிற்பங்களை "படிமம்" என்று கூறுவது வழக்கம். 'படிமம்' என்றாலும் வடிவம் என்றாலும் ஒன்றுதான். இராஜராஜ சோழன் பல கல்வெட்டுகளில் தஞ்சாவூர் பெரிய கோயிலுக்கு உத்ஸவ விக்ரஹங்கள் செய்து கொடுத்ததைக் கூறுகிறான். 'செப்புப் படிமம்' என்று அவற்றை கூறுகிறான். நம்மாழ்வார் தமது திருவாய்மொழியில் வடிவு என்ற சொல்லை மிக அழகான பொருளில் பயன்படுத்தியிருக்கிறார்.

'கொடிமதில் தென்குருகூர்ச் சடகோபன்
வடிவமை ஆயிரத்து இப்பத்தினால் சன்மம்
முடிவெய்தி'

என்று பாடுகிறார். சடகோபன், வடிவாக அமைத்த ஆயிரம் என்கிறார். இங்கு அவர் தாம் பாடிய ஆயிரம் பாடல்களைக் குறிப்பதால் 'வடிவு' என்பது பாடல் என்ற பொருளைக் குறிக்கும் என அறிகிறோம். "வடிவு அமை ஆயிரம்" என்பதால் பாடல்களாலேயே தெய்வ வடிவை, உருவமாக அமைத்துள்ளார் .

ஹிந்து சமயத்தில் உருவ வழிபாடு இருவகையானது. 'ஸ்தூல ரூபம்', 'சூக்ம ரூபம்' என்பது. கல்லு, மரம், செம்பு, தங்கம் ஆகியவற்றால் தெய்வவடிவம் செய்கிறோமே, நம் கண்களால் பார்க்க முடிகிறதே அதை தூல பிம்பம் என்பார்கள். இதையே 'ஸ்தூலமூர்த்தி' என்பார்கள்.

மற்றொன்று மனதினாலேயே தெய்வ உருவை தியானம் செய்து வணங்குதல். இந்த மந்திரமூர்த்தியை ஆவஹித்து தியானித்தல் தான் வழிபாடு, பூஜை என்பது புறக்கண்களுக்கு தெரியும் சிலை வடிவம், தெய்வத்தை நினைவூட்டும் குறிதான். ஆனால் தெய்வத்தன்மையையே நமக்கு மனத்தே அளிப்பவை திவ்யமான பாடல்கள் தாம், மந்திரங்கள் தாம். ஆதலின் பாடல்களாலே துதித்து வணங்குவது சிறப்புடையது என்பர். அதனால் தான் நம்மாழ்வார் பாடல்களாலேயே பெருமானின் வடிவத்தை இப்பாசுரங்களில் அமைத்துள்ளேன். அது மிகவும் எழிலானது என்று இச்சொல்லாலே குறிக்கிறார்.

இதை நமது திருநாவுக்கரசு சுவாமிகள் தமது தேவாரத்தில் வெளிப்படையாகவே தெளிவாக்கியுள்ளார். பூக்களாலும் படிமங்கள் செய்யலாம். தங்கத்தாலும் படிமங்கள் செய்யலாம். ஆயினும் நம் திருவாரூர்ப் பெருமானுக்குத் தமிழ் மாலைகளால் படிமம் செய்து வணங்கு நெஞ்சமே' என்கிறார்.

'பூம் படிமக்கலம் பொன் படிமக்கலம் என்றவற்றில்
ஆம் படிமக்கலம் ஆகிலும் ஆரூர் இனிதமர்ந்தார்
தாம் படிமக்கலம் வேண்டுவரேல் தமிழ் மாலைகளால்
நாம் படிமக்கலம் செய்து தொழுதும் மட நெஞ்சமே'

என்று பாடுகிறார். தமிழ் மாலைகளாலேயே படிமம் செய்து தொழுவோம் என்பதிலிருந்து தெய்வ வடிவைப் பாடல்களாலேயே

செய்து வணங்குதல் சிறப்புடையது என்கிறார். இவற்றிலிருந்து "வடிவு" என்ற சொல் தெய்வீகப் பாடல் என்ற பொருளிலும் உள்ளது என அறிகிறோம்.

பூம்படிமக்கலம், பொன்படிமக்கலம் என்று இவற்றால் ஆனது சிவபெருமானின் வடிவம். இதன் வாயிலாக வரிவடிவமும் ஒலி வடிவமும் இரண்டும் சிவபெருமானின் உருவமே என அப்பர் கூறுகிறார்.



14

ஓலி

சாலையில் காரில் போய்க் கொண்டிருக்கிறோம். எதிரே லாரி ஓடிக் கொண்டிருக்கிறது அதன் பின்புறம் "ஓலி எழுப்புக" என்று எழுதியுள்ளதைப் பார்க்கிறோம். இங்கே 'ஓலி' என்றால் என்ன பொருள்? சத்தம் போடு என்றா அர்த்தம்? நான் முந்தப் போகிறேன் 'கொஞ்சம் ஒதுங்கிப் போ' என்று அறிவிப்பதற்காக ஒரு 'ஹார்ன்' கொடு என்று அர்த்தம். நம் கிராமப் புறங்களிலே 'ஓலி எழுப்பு' என்று சொல்லமாட்டார்கள். நல்ல தமிழிலே 'ஒரு குரல் கொடு' என்று சொல்வார்கள்.

ஒரு இனம் தெரியாத, பொருள் விளங்காத 'கசாமுசா' என்று எழுப்பப்படும் சத்தத்துக்கு 'ஓசை' என்றும், பொருள் விளங்கும் வகையில் வெளிப்படுத்தப்படும் சத்தத்துக்கு 'ஓலி' என்றும் பெயர். அப்பர் பெருமான் "ஓசை ஓலியெல்லாம் நீயே ஆனாய்" என்று சிவபெருமானைப் பாடுகிறார். ஓசை வேறு, ஓலி வேறு என்று இதனால் அறிகிறோம். ஓலித்தல் என்றால் பொருள் தெரியும் வகையில் இசைத்தல் என்பதாகும்.

வைணவப் பெரியார்களில் திருமங்கை ஆழ்வார் "ஓலி" என்ற சொல்லை ஒரு அரிய பொருளில் பயன்படுத்துகிறார். திருமங்கை ஆழ்வாருக்கு கலியன் என்று பெயர். அவர் பாடலைப் பாருங்கள்.

'கலியன் வாய் ஒலி செய்த பனுவல் கொண்டு இவைபாடும்'

என்கிறார். இங்கு "வாய் ஒலி செய்த" என்பதால் "வாயால் மொழிந்த பாடல்" என்கிறார்.

அதனால் தான் நம்மாழ்வாரின் பாடலுக்கு "திருவாய்மொழி" என்று பெயர். பல பாசுரங்களில் திருமங்கை ஆழ்வார் தம் பாடலையே "ஒலி" என்று கூறிவிடுகிறார்.

"கல் நவிலும் திண்தோள் கலியன் "ஒலி" வல்லார் மண் ஆள்வாரே"

என்று பாடுகிறார். இங்கு பாடல் என்ற பொருளிலேயே "ஒலி" என்ற சொல்லைப் பயன்படுத்துகிறார். ஆதலின் ஒலி என்றாலே பாடல் என்ற பொருள் பெறுகிறோம். தமது பாடல்கள் பத்தையுமே "கலியன் ஒலி மாலை" என்றே சொல்லி முடிக்கிறார். ஒரு இடத்தில் இல்லை, பல இடங்களில் ஒலி மாலை என்றே திருமங்கை பாடுவதால் ஒலி என்றால் பாடல் என்பதும் பொருள் என்பதில் ஐயமில்லை.

15

உடன்பாடல்

"உடன்பாடு" என்றால் ஒத்துப்போகிறேன், உன் கருதுதோடு நான் இசைகிறேன் என்பது பொருள். ஒருவரோடு ஒருவரோ, பலரோ, இசைந்து போதலை உடன்பாடு என்கிறோம். இதிலிருந்து வந்தது தான் 'உடன்பாடு' என்ற சொல்லும். இது எனக்கு உடன்பாடு தான் என்று சொல்கிறோம். உடன்படிக்கை என்றாலும் இதுதான். இருவர்களுக்கு இடையே ஏற்படும் ஒப்பந்தம்.

உடன்பாடு என்ற சொல்லுக்கு வேறு ஒரு பொருளும் உண்டு. ஒரு கல்வெட்டில் "உடன் பாடுவான்" என்ற சொல் காணப்படுகிறது. ஒருவரோடு பிறர் இணைந்து பாடுவதை "உடன்பாடு" என்ற சொல் குறிக்கிறது. முன்பெல்லாம் பெருமாள் கோயில்களில் பலர் உட்கார்ந்து கொண்டு சேர்ந்து நாலாயிர திவ்யபிரபந்தங்களைப் பாடுவார்கள். இப்பொழுது இந்த மரபு கொஞ்சம் குறைந்து போச்சு. இவ்வாறு சேர்ந்து பாடுவதை வைணவ மரபில் "கோஷ்டி சொல்கிறது" என்று சொல்வார்கள். இவ்வாறு குழுக்களாக இணைந்து பாடுவது நம்மாழ்வார் காலத்துக்கும் முன்பிருந்தே வழக்கில் இருந்திருக்கிறது. இதை அவர் தமது திருவாய் மொழியில்

திருகூர்ச்சடகோபன் ஆயிரம் முடிப்பால் சொன்ன படிக்கேழ் இல்லாப் பெருமான் - திருமால்

"குருகூர்ச்
சடகோபன் தெரிந்துரைத்த குழாங்கொள் ஆயிரத்துள் இவை பத்தும்
உடன் பாடி குழாங்களாய் அடியீர் கூடி நின்று ஆடுமினே"

என்று பாடுகிறார். இங்கு உடன் பாடல் என்றால் சேர்ந்து பாடல் என்று பொருள். "குழாங்கொள்" ஆயிரம் என்றால் என்ன பொருள்? குழாம் என்பது குழு அல்லது தொகுத்தல் அல்லது தொடுத்தல் என்று பொருள். ஆதலின் குழாம் என்றால் "தொடை" பாடல் என்றும் பொருள்படும். இவ்வடியில் "குழாம்" என்றால் "பாடல்" என்றே பொருள்.

16

தீர்த்தம்

தூய்மையான புண்ணியமான நீர் நிலையை 'தீர்த்தம்' என்கிறோம். இது ஒரு அருவியாகவோ, கடலாகவோ, குளமாகவோ அல்லது கிணறாகவோ இருக்கலாம். இதை தீர்த்தக்கரை என்கிறோம். மகாமகத்தீர்த்தம் என்கிறோம். ஆழித்தீர்த்தம் என்கிறோம். எந்தப் புண்ணிய நீரில் மூழ்கி எழுந்தால் நமது பாவங்கள் தீர்கின்றனவோ, தூய்மையானவராக ஆக்குகின்றதோ அதை "தீர்த்தம்" என்கிறோம். உடலையும், உள்ளத்தையும் தூய்மையாக்குவது தீர்த்தம். சமண சமயத்தில் ஆருகத நிலையை எய்தி கடவுள்தன்மை பெற்ற 24 பெரியார்கள் உண்டு. ஆதிநாதர் என்னும் விருஷபதேவர் முதல் வர்த்தமான மகாவீரர் வரை 24 பெரியார்களை வணங்குகிறோம். அவர்களை தீர்த்தங்கரர் என்பர். அதாவது தங்களை மட்டுமல்ல அனைத்து மக்களையும் தூய்மையாக்கும் பெரியார்கள் ஆதலின் அவர்களை தீர்த்தங்கரர் என்கிறோம்.

நமது பெரியோர்கள் எல்லாம் அகத்தூய்மையையும், புறத் தூய்மையையும் இன்றியமையாதவையாகக் கருதியிருக்கிறார்கள். புறத்தூய்மை என்பது உள்ளத்தின் உள்ளே தூய்மையை உணர்வதற்கு நம்மை ஆளாக்குவது. அதன் வாயிலாய் உள்ளத்தூய்மையைப் பெற்று தெய்வத்தன்மையை அடைய முடியும்.

இவ்விரண்டினுள்ளும் உள்ளத்தூய்மையே தலையாயது. இதை சைவப் பெரியாரான அப்பர் பெருமான் தெளிவாக கூறுகிறார்.

"நாம் கோடி தீர்த்தங்களுக்குச் சென்று குளித்து எழுந்தாலும், சிவபெருமானிடம் உள்ளன்பு இல்லை என்றால் அதனால் எவ்விதப் பலனும் இல்லை. நல்ல தூய்மையான ஆற்று நீரை ஒரு ஓட்டைக்குடத்தில் ஊற்றி மூடிவைத்த மூடன் போல ஆகும் அது என்கிறார்.

"கோடி தீர்த்தம் கலந்து குளித்து அவை
ஆடினாலும் அரனுக்கு அன்பில்லையேல்
ஓடு நீரினை ஓட்டைக்குடத்தட்டி
மூடி வைத்திட்ட மூர்க்கனோடு ஒக்குமே"
என்கிறார் அப்பர்.

இது தீர்த்தம் என்பதின் தூய்மையை நமக்கு தெளிவாக்குகிறது. உள்ளத் தூய்மையை நமக்கு கொடுப்பவை தேவாரம், திருவாசகம், திவ்யபிரபந்தம் போன்ற பாடல்கள். அவற்றை லயித்து பாடும் போதும், இசைக்கும் போதும் நமக்கு மனத்தகத்தே உள்ள அழுக்காறுக்ள் மறைந்து தெய்வ எண்ணங்களே மேலோங்கி தூய நிலையில் நிலைக்க உதவுகின்றன. பாசுரங்கள், மந்திரங்கள், பிரபந்தங்க்ள் எல்லாம் ஒருவகையில் மனத்தூய்மையைத் தோற்றுவிக்கும் தீர்த்தங்களே. ஆதலின் தெய்வப் பாசுரங்களைத் தீர்த்தங்கள் என்பது பொருந்தும்.

அவ்வாறு தான் நம்மாழ்வார் தமது பாடல்களை "தீர்த்தங்கள்" என்றே கூறுகிறார். இக்கருத்தை எவ்வளவு அழகாக இந்தப் பாடலில் எதுத்துரைக்கிறார் பாருங்கள்.

"தீர்த்தனுக்கற்றபின் மற்றோர் சரணில்லை
என்றெண்ணித் தீர்த்தனுக்கே

தீர்த்த மனத்தனனாகிச் செங்குருகூர்ச்
    சடகோபன் சொன்ன
தீர்த்தங்களாயிரத்துள் இவை பத்தும்
    வல்லார்களை தேவர் வைகல்
தீர்த்தங்களே என்று பூசித்து நல்கி
    உரைப்பர் தம் தேவியர்க்கே"

இப்பாடலில் சடகோபன் சொன்ன தீர்த்தங்கள் ஆயிரத்துள் என்பதால் அச்சொல்லுக்கு "தூய பாடல்கள்" என்ற பொருளை எடுத்துரைக்கிறார் ஆழ்வார்.



17
முடி

நமக்கெல்லாம் தெரிந்தது தான் "முடி" என்ற சொல் 'முடி' என்றால் தலையில் உள்ளதை 'கேசம்' 'முடி' என்கிறோம். முடி அலங்காரம், முடி திருத்தம் என்றெல்லாம் கூறுகிறோம். இந்தச் சொல்லுக்கு பல பொருள்கள் உண்டு. "முடி சூடினான்" என்ற சொல்லும் நமக்குத் தெரியும். "உரிமையில் சிறந்த மணிமுடி சூடி" என்று பல கல்வெட்டுகளில் வரும். இங்கு கிரீடம் என்ற அர்த்தத்தில் "முடி" என்ற சொல் உபயோகப்பட்டுள்ளது. "முடிவு", "இறுதி" என்னும் பொருள் உண்டு. முடி என்ற சொல் முடித்தல், இறுதியாக்குதல் என்ற பொருளிலும் வரும் 'பேசினது போதும் முடிச்சுடப்பா' என்கிறோம். இறுதியாக்கிவிடு என்று அர்த்தம்.

இது போல இச்சொல்லுக்கு பல அர்த்தங்கள் உண்டு. 'இணைத்தல்', 'தொகுத்தல்' என்ற பொருளிலும் 'முடி' என்ற சொல் பயன்படுகிறது. "முடிச்சு போடுப்பா", "முணுமுடிச்சு" என்று சொல்கிறோம். இங்கே "இணைத்தல்" "கட்டுதல்" என்ற அர்த்தத்தைப் பெறுகிறோம். இந்த எளிய சொல்லைக் கொண்டே ஒரு பேருண்மையை விளக்குகிறார், வைணவ ஆழ்வார்களில் சிறந்த நம்மாழ்வார். அவர் பாடிய "திருவாய்மொழியில்" ஒரு பாடலில் 'முடிப்பு' என்ற சொல்லை சொல்லாக்கமாகப் பயன்படுத்தியுள்ளார். அந்தப் பாடலைப் பாருங்கள்.

'அடிக்கீழ் அமர்ந்து புகுந்தடியீர் வாழ்மின்
என்றென்று அருள் கொடுக்கும்
படிக்கேழில்லாப் பெருமானைப் பழனக்
குருகூர்ச் சடகோபன்
முடிப்பால் சொன்ன ஆயிரத்து திருவேங்கடத்துக்கு
இவை பத்தும்
பிடித்தார் பிடித்தார் வீற்றிருந்து பெரிய வானுள்
நிலாவுவரே'

இப்பாடலில் குருகூர்ச்சடகோபன் "முடிப்பால் சொன்ன ஆயிரம்" என முடிப்பு என்ற சொல்லைப் பார்க்கிறோம். இங்கே 'முடிப்பு' என்றால் 'பாடல்' என்று அர்த்தம். பாடல் பாடுவதை 'யாத்தல்' என்பர். 'யாப்பு அதிகாரம்' என்றே ஒரு அதிகாரம் இலக்கணத்தில் உண்டு. "யாப்பு" என்றாலும் 'முடிப்பு' என்றாலும் ஒரே அர்த்தம் தான்.

'முடிப்பு' என்ற தமிழ்ச் சொல்லுக்கு நேர் வடமொழிச் சொல் "பந்தம்" என்பது. விசேஷமான பாடலை பிரபந்தம் என்று கூறுவர். தெய்வத்தின் மீது பாடப் பெறுவது திவ்யபிரபந்தம்.

நம்மாழ்வார் போன்ற வைணவ ஆழ்வார்கள் பாடிய பாசுரங்களை திவ்யபிரபந்தம் என்று கூறுகிறோம். இதிலிருந்து 'முடிப்பு' என்றால் 'பாடல்' என்றும் 'பிரபந்தம்' என்றும் பொருள் அறிகிறோம்.

இதே போல் 'பாடல்' என்ற பொருளில் மற்றொரு அரிய சொல்லையும் நம்மாழ்வார் பயன்படுத்துகிறார். அந்தப் பாடலைப் பாருங்கள்.

'கட்கு அரிய பிரமன், சிவன், இந்திரன் என்று இவர்க்கும்
கட்கரிய கண்ணனை குருகூர்ச் சடகோபன் சொன்ன
உட்குடை ஆயிரத்துள் இவை பத்தும்

உட்கிடை வானவரோடு உடனாய் என்றும் மாயரே'

இங்கு உட்குடை என்றால் 'உட்கருத்து' 'தத்துவம்' என்ற பொருளில் "பாடல்" என்பது பொருள். இதுபோல் ஓன் தமிழ் என்றாலே பாடல் என்ற பொருளில் நம்மாழ்வார் – குருகூர்ச் சடகோபன் சொல் ஆர் தமிழ் ஆயிரத்துள்" என்கிறார். இங்கு தமிழ் என்றால் பாடல் என்றே பொருள். இதைத் தெளிவுபடுத்துவார் போல் மற்றொரு பாடலில் "சடகோபன் சொல் தமிழ் ஆயிரத்துள்" என்கிறார். ஆதலின் தமிழ் என்றாலே பாடல் எனப் பொருள் பெறுகிறோம்.

இதுபோல் ஆழ்வார் பாடல் என்ற பொருளில் வெறி, பெரும்புகழ், குற்றேவல், நாமம், ஆணை, கட்டெழில், தோற்றம், சொல்தொடை, சந்தம் என்ற பல சொற்களைப் பயன்படுத்தியுள்ளதைக் காண்கிறோம்.

18

ஆனத்து

அப்பர் பெருமானின் தேவாரப்பாடல் ஒன்றில்

"ஆனத்து முன் எழுத்தாய் நின்றார் போலும்"
அணி ஆருர் மூலட்டானனாரே"

என " ஆனத்து" என்று ஒரு சொல்லை பயன்படுத்துகிறார். "ஆனத்து என்றால் என்ன? *சிவபெருமானை* – "பெருமானே நீ ஆனத்து முன் எழுத்தாய் நின்றாய்" என்கிறார்.

எழுத்து என்ற சொல்லுக்கு இரண்டு பொருள்கள் உள்ளன. "எழுதப்படுவதாலும் எழுப்பப்படுவதாலும் எழுத்து" என உரையாசிரியர் கூறுகின்றனர். எழுதப்படுவது என்றால் வரிவடிவைக் குறிக்கும். ஓலையில் எழுதுகிறோம்; கல்லில் எழுதுகிறோம்; செப்பேடுகளில் எழுதுகிறோம்; குறிப்பிட்ட ஒலிகளுக்கு குறிப்பிட்ட வரிவடிவை அமைத்திருக்கிறோம். 'அ' என்ற எழுத்து எப்படி இருக்க வேண்டும். "க" எப்படி இருக்க வேண்டும் என்பதெல்லாம் நமக்குத் தெரியும். இவற்றை வரிவடிவங்கள் என்கிறோம். வரிவடிமாக இல்லாமல் வெறும் வாய் மொழியாகவே ஒலிக்கப்படுவதும் எழுத்துதான். அந்தந்த ஒலிகளுக்கு ஏற்ப ஒலிப்பது. 'சிவன்' என்ற சொல்லைக் கூறுகிறோம். இதில் சி. வ. ன் என மூன்று ஒலிகளை எழுப்பி

ஒரு சொல் உருவாகிறது. இதை எழுப்பப்படும் எழுத்து என்பர். இவ்விரு வடிவையும் அப்பர் "எழுத்தாகி நின்றார் போலும்" என்பதால் இங்கு குறிக்கிறார்.

அப்படி என்றால் ஆனத்து என்கிறாரே அதற்கு என்ன பொருள்? 'அ' என்ற சொல்லும் 'னத்து' என்ற சொல்லும் இணைந்தது 'ஆனத்து' என்னும் சொல். 'ஆ' உயிர் எழுத்தில் நெடில் எனப் புரிகிறது. "னத்து" என்றால் என்ன? 'ன' என்ற எழுத்தைத்தான் "னத்து" என்ற சொல்லால் குறிப்பர். "த்து" என்பதை சாரியை என்பர் தமிழறிந்தோர். ஆதலின் ஆனத்து என்றால் அகாரம் முதல் னகார்ம் வரை உள்ள அனைத்து எழுத்துகளும் என்பது பொருள். அப்பர் "ஆனத்து எழுத்தாய் நீ நிற்கிறாய்" என சிவபெருமானைக் குறிக்கிறார். அதாவது உயிர் எழுத்து முதல் மெய்யெழுத்து இறுதியாக உள்ள எழுத்துகள் முழுவதும் சிவபெருமானின் வடிவே என்கிறார். நமது மரபில் எழுத்துக்களும், சொறகளும், மொழியும் தெய்வ வடிவமே என்பதாம். அதனால் தான் தேவாரப் பதிகங்களில் "சொல்லானாய், பொருளானாய்" என்றும் "தென்தமிழும் வடமொழியும் நீயே ஆனாய்" என்றும் "எண்ணாகி எழுத்தாகி" என்றும் பரமனைப் பெரியோர்கள் பாடுகின்றனர். ஆரியன், கண்டாய், தமிழன் கண்டாய் என்கிறோம். இவை அனைத்தும் தெய்வ வடிவங்களே என்னும் மகத்தான தத்துவத்தையே நமக்கு கூறுகின்றன. ஆதலின் "ஆனத்து" என்ற ஒரு சொல் நமக்கு தமிழ் மரபையே எடுத்தியம்பும் சொல்லாக மலர்கிறதைக் காண்கிறோம். அதனால் தான் சொல் என்பது மிகவும் சக்தி வாய்ந்த கருவி என ஆன்றோர் கூறுவர்.

19
நந்திக் கலம்பகம்

செய்யுள் இயற்றுவதில் மிகவும் சிறந்து ஓங்கிய மொழி தமிழ்மொழி. நயம்பட எத்தனையோ வகையில் செய்யுள் இயற்றும் மரபு இதில் இருப்பதிலிருந்தே தமிழ்மக்கள் பண்பாட்டில் மிக உயர்ந்தவர்கள் எனக் கூறலாம். பல்வேறு யாப்புகளில் உள்ள செய்யுட்களைக் கோத்து இயற்றும் மரபும் உண்டு. கலம்பகம் என்று ஒருவகை செய்யுட் கோவைக்குப் பெயர். கதம்பமாலை என்கிறோமல்லவா அது போல பல வகையான செய்யுட்களைக் கோத்த அமைப்பு இது. பல கலம்பகங்கள் தமிழில் உள்ளன. 'இரட்டையர் கலம்பகம்' 'தில்லைக் கலம்பகம்' என்றெல்லாம் பல நூல்கள் உள்ளன. இவற்றில் செய்யுள்களின் யாப்பு அதாவது அமைப்பு மட்டுமல்ல, சொல்லுகின்ற நயமும் செய்யுளுக்குச் செய்யுள் வேறுபடும் வகையில் பல்வேறு அணிவகைகளும் இடம்பெறும்.

தமிழ்நாட்டில் 9ஆம் நூற்றாண்டில் பல்லவ அரசன் தெள்ளாறெறிந்த நந்திவர்மன் என்பவன் ஆண்டிருக்கிறான். இவன் தமிழ் மீது சிறந்த ஈடுபாடு கொண்டவன். காஞ்சிபுரத்தை தலைநகராகக் கொண்டு ஆண்டவன். காஞ்சிபுரம், மாமல்லபுரம், மயிலாப்பூர், காவிரிநாடு முதலிய பகுதிகள் எல்லாம் இவன் ஆட்சியின் கீழிருந்தன என்று இந்நூலில் பலபாடல்கள்

கூறுகின்றன. நந்திக் கலம்பகத்தில் நூற்றுக்கும் மேற்பட்ட பாடல்கள் உள்ளன. ஒவ்வொரு பாட்டிலும் நந்தியின் புகழ் சிறப்பாக கூறப்படுவதால் இது முற்றிலும் அவனை தலைவனாகக் கொண்டது அதனால் தான் அதற்கு நந்திக் கலம்பகம் என்றே பெயர்.

இதில் ஒரு பாட்டு நந்தியின் வாரிவழங்கும் வள்ளல் தன்மையைப் பாடுகிறது. உலகெல்லாம் உய்ய பெய்யும் மழை போன்றது அவனுடைய கொடை. இதைத்தான் புகழ வந்தது இப்பாட்டு. ஆனால் இது சொல்லும் பாங்கு இருக்கிறதே அது கற்பனை வளம் நிறைந்து விளங்குகிறது. ஒரு தலைவி தலைவன் மீது காதல் கொள்கிறாள். முழுநிலா வருகிறது. நிலா அவளது காதல் வேகத்தை அதிகரிக்கிறது. நிலாவைப் பழிக்கிறாள். ஏ நிலாவே, பெண்களே இல்லாத ஊரில் ஒருத்தன் பிறந்தால், அவனுக்கு பெண்களுடைய அருமை தெரியுமா? பெண்களுடைய மென்மை தெரியாது. அவர்களுடைய உணர்ச்சிகளை புரிந்து கொண்டு செயல்பட மாட்டான். அவர்களிடத்தில் மிகவும் கொடுமையாக எப்படி நடந்து கொள்வானோ அதுபோல நீயும் என்னை மிகவும் கொடுமையாக வாட்டுகிறாய்.

தமிழ் மன்னன் நந்தி எல்லோர்க்கும் கொடையை மழை போல் வாரி வழங்குகிறான். அவன் நாடே குளிர்ந்து விளங்கும் நாடு. அங்கு என்னை மட்டும் நீ பெண் என்றும் பாராமல் தகிக்கிறாயே, இது தகுமா என்கிறாள்.

நந்திவர்மனின் கொடைச்சிறப்பை பாட வந்தது இப்பாட்டு. ஆனால் ஒரு காதலுற்ற தலைவி, தலைவன், நிலா என்பதை எல்லாம் கற்பித்து நயம்பட உரைக்கிறது இப்பாடல் பாருங்கள்.

"மண் எல்லாம் உய்ய மழைபோல் வழங்கு கரம்
தண்ணுலா மாலைத் தமிழ்நந்தி நல்நாட்டில்
பெண்ணிலா ஊரில் பிறந்தாரைப் போல
வெண்ணிலாவே இந்த வேகம் உனக்காகாதே"

என்கிறது பாட்டு. சொல்லும் பொருளை நயம்பட உரைக்கும் ஆற்றலைத்தான் கவிதை என்கிறோம். இது போன்ற பாடல்கள் நிறைந்து விளங்குவதால் மணம் திகழும் மாலையாக 'கலம்பகம்' என்னும் நூல்கள் திகழ்கின்றன.

20
குவாகுவா

'குவாகுவா' என்று சொல்கிறோம். பிறந்த குழந்தை அழுவதை குவாகுவான்னு அழறது என்போம். இது குழந்தை அழுகையின் ஒலிதானே ஒழிய ஒரு சொல் என்று சொல்ல முடியாது. இது குறித்து ஒரு சுவையான சம்பவத்தைச் சொல்ல விரும்புகிறேன்.

எங்கள் வீட்டில் வாரம் தோறும் செவ்வாய்க்கிழமை அன்று அப்பகுதி மாதர்கள் கூடி பாடுவது வழக்கம். குறிப்பாக அருணகிரிநாதரின் திருப்புகழைச் சேர்ந்து பாடுவார்கள். அருணகிரிநாதர் சந்தக் கவிதைகள் இயற்றுவதில் தலை சிறந்தவர். ஈடு இணையற்ற அந்தப் பெருமானின் பாடல்களின் சொல்லழகும், தாளக்கட்டும், அவருக்கு சந்தக் கவிராஜன் என்றே புகழ் கொடுத்தவை. ஒரு முறை அவ்வாறு பாடிக் கொண்டிருந்த போது என் மனைவி என்னிடத்தில் வந்து, இந்த திருப்புகழில் ஒரு சந்தேகம் என்று கேட்டாள். அவளுக்கு கந்தரனுபூதி, கந்தரலங்காரம், திருப்புகழ் எல்லாம் சிறுவயதிலிருந்தே நல்ல மனப்பாடம். ஆதலின் என்னைவிட தமிழ் நன்றாகவே தெரியும். அதனால் அவளே என்னிடத்தில் சந்தேகம் என்று கேட்டது வியப்பாக இருந்தது. என்ன பாட்டு என்று கேட்டேன்.

'சீர் சிறக்கும் மேனி பசேல் பசேல் என
நூபுரத்தின் ஓசை கலீர் கலீர் என

பாரதத்தை மேரு வெளீ வெளீ திகழ்
கொடெடித்த நாளில் வரை வரைபவர்
பானிறக்கணேசர் ஆகுவாகனர்

சேரவிட்ட தாள்கள் சிவேல் சிவேல் என வருமானார்'

என்ற திருப்புகழில் "குவாகுவா" என வருகிறது அங்கு என்ன அர்த்தம் என்றாள். இப்பாட்டு எல்லாரும் பாடும் திருப்புகழ்தான். அந்த அடியை முழுமையாகச் சொல் என்றேன்.

"பாரதத்தை மேரு வெளிவெளி திகழ்
கோடொடித்த நாளில் வரைவரைபவர்
பானிறக் கணேசர் குவாகுவா கனர் இளையோனே"

என்று குவாகுவா என வருகிறது. அங்கு என்ன பொருள் என்றாள். இங்கு பாடுவர்கள் எல்லோரும் 'குவாகுவா' எனச் சற்று அழுத்தியே கூட பாடுவார்கள். ஆனால் சொல்லை கொஞ்சம் பிரித்து பாடினால் அர்த்தம் தானாகவே புரியும். "பானிறக் கனேசர்கு ஆகுவாகனர்" எலியை வாகனமாக உடையவர் என்பது பொருள். பால்நிற கணேசர்க்கு இளையோனே என்று பொருள். கணேசர்க்கு ஆகுவாகனர் என்று பெயர். குவும் ஆவும சேரும் போது "குவ்ஆ" என்று பாட வேண்டும் என்று சொன்னேன். ஆகுவாஹனர் என்று வரும். இது சந்தி. இதைப்பாடும் போது "கு" என்பதை சற்று மென்மையாகப் பாடி 'ஆகு' எனப் பாடினால் சரியாகி விடும் என்றேன். என் மனையாளுக்கு ஓரே சந்தோஷம்.

ஆனால் சிலர் இப்படி பிரிக்கிறது எங்களுக்கு ராகத்துக்கு ஒத்துக்காது. தாளம் இடிக்கும். இப்படித்தான் பாடிப்பழக்கம் என்பார்கள். ராகம் என்பது பாட்டின் பொருளையும் உணர்ச்சிப் பெருக்கையும் அலை அலையாக நம் உள்ளத்தைத் தொடவைப்பது தான். இது போன்ற பாடல்களை இயற்றிய அருணகிரிநாதர் போன்ற பெரியவர்கள் "இசை ஞானிகள்" அவர்கள் இயற்றிய இப்பாடல்களில் இராகம் எப்படி எங்கு அமையுமோ அங்கு தாளம் சரியாகவே வந்து நிற்கும். ராகம் அமையாது என்றாலோ, தாளம்

நிற்காது என்றாலோ அது சரியல்ல பாடிய பெரியவர்கள் மீது குறை கூறியதாக அமையும். நாம் பாடும் பழக்கத்தை சற்றுச் சீர் செய்து கொள்ள வேண்டும். அதனால் தான் சொல்லிய பாட்டின் பொருளறிந்து சொல்லுவார்" என்று ஆன்றோர் கூறினார். சொல்லும் பொருளும் பிரிக்க முடியாது. இணைந்து நிற்பவை. இதை தெய்வத்தன்மை என்றே கூறுவர்.

ஆகுவாஹனர்

21

திருவயிறு

எந்த ஒரு சமுதயாத்திலும் மக்கள் அழகாகவும் இனிமையாகவும், நாசூக்காகவும் பேசுகிறார்களோ, தங்கள் நடவடிக்கைகளால் வெளிப்படுத்துகிறார்களோ, அந்த சமுதாயத்தை மிகவும் பண்பட்ட சமுதாயம் என்று சொல்கிறோம். சொல்லும் பழக்க வழக்கங்களும் பண்பாட்டின் கண்ணாடிகள் என்றே சொல்லலாம். தலைமகனும், தலைவியும் ஒருவர் மீது ஒருவர் காதல் உறுகின்றனர். அவற்றை எப்படி எல்லாம் எழிலாக எடுத்துரைத்துள்ளனர் நமது முன்னோர்கள்!

கம்பனுடைய இராமகாதையில் இராமன் மிதிலைக்கு வருகிறான். சீதை மாளிகையில் இருந்து அவன் வருவதைக் காண்கிறாள். இருவரும் ஒருவரை ஒருவர் காண்கிறார்கள். 'அண்ணலும் நோக்கினான் அவளும் நோக்கினாள்' அவ்வளவு தான் அங்கே கம்பன் கூறியிருக்கிறான். அதிலேயே எவ்வளவு செய்திகளை வேட்கைகளை, இளம் உள்ளங்களின் உணர்ச்சிப் பெருக்குகளை குறிப்பால் உணர்த்தியுள்ளான்! இது பண்பாட்டின் உயர் நிலையைக் காட்டும் காட்சி. காதல் கொண்டவர்கள் என்பதற்காக ஒருவரையொருவர் கட்டிப்பிடித்துக் கொண்டு.... அதெல்லாம் இடம்பெற வேண்டிய தேவையில்லை. எல்லாவற்றையும் வெளிப்படையாகக் கூற வேண்டியதில்லை. கூறவும் முடியாது.

அதுபோல நமது பண்பாட்டின் உயர்நிலையை எடுத்துக் கூறும் பல சொற்களையும் கல்வெட்டுகளில் காணலாம். இராஜராஜ சோழனுக்கு முன்பு ஆண்டவன் உத்தம சோழன் என்பவன். அவனுடைய தாயின் பெயர் செம்பியன் மகாதேவியார் என்பது. அவள் கண்டராதித்த தேவர் என்பவரின் மனைவியார். சோழப் பேரரசியர்களில் மிகச் சிறந்தவர். சமயத்துக்கும், கோயில்களுக்கும், கலைகளுக்கும் அருந்தொண்டாற்றியவர். அவரைப் பற்றிக் கூறும் பல கல்வெட்டுகள் உள்ளன. அவற்றில் அவரைப் பற்றிக் குறிக்கும் இடத்தில் எல்லாம் மழவரையர் மகளார் கண்டராதிச்ச சோழர் தேவியார், உத்தமச் சோழரைத் திருவயிறு வாய்த்த பிராட்டியார் செம்பியன் மகாதேவியார் என்று குறிக்கப்படுகிறாள். உத்தம சோழனின் தாயார் என்பதற்குப் பதிலாக அவரை "திருவயிறு வாய்த்த பிராட்டியார்" என்று குறித்தனர். "தாய்மையை" திருவயிறு வாய்த்தல் என்ற சொல்லால் கூறியிருக்கும் பாங்கைக் காண்கிறோம். சோழர் காலத்து இலக்கியங்களில் "கலிங்கத்துப்பரணி" மிகச் சிறப்புடையது. குலோத்துங்க சோழனின் பிறப்பைக் கூறுமிடத்து அவனை கண்ணனுக்கு உவமித்துக் கூறுகிறார் ஆசிரியர்

'தேவகி தன் திருவயிற்றில் வசுதேவர்க்கு
மூவுலகும் தொழ நெடுமால் முன்னொரு நாள்
அவதாரஞ் செய்ததை ஒக்கும்'

எனப் பாடுகிறார்.' ஆழ்வார் பாடலில் "மன்னு புகழ் கோசலை தன் மணிவயிறு வாய்த்தவனே" – என்று பாடுகிறார் அல்லவா ?

குழந்தையை ஈன்ற தாயின் வயிற்றை "திருவயிறு" என்ற சொல்லால் குறிக்கும் பாங்கை சேக்கிழார் காலத்திலும் காண்கிறோம்.

22

கையூட்டு

தமிழில் கையூட்டு என்று ஒரு சொல் இருக்கிறது. இச்சொல் எந்த இலக்கியத்திலும் காணப்படவில்லை. கல்வெட்டில் தான் காணப்படுகிறது. 'கை ஊட்டு' இரண்டு சொற்களால் ஆனது. "கையில் ஊட்டுதல்" என்பது சொற்றொடர். கையில் ஊட்டுதல் என்றால் என்ன? ஊட்டுதல் எனில் உண்பதற்கு வாயில் அளித்தல், வாய்வழியாக நேராக ஊட்டுவதை விட்டு வேறுவழியில் லஞ்சம் கொடுத்து கொழுக்கச் செய்வதை கையூட்டு என்ற சொல்லால் குறித்தனர். "கையூட்டு" என்றால் "லஞ்சம்" என்பது பொருள்.

இது ஒரு குற்றமாக அக்காலத்தில் கருதப்பட்டது. இந்த சொல்லால் மட்டும் இக்குற்றத்தின் தன்மையை எடை போட முடியாது. இதனுடன் குறிக்கபட்டுள்ள மற்ற குற்றங்களையும், விளைவுகளையும் அறிந்தால் தான் இது எவ்வளவு பெரிய குற்றமாகக் கருதப்பட்டது எனத் தெரியும். இது உத்திரமேரூர் குடவோலை கல்வெட்டில் ஊர்சபைக்கு பிரதிநிதிகளை தேர்ந்தெடுப்பதை குறிக்கும் இடத்தில் வருகிறது.

ஊர் தேர்தலைக் குறிக்கும் கல்வெட்டு, தேர்தலுக்கு நிற்க என்ன தகுதிகள் வேண்டும். யார் நிற்க முடியாது என்னும் பகுதியில் தான் இது குறிக்கப்படுகிறது. சபைத் தேர்தலுக்கு நிற்பவருக்கு 35

வயதுக்கு மேல் இருக்க வேண்டும். 70 வயதுக்கும் கீழ் இருக்க வேண்டும். ஒழுக்கம், கல்வி, வயது, திறமை இவற்றின் அடிப்படையில் தான் நிற்க முடியும். அதுமட்டுமல்ல. ஒருமுறை தேர்தலில் நின்றால், அடுத்த மூன்று தேர்தலில் அவர் நிற்க முடியாது. அவர்கள் மட்டுமல்ல, அவருடைய சொந்தக்காரர்கள் யாரும் நிற்க முடியாது. வேறு குடும்பம் தான் நிற்க முடியும்.

அதைக் கல்வெட்டு இவர்களுக்கு சிற்றவை, பேரவை மக்கள், அத்தை மாமன் மக்கள், தாயோடு உடன் பிறந்தான், தகப்பனோடு உடன்பிறந்தான், தன்னோடு உடன்பிறந்தவர்கள், தமப்பன், தன்மகன், மனைவியோடு உடன் பிறந்தான் என எந்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த சொந்தக்காரர்களும் நிற்க முடியாது. பாதகங்கள் செய்பவர் நிற்க முடியாது என்று கூறும் இந்த பட்டியலில் தான் "எப்பேர்ப்பட்ட கையூட்டும் கொண்டான்" தேர்தலில் நிற்க முடியாது என்று கையூட்டு என்ற சொல் வருகிறது. லஞ்சம் வாங்குவதை அவ்வளவு கொடுங் குற்றமாக அக்காலத்தே கருதியிருக்கிறார்கள்.

23
சந்திராதித்தவரை

கொங்கு நாட்டில் ஒரு சிறந்த மரபு உண்டு. "கல்லும் காவேரியும் உள்ளளவும் கம்ப நாடன் கவிதைக்கு அடிமை யாம்" என்று கூறும் மரபை ஓலைச்சுவடிகளிலும் கல்வெட்டுகளிலும் காண்கிறோம். கல்லும் காவேரியும் என்றென்றும் நிலைத்து நிற்பவை அல்லவா! அது போல கம்பராமாயணமாகிய கவிதையை நாங்கள் என்றென்றும் சுவைக்கின்றோம். அதன் தத்துவங்களுக்கு நாங்கள் அடிமைகள் என கொங்கு நாட்டார் பெருமையாகக் கூறுவர்.

இதுபோல ஆயிரக்கணக்கான கல்வெட்டுகளில் "சந்திராதித்தவரை" என்ற சொல்லைக் காண்கிறோம். கல்வெட்டுகள் எல்லாம் கோயில்களுக்கு கொடுக்கப்பட்ட நிலங்களையும், பூமிதானங்களையும் பதிவு செய்த பத்திரங்கள் என்று நாம் கண்டோம். 'ஐயா – இந்த கோயிலுக்கு பூஜைக்காக, திருவிழாவுக்காக இந்த நிலம் கொடுத்திருக்கிறேன். இவற்றின் எல்லைகள் இவை. இவற்றிலிருந்து வரும் நெல்லைக் கொண்டு இந்த கால பூஜை செய்யுங்கள், திருவிழா நடத்துங்கள். இந்த நிலதானமானது "சந்திரனும், சூரியனும் உள்ள அளவு என்றென்றும் நிலைத்து நிற்க வேண்டும்" என்று கூறுவது தான் கல்வெட்டு. தான் கொடுக்கும் தானம் சந்திரனும், சூரியனும் உள்ளவரை நிற்க வேண்டும் என்று வேண்டி கொடுத்ததைத் தான்

'சந்திராதித்தவரை' என்ற சொல் கூறுகிறது.

என்றென்றும் நிலைத்து நிற்க வேண்டும் என்ற கருத்தைக் கூறும் இந்த மரபு இரண்டாயிரம் ஆண்டுகளாகத் தமிழ் நாட்டில் திகழும் மரபு. சங்க காலத்திலேயே இவ்வாறு கூறியிருப்பதைப் பார்க்கலாம். மதுரையை ஆண்ட பாண்டிய மன்னன் நன்மாறன் என்பவன். அவனை மதுரைக் கணக்காயளார் மகனார் நக்கீரனார் என்பவர் பாடியிருக்கிறார். அவனுடைய வீரத்தையும், புகழையும், ஆற்றலையும் பாடி, மாற நீ எவ்வாறு இப்பொழுது மகிழ்ந்து இருக்கிறாயோ, அது போல என்றென்றும் நிலைத்து நிற்பாய் என்று பாடுகிறார்.

"அங்கண் விசும்பில் ஆரிருள் அகற்றும்
வெங்கதிர்ச் செல்வன் போலவும்
தண்கதிர் குடதிசை மதியம் போலவும்
நின்று நிலை இய உலகமொடு உடனே"

என்று பாடுகிறார். சூரியனும், சந்திரனும் போல என்றென்றும் நிலைத்து நிற்பாய் என்கிறார் நக்கீரர். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கும் மேல் இருந்த வந்த மரபைத் தான் கல்வெட்டுகள் தொடர்ந்து "சந்திராதித்த வரை" என்று கூறுகின்றன. இந்த மரபே நிலைத்து நின்ற மரபாகும்.

24
இறை

பெருமானே நீ ஆடும்போது உன் அடியின் கீழ் நான் இருக்க வேண்டும் என்று காரைக்கால் அம்மையார்

"இறைவா நீ ஆடும்போது உன் அடியின் கீழ் இருக்க என்றார்"

என்று பாடியாதாக சேக்கிழார் கூறுகிறார். இறைவன் என்றால் இங்கே கடவுள் தெய்வம் என்று பொருள். இறைவன் என்றால் அரசன், தலைவன் என்றும் பொருள். 'இறைவன்' என்றாலும் 'இறை' என்றாலும் ஒன்றுதான்.

இந்தச் சொல் சாதாரணமான ஒரு சொல்தான். இருந்தாலும் இது எத்தனையோ பொருள்களிலே பயன்படுகிறது என்று பார்க்கும் போது நாம் வியப்பில் ஆழ்ந்து விடுவோம். 'உயரம்', 'தலை', 'கணவன்', 'தமையன்', வீட்டு இரப்பு', 'இறகு', 'இருக்கை', 'சிதறுதல்', 'வணங்குதல்' என இன்னும் எத்தனையோ பொருள்கள் உள்ளன. இச்சொல் கல்வெட்டுகளில் பல இடங்களிலும் வருவதைக் காண்கிறோம்.

"இறை" என்றால் "வரி" என்ற பொருளில் வருவதாக கூறுவர். கல்வெட்டுகளில் "அரசுக்கு அளிக்கப்படும் வரி" என்ற பொருள் காண்கிறோம்.

இக்காலத்தில் பல பொருள்கள் மீதும், பணிகள் மீதும் வரிவிதித்து அந்த வரிப்பணத்தைக் கொண்டு அரசு ஆட்சி செய்கிறதல்லவா. அவ்வாறு வசூலிக்கும் வரிப்பணத்தை தான் "இறை" என்று அக்காலத்தில் கூறினர். இவை அனைத்துக்கும் 'இறை' என்பது பொதுப் பெயர்.

என்ன என்ன பணி செய்கிறார்களோ, பொருள்களைப் பயன்படுத்துகிறார்களோ அவற்றிற்கு ஏற்பவும் வரியின் பெயர் பயன்படுத்தப்படும். உதாரணமாக "வண்ணாரப்பாறை" என்று ஒரு வரியின் பெயர். இங்கு வண்ணார் பாறையைக் கொடுப்பார் என்று பொருள் இல்லை. துணிகளை பாறையில் அறைந்து வெளுக்கிறார்கள் அல்லவா! அதனால் அவர்கள் செலுத்தும் வரிக்கு "வண்ணாரப் பாறை" என்று பெயர். அதுபோல துணி நெய்பவர்கள் மீது இடும் வரிக்கு "தறிப்புடவை" என்று பெயர் காணப்படுகிறது. இப்போது கைத்துப்பாக்கி வைத்திருக்கிறார்கள். அதற்கு லைசன்ஸ் வாங்கச் சொல்கிறார்கள் அல்லவா? அதுபோல முற்காலங்களில் ஆயுதங்களுக்கு ஏற்ப வரி விதிப்பார்கள். 'வில்லு' வைத்திருப்பவர்கள் மீது விதிக்கப்படும் வரிக்கு 'விற்பிடி' என்று பெயர். இது போல "ஓடக்கூலி", "நீர்க்கூலி" என்றெல்லாம் சொற்கள் உண்டு. இவை எல்லாமே "இறை" தாம்.

இவ்வாறு விதிக்கப்படும் இறைக்கு ஒரு விரிந்த பொருளையே பல செப்பேடுகளும் கல்வெட்டுகளும் கூறுகின்றன. 'இறை' என்றால் அரசன் பெற்று பயன்பெறுவது என்று கூறுகின்றன. அந்த சொற்றொடரைப் பாருங்கள் "கோத்தொட்டு உண்ணற் பாலது" என்று இறையை கூறுகின்றன. இவ்வாறு இறையை அரசுக்கு செலுத்துவதை "இறை இறுத்தல்" என்று சொல்வர். இவ்வாறு வரியை அரசாட்சிக்கு மட்டுமல்ல. ஊர்கள் ஆட்சி செய்ய விதிக்கப்படும் வரிகளும் உண்டு. அவற்றிற்கு "ஊர் இடு வரி" என்று பெயர்.

ஆலின் கீழமர்ந்து அறம் உரைத்த பட்டன்- காஞ்சிபுரம்

அக்கலாத்தில் அரசுக்கு செலுத்தும் வரியை நீக்க அரசனுக்கே அதிகாரம் இருந்தது. ஊரிடு வரிகளை நீக்க ஊர்ச்சபைகளுக்கே உரிமை வழங்கப்பட்டு இருந்தது.

ஆலின்கீழ் அமர்ந்தபிரானிடம் அறம் கேட்கும் அந்தணர்

25

இறை இலி

அரசுக்கு செலுத்த வேண்டிய வரியை இறை என்ற சொல்லால் குறிப்பர் என்று கண்டோம். இக்காலத்தில் "வரிசெலுத்தவும்" என்று கூறுகிறோம். ஆனால் ஆயிரம் ஆண்டுகளுக்கும் முன்னர் இதையே "இறை இறுக்கவும்" என்று குறிப்பிட்டார்கள். அரசுக்கு செலுத்துவது கட்டாயமாக கொடுக்க வேண்டுயது ஆகையினாலே அதை "இறுக்க" என்றும் "இறுக்கக் கடவோம் ஆகவும்" என்று குறிப்பிட்டனர். இக்காலத்து எவ்வளவோ வரிகள் உள்ளன. தொழில்வரி, பொருள் மீது வரி, என்றுள்ளன. இவ்வரியிலிருந்து வரும் வருவாயைக் கொண்டு தான் அரசு இயந்திரம் இயங்கும். அது போலத்தான் அக்காலத்தும் அரசுக்கு வரும் வரியைக் கொண்டு தான் கோலோச்சினர். பெருவரி என்று சிலவும், சில்வரி என்று சிலவரிகளும், உள்வரி என்று சிலவரிகளும் வகைப்படுத்தப்பட்டன.

அரசு வரி இடுவது போல ஒவ்வொரு ஊரும் ஊராட்சி நிர்வாகத்துக்காக வரி இட்டனர். இவற்றை ஓலைகளில் எழுதி வைத்தனர். இவ்வோலைக் கட்டுகளை "வரிப் பொத்தகம்" என்று அழைத்தனர். இதுபோல வரியிலிடுவார், வரிப் பொருத்தகம் வைத்திருப்பார். வரிப் பொருத்தங்களின் கணக்கு வைத்திருப்பார் என பல பணி செய்பவர்களும் அக்காலத்தில் இருந்தனர். இவர்கள் மிகமிக நேர்த்தியாக ஆயிரம் ஆண்டுகளுக்கும் முன்

செயல்பட்டனர். ஊர்ப்புறங்களில் உள்ள நிலையங்களை அவற்றின் செழுமைக்கு ஏற்பத் தரம் பிரித்து தரத்துக்கு ஏற்ப வரி இடுவது அக்காலச் செயல்பாடு இதை "வரியில் இடுதல்" என்றும் கூறுவார்கள்.

இவற்றைக் குறிக்கும் நிலங்களை 'இறை இறுக்கும் நிலம்' என்றும் 'இறை இலி நிலம்' என்றும் கூறுவர். இறையிலி நிலம் என்றால் 'இறை இல்லாத நிலம்' என்று பொருள் புரிகிறதல்லவா. பல நிலங்கள் கோயிலகளுக்கு தானமாகக் கொடுக்கப்பட்டவை. அந்நிலங்களைக் கூறும் போது இன்னிலம் இறைகட்ட வேண்டியதில்லை என்ற வரிப்புத்தகத்தில் இருந்து எடுத்து விடுவார்கள். இதற்கு 'இறை இழித்து' என்று சொல்வார்கள்.

"இறை இழித்து இறையிலியாக்கப்பட்ட நிலம்" என்பதிலிருந்து இறையை அரசுக்குத் தான் செலுத்த வேண்டாம் என்பது பொருளே ஒழிய இறையே இல்லை என்று பொருள் இல்லை. அதாவது கோயிலுக்கு தானம் கொடுப்பவர் வரிக்கு பதிலாக மொத்தமாக ஒரு தொகையை செலுத்திவிட வேண்டும். அதை ஊரார் பெற்றுக் கொண்டு அந்த தொகையினை வட்டியாக கொண்டு தாங்களே ஆண்டாண்டு தோறும் கட்டுவார்கள். ஆனால் அதை அரசுக்கு கொடுக்க மாட்டார்கள். கோயிலுக்கு கொடுத்து விடுவார்கள். ஆதலால் "இறை இலி" என்றால் அரசனுக்கு செலுத்த வேண்டியதில்லை. ஆனால் ஆண்டுதோறும் கோயிலுக்கு ஊராரே அந்த வரியை கட்டிவிட வேண்டும். அதற்கு முன்கூட்டியே ஒரு தொகையை மொத்தமாகப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்பது பொருள். அது போன்ற நிலங்களுக்கு 'இறை இலி நிலம்' என்று பெயர். வரிக்காக மொத்தமாக கொடுக்கும் பணத்துக்கு "இறை காவல்" என்று பெயர். இது போல நிருவாகத்தில் சிறந்த தமிழ் சொற்களை கல்வெட்டுகளில் காணலாம்.

26
கழிதல்

தமிழில் கழிதல் என்ற சொல்லுக்கு 'முடித்தல்', மறைதல் என்று எல்லாம் பொருள். மலையாளத்தில் இதன் பழம் அர்த்தம் இன்னும் வழக்கத்தில் இருக்கிறது. "ஊண்ணு கழிஞ்சோ" என்பார்கள் சாப்பிட்டாச்சா என்று அர்த்தம். கழிதல் என்ற சொல்லை ஒரு கல்வெட்டில் எப்படி பயன்படுத்தியிருக்கிறார்கள் என்று பார்க்கலாம்.

ஒரு பெண்மணி படுத்தபடுக்கையாக இருக்கிறாள். அவளுக்குத் தான் இறந்து விடுவோம் என்று தெரிகிறது. அதனால் தன்னிடம் உள்ள தங்கத்தை ஊர்க் கோயிலுக்கு கொடுத்து விளக்கெரிக்க வேண்டிக் கொள்கிறாள். அப்பணத்தைக் கொடுத்தவுடன் இறந்து விடுகிறாள். அதை ஊரார் வாங்கிக் கொண்டு அவள் விருப்பப்படியே செய்கிறார்கள். இதைத் தான் கல்வெட்டு கூறுகிறது.

வங்கிபுரத்து இளையான் பிராம்மணி (ஒரு பிராம்மணன் மனைவி) சிறிய நங்கை தான் கழிகின்றாள். திருப்புலிவனத்துப் பெருமானுக்கு நந்தா விளக்குக்காக பன்னிரு கழஞ்சரை பொன் தந்து கழிஞ்சாள் என்று வங்கிபுரத்து சண்டேஸ்வரதாசன் வந்து இவளுக்கு தர்மமாக இப்பொன் கொண்டு விளக்கெரிக்க வேண்டும் என்று விண்ணப்பம் செய்தான்" என்று கல்வெட்டு கூறுகிறது.

இதை ஊராரே பெற்று விளக்கெரிக்க சம்மதித்தனர். இங்கு "தான் கழிகின்றாள் விளக்கெரிக்க பொன்தந்து கழிந்தாள்" எனக் குறித்துள்ளனர். கழிகின்றாள் என்பதால் இறக்கின்ற சமயத்தில், என்றும் கழிந்தாள் என்பதால் இறந்து போனாள் என்னும் பொருளிலும் கல்வெட்டில் பயன்படுத்தியுள்ளனர்.

இந்தக் கல்வெட்டிலிருந்து மற்றொரு செய்தியும் நமக்கு அறிய முடிகிறது. அக்காலத்தில் பெண்களுக்கு தங்களுக்கென்று தனியாக பொன்னும் பொருளும் கொள்வதற்கு உரிமை இருந்தது என்றும் அதை தன் விருப்பப்படி செலவழித்துக் கொள்ளும் சுதந்திரமும் இருந்தது எனவும் அறியலாம். கல்வெட்டுகளிலிருந்து சொற்களுக்கு மட்டும் பொருள் காணலாம் என்றில்லை. அக்காலத்துச் சமுதாயம் எவ்வாறு இருந்தது என்றே அறிய முடியும்.



27
குறிப்பேடு

"குறிகளும் அடையாளமும் கோயிலும்
நெறிகளும் அவர் நின்தோர் நேர்மையும்
அறிய ஆயிரம் ஆரணம் ஓதிலும்
பொறியிலீர் மனம் என் கொல் புகாததே"

என்று அப்பர் பெருமான் தமது தேவாரத்தில் பாடுகிறார். இப்பாடலில் குறிகள் என்ற சொல் வழக்கைப் பார்க்கிறோம். குறிகள் என்றால் என்ன? ஒரு விரிந்த கருத்தைச் சுருக்கி கண்டவுடன் அந்த கருத்து முழுதும் நமக்கு நினைவுபடுத்தும் வகையில் வரிவடிவிலோ அல்லது உருவ வடிவிலோ கொள்வதைக் குறி என்கிறோம். நாட்குறிப்பு அல்லது தினக்குறிப்பு என்கிறோம். ஒரு நாளின் நிகழ்ச்சிகளைச் சுருக்கி நினைவூட்டும் வகையில் எழுதிவைப்பது. இவ்வாறு எழுதிவைக்கும் ஏட்டை நாட்குறிப்பு – Diary அல்லது நாட்குறிப்பேடு என்கிறோம்.

இக்காலத்தில் அரசாங்க அலுவலர்கள் ஏதாவது ஒரு செயல்பாட்டுக்கு ஒரு விரிவான ஆணையை அனுப்புகிறார்கள். அந்த ஆணை வெளியிட்ட தேதி, இடம், அதற்கு முன்னுரை செய்ய வேண்டிய பணியின் விரிவான விளக்கம், அதற்கு அனுமதிக்கப்பட்ட செலவுத் தொகை, அதை யார் எப்படிச் செய்ய

வேண்டும், செய்த முடிவை யாருக்கு தெரிவிக்க வேண்டும். செய்யத் தவறினால் அதற்குரிய தண்டனை யாது, இந்த ஆணை வெளியிட்டவரின் கையொப்பம், யாருக்கு அனுப்பப்பட்டது என்றெல்லாம் விரிவாக குறிக்கப்பட்டிருக்கும். இது அரசு ஆணை வெளியிடுவதின் மரபு. இதில் ஏதேனும் தவறிருந்தால் நீதிமன்றத்தில் வழக்குத் தொடருவர். ஆதலின் ஆணைகள் விரிவாக எழுதப்பட வேண்டும். எழுதுவதற்கு முன்னர் இவ்வாறு ஆணை வழங்கலாமா, அனுமதிக்கலாமா, என்று பல அதிகாரிகள் பரிசோதிப்பர். தேவைப்பட்டால் அமைச்சருக்கும், முதலமைச்சருக்கும் கூட அனுப்பி அவர்களது ஒப்புதல் பெற்ற பிறகே அரசாணை வழங்கப்படும். இவ்வாறு ஆணை இடுவதற்கு முன் எழுதப்படுவது மிகவும் சுருக்கமாக ஆனால் குறிப்பாக எழுதி ஒப்புதல் பெறப்படும். இவ்வாறு குறிப்பாக எழுதி அனுப்புவதை குறிப்பேடு என்று கூறுவார்கள். இக்குறிப்பேடு தனியாக இருக்கம். ஆங்கிலத்தில் இதை Note File என்று சொல்வார்கள். அரசு சீராக இயங்க இக்குறிப்பேடுகள் இன்றியமையாதவை. இந்த குறிப்பேடு தயாரிக்கும் மரபு நம் நாட்டில் எப்போது வந்தது. வெள்ளைக்காரர்கள் நம்மை ஆளத்தலைப்பட்ட போது தான் இது போன்ற சீரான மரபுகள் வந்தன என்று நம்மில் பலர் கருதுகின்றனர்.

குறிப்பேடு வைத்தல் என்பது ஆயிரம் வருடங்களுக்கும் முன்பே நம் நாட்டில் பின்பற்றப்பட்டது. அதன் பின்னர் அரச ஆணைகள் பிறப்பிக்கப்பட்டன எனபதற்கு சான்றுகள் உள்ளன. 1100 ஆண்டுகளுக்கு முன் மதுரையைத் தலைநகராய் கொண்ட பாண்டிய மன்னன் பராந்த வீரநாராயணன் என்பவன். அவன் ஒரு நிலம் தானம் கொடுத்ததை ஆணையாக செய்துள்ளான். அந்த ஆணை செப்பேட்டில் எழுதப்பட்டுள்ளது. தளவாய்புரம் என்ற இடத்தில் கிடைத்துள்ளது. இன்றும் இருக்கிறது அதில் முதலில்

குறிப்பேடு கொடுத்த பின்னர் விரிவாக ஆணையாக செப்பேட்டில் எழுதிக் கொடுத்ததை கூறிகின்றன.

" விளை வயலனைத்தும் இறையிலியாகச் சொல்லி மகாசபைக் குறிப்பேடு குடுத்து"

'பகல் செய்யும் பருதி ஞாயிறும்
இராச் செய்யும் பனிமதியும்
அகல் ஞாலம் உள்ளளவும் செப்பேடு செய்து கொடுத்தருளினன் கோச்சடையன் கூடல் கோன்
செந்தமிழ்க்கோன் ஸ்ரீ பராந்தக மகராஜன்'

என்று எழுதப்பட்டுள்ளது.

ஓராயிரத்து நூறு ஆண்டுகளுக்கு முன்னரே குறிப்பேடு எழுதி பின்னர் விரிவான ஆணை எழுதும் சீரான அரசு நிருவாகம் நம் நாட்டில் இருந்தது என்று காணும் போது நாம் பெருமை கொள்ளத்தான் செய்கிறோம்.

28
பிரமாதம்

"பிரமாதம்" என்ற சொல்லை நாம் பல இடங்களிலும் பயன்படுத்துகிறோம். என்னப்பா கல்யாணச் சாப்பாடு எப்படி இருந்தது என்றால் 'ரொம்ப பிரமாதமாயிருந்தது' என்று சொல்கிறோம். Dance எப்படி இருந்தது என்றால் ரொம்ப பிரமாதமா இருந்தது என்கிறோம். மிகவும் நன்றாக இருந்தது என்று பொருள் அல்லவா ? இச்சொல் வேறு மாறான அர்த்தத்திலும் வருவது உண்டு என ஒரு சுவையான கல்வெட்டுக் கூறுகிறது.

இந்தக் கல்வெட்டில் சில பெயர்கள் முதலில் வரும். இவை தனிப்பட்டார் பெயர்கள். மற்ற பகுதி உங்களுக்கே புரியும். கல்வெட்டைப் பார்க்கலாம். "மழவன் கூத்தன் கலியனும், வெண்மய்க் கிழவன் நம்பி உதயஞ்செய்தானும், மதிசெல்வன் கூத்தனும்", சோபுரஞ்வன் ஆவலையனும் ஆதித்த தேவன் வெற்றி கொண்டாலும், இவ்வனைவோம். (இங்கு கூறப்பட்ட நாங்கள் அனைவரும் என்று பொருள்). "சுருட்டிலையில் மங்கலங்கிழான் திருவன் செல்வன் எங்களுடன் நீர்வழக்காட்டுச் சுட்டி பிணக்கின இடத்து இம்மங்கலங்கிழான் பிரமாதப்பட்டமையில் இது பிராயச்சித்தமாக விதித்தபடி நாங்கள் அகத்தீச்வர முடையாருக்கு வைத்த திருநொந்தாவிளக்கு" என்கிறது கல்வெட்டு.

இதில் மங்கலங்கிழான் என்பவன் மற்றவர்களுடன் நீர்பாய்ச்சுவதில் ஏற்பட்ட பூசலில் பிரமாதப்பட்டான் என்கிறது கல்வெட்டு. இங்கு பிரமாதப்பட்டான் என்றால் இறந்து போனான் என்பது பொருள். அதனால் அவன் இறந்ததற்கு காரணமாக இருந்தவர்கள் அந்தப்பாவம் போக பிரயச்சித்தமாக அவ்வூர் கோயிலில் நொந்தா விளக்கெரித்தார்கள். பிரமாதமாக இருக்கு என்றால் மிகவும் நன்றாக இருக்கிறது என்று பொருள்.

பிரமாதப்பட்டான் என்றால் இறந்து போனான் என்று பொருள். இதுபோல் பல சொற்களுக்கு ஒன்றுக்கொன்று மாறுபட்ட பொருள்கள் வருவது உண்டு. எடுத்துக்காட்டாக "போ" என்ற சொல்லைப் பாருங்கள். 'போ' இவ்விடம் விட்டுச்செல் என்று பொருள். இதே போ என்ற சொல்லுக்கு 'வா' என்ற பொருளும் உண்டு.

29
கணி

தமிழ்நாட்டில் எழுதபட்டுள்ள மிகத் தொன்மையான கல்வெட்டு ஒன்று மதுரைக்கருகில், மீனாட்சிபுரம் என்று அழைக்கப்பெறும் மாங்குளத்தில், மலைக்குகையில் உள்ளது. அதில் கணி என்ற ஒரு சொல் காணப்படுகிறது. கணி என்றால் என்ன பொருள்? இந்த கல்வெட்டு சமணத்துறவி ஒருவருக்கு கொடுத்த தர்மத்தைக் கூறுகிறது. அதனால் சமணமரபுப்படி இதற்கு பொருள் காண வேண்டும். சமண சமயத்தில் துறவியர் கூட்டங்கள் உண்டு. அக்கூட்டங்களை 'கணம்' என்று கூறுவர். ஆதலின் கணி என்ற சொல் இக்கல்வெட்டில் சமணத்துறவி என்ற பொருளில் வந்துள்ளது. இது கண் என்ற வடசொல்லில் இருந்து தோன்றியது.

கண் என்றால் வடமொழியில் 'எண்ணுதல்', "தொகுத்தல்", "கணித்தல்" எனப் பொருள்கள் உண்டு. கணி என்ற சொல் மிகத் தொன்மையான ரிக் வேதத்திலேயே பயன்பட்டுள்ளது. ஒரு மரபைப் பின்பற்றுவர்கள் என்ற பொருளில் இது வேதத்தில் காணப்படுகிறது. ஆறாம் நூற்றாண்டில் சிம்மவிஷ்ணு என்பவரின் செப்பேட்டில் சமணத் துறவிகளை கணி என்றே வடமொழியில் குறித்துள்ளதைக் காண்கிறோம். சமணத் துறவிகள் நன்கு கற்றவர்கள் ஆதலின் நூலறிந்த பெரியோர்களையும் "கணி" என்று அழைப்பர். கலை வல்லுநர்களுக்கும் "கணி" என்ற பெயராயிற்று. 'இசை, நாட்டியம், ஓவியம், இயல், அலங்காரம், அணி, தூது' முதலிய பல

கலைகளிலும் சிறந்த பெண்களை 'கணி' என்றும் கணிகையர் என்றும் அழைத்தது இதனாலே தான் என்பர்.

எண்களை கூட்டி, குறைத்து பெருக்கி, வகுத்து அறியும் அறிவுக்கு "கணிதம்" என்ற சொல் இதனால் உண்டாயிற்று. அக்காலத்தில் நட்சத்திரங்களையும், கோள்களையும், நாட்களையும், துல்லியமாகக் கணக்கிட்டு அதனால் வரும் பயன் என்ன எனக் கூறுவதில் வல்லமை பெற்றிருந்தனர். இது முற்றிலும் கணிதத்தைப் பயன்படுத்தி அறியும் மரபு. இதைத்தான் கோள்களாகவும், நட்சத்திரங்களாகவும் திகழும் ஜோதிகளை கணக்கிட்டு அதன் தோற்றத்தையும் மாற்றத்தையும் கூறும் அறிவை 'ஜோதிடம்' என்பர். கணிதம் தெரிந்தால் தான் ஜோதிடத்தில் சிறக்க முடியும். ஆதலின் ஜோதிடனுக்கு "கணி" என்ற சொல் உபயோகிக்கப்பட்டது. பொதுவாக "கணம்" என்றால் ஒரு கூட்டம், என்ற பொருளில் பயன்படுகிறது என்பதை அப்பர் பெருமானின் பாடலில் எடுத்துக்காட்டாக கூறலாம்.

"அருமானவான்முகத்தாள் அமர்ந்து காண
"அமரர்கணம்" முடிவணங்க ஆடுகின்ற பெருமானை
பெரும்பற்ற புலியூரானை பேசாத நாள்
எல்லாம் பிறவா நாளே"

மீனாட்சிபுரம் கல்வெட்டு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முந்தியது. ஆதலின் 'கணி' எனும் சொல் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கும் மேலாக தமிழில் வழங்கி வருகிறது.

30
கொக்கி

"கொக்கு" என்ற ஒரு சொல் இருக்கிறது. இது ஒரு பறவை என்பது நமக்கு தெரியும். நீண்டகால்கள், நீண்ட கழுத்து, நீண்ட மூக்கு, வளைந்த உடல் மீன்களைப் பிடித்து தின்னும் பறவை.

"ஓடு மீன் ஓட உறுமீன் வருமளவும்
வாடி இருக்குமாம் கொக்கு"

என்ற பாடலும் நமக்குத் தெரியும். "கொக்கென்று நினைத்தனையோ கொங்கணவா" என்று சொல்லுவதும் நமக்குத் தெரியும். குழந்தைகள் விளையாடும் போது முழங்கையை மற்றைய உள்ளங்கயையில் குத்தி "கொக்கு" என்று சொல்லி விளையாடுவதும் நமக்கு தெரியும்.

கொக்கு என்ற சொல்லுக்கு பறவை என்ற பொருள் மட்டும் இல்லை. இன்னும் பல அர்த்தங்கள் உண்டு. 'குதிரைக்கும்' கொக்கு என்று அர்த்தம் உண்டு. அதே போல 'சிகப்பு நாய்க்கும்' கொக்கு என்று சொல்லுவர். ஏன் "மாமரத்துக்கு" கூட கொக்கு என்ற சொல் உண்டு.

கொக்கு என்ற சொல்லுக்கு இவ்வளவு பொருள் உண்டு என்று நமக்கு கூறுவது 'பிங்கலந்தை' என்ற நூல். ஒவ்வொரு சொல்லுக்கும் உள்ள பல பொருள்களை கூறும் நூல். இக்காலத்து

டிக்ஷனரி போன்றது. டிக்ஷனரிகளையே பிங்கலந்தை போன்ற பண்டைய நூல்களிலிருந்து தான் தொகுக்கிறார்கள்.

'கொக்கு நோய்' என்ற ஒரு நோய் உண்டு. ஆடுகளுக்குத் தோன்றும் ஒரு நோய்க்கு கொக்கு நோய் என்று சொல்லுவார்கள். "கொக்கு மந்தாரை" என்று ஒரு பூவுக்கும் பெண்கள் கட்டிக் கொள்ளும் ஒருவகைப் புடவைக்கும் பெயர்.

இராஜராஜ சோழன் தஞ்சாவூரில் பெருங்கோயிலைக் கட்டி வைத்துள்ளான். அங்கு தான் கொடுத்த தெய்வ விக்ரஹங்களை அலங்கரிக்க ஏராளமான விலை உயர்ந்த ஆபரணங்களை கொடுத்திருக்கிறான். நவரத்தினங்கள் இழைத்த ஆபரணங்கள் ஏராளம் கொடுத்திருக்கின்றான். இவை எல்லாம் எத்தனை சரங்களாக இருந்தன ? என்ன வடிவில் இருந்தன ? என்றெல்லாம் கூறுகிறான். மூன்று சரம் உள்ள கழுத்து மாலையை 'திரிசரம்' என்கிறான். அதுபோல 'பஞ்ச சரி', 'சப்தசரி' என்கிறான். "மாங்காய் மாலை", நெரிஞ்சிப்பூ மாலை, கதலிப்பூ மாலை அதாவது வாழைப்பூ போன்ற வடிவுடைய தொங்கல்கள் உயை மாலை, திருக்கைக்காரை, திருவடிக்காரை, பட்டிகை என்றெல்லாம் பல ஆபரணங்களை கூறியுள்ளான்.

அவற்றில் பல ஆபரணங்களைக் கூறும் போது "கொக்கு வாய்" என்று ஒரு சொல்லைக் கூறுகிறான். ஆபரணங்கள் விவரித்து விட்டு, கடைசியில் "படுகண் ஒன்றும் கொக்கு வாய் ஒன்றும்" என்று ஒரு சொல்லைக் கூறுகிறான். ஆபரணங்களை விரித்து விட்டு கடைசியில் "படுகண் ஒன்றும் கொக்கு வாய் ஒன்றும்" என்று குறிப்பிடுகிறான். சங்கிலியின் ஒரு முனையை கழுத்தின் பின் கோத்துக் கொள்வதற்காக ஒரு கொக்கி போல இருக்குமல்லவா அதைத்தான் கொக்கு வாய் என்கிறான். கொக்கின் மூக்கு, கழுத்து உடம்பு எல்லாம் எப்படி

வளைந்திருக்கின்றவோ அது போல வளைந்துள்ள கொக்கியைத் தன் கொக்குவாய் என்று கூறுகிறான்.

பெண்கள் அதிகம் அணிகள் அணிந்து கொள்கிறார்கள் அல்லவா! அதனால் அக்காலத்து பெண்களுக்கு கொக்குவாய் என்றால் கழுத்தில் அணியும் சங்கிலியை கோர்க்க உள்ள கொக்கியின் பெயர் என்று நன்றாகத் தெரிந்திருக்கிறது. ஏன் "கொக்கி" என்று சொல்கிறோமே, அந்த சொல்லே கொக்கு என்ற சொல்லில் இருந்து வந்தது தான்.

சோழர் பரவை விக்ரஹத்தின் புறக்கழுத்தில் சங்கிலியால் காணப்படும் கொக்கி

31

ரதகாரர்

ரதகாரன் என்ற ஒரு சொல் கல்வெட்டில் வருகிறது. இதன் பொருள் என்ன? வேலை செய்கிறவன் என்ற பொருளில் வேலைக்காரன் என்கிறோம். அதுபோல தையல்காரன் என்றால் தையல் செய்பவன் என்பது பொருள். அதேபோல ரதகாரன் என்றால் ரதம் செய்பவன் – அதாவது தேர் செய்பவன் என்று பொருள். 2000 ஆண்டுக்கு முற்பட்ட புறநானூற்றில் அப்படி ஒரு சொல்லாக்கம் வருகிறது. "எம்முளும் உளன் வைகல் எண்தேர் செய்யும் தச்சன்" என்று 'ஓரே நாளில் எட்டு தேர்களை செய்யும் வல்லமை உள்ள தச்சன்' என்று பொருள். இங்கு தேர் செய்பவனை தச்சன் என்று கூறுவதைப் பார்க்கிறோம்.

இதையே கல்வெட்டும் 'ரதகாரன்' என்றால் தச்சன் என்று கூறுகிறது. அதுமட்டுமல்ல கிராமப்புறங்களில் தச்சர்களை 'ஆசாரி' என்று அழைப்பார்கள். அதையே கல்வெட்டும் கூறுகிறது. ஆசாரி என்பதற்குப் பதிலாக 'ஆசாரியன்' என்று கூறுகிறது. இதிலிருந்து ஆசார்யன் என்ற சொல் தான் சுருங்கி ஆசாரி என்று வந்துள்ளது என அறிகிறோம். அந்தக் கல்வெட்டு ஆலங்குடி என்ற ஊரில் ஆபத்சஹாயேசுரர் கோயில் உள்ளது.

இதில் ரதகாரர்களுக்கு என்று ஒரு மெய்க்கீர்த்தியே உள்ளது. அவர்களது முன்னோர் சிறப்பு–புகழ்–குறிக்கோள் இடம்

இவையெல்லாம் முதலில் கூறப்படுகிறது.

இவர் பிறந்துள்ளது ஆரியநாடு
பெற்றுடையது உத்தராபதி
மணந்துடையது தவப்பள்ளி
ஐயித்துடையது மகரக்கொடி
கொற்றவரும் தேவர்களும் இவர்களைக் கொண்டாடுகின்றனர்.

சிவபெருமான் ஆடிய கூத்துக்களைக் கண்டு தங்களுக்கு மீண்டும் அவற்றை காட்ட வேண்டும். என்ன சிலபெருமானை வேண்ட அவரும் இவர்களுக்கு காட்டிய பெருமை உடையவர்கள். காட்டாவூர் அம்மையாலே, பொன்மழை பொழிவித்து நாடெல்லாம் சிறப்பித்தோர்.

அறத்தொடு புரிந்த வர்க்கப் பெருக்கம் உள்ளோர் சிறப்பொடு பொலிந்த செல்வம் உள்ளவர்கள் குன்றாத மனை வாழ்கை உடையவர்கள். யாவரும் தொழும் தொழில் வல்லவர்கள். அக்காலத்தில் பள்ளியும், ஆணையாக உள்ளவர்கள், அறுவகை தொழில், நால்வகை ரதகாரர் என்று இவர்கள் புகழப் பெற்றுள்ளனர். இதில் உள்ள ஒவ்வொன்றுக்கும் நுண்ணிய விரிந்த பொருள்கள் உண்டு.

சோழநாடு முழவதும் பரவி இருந்த இரதகாரர்கள் அத்தனை பேரும் ஆலங்குடியில் சிலபெருமானுக்கு திருவிழாவுக்கு ஒரு மண்டபம் கட்டினர். “முழுவதும் வல்லவன்” என்பது அந்த மண்டபத்துக்கு பெயர். இந்தக் கல்வெட்டில் பல ரதகாரர்கள் கையெழுத்திட்டுள்ளனர். அவற்றில் சில பெயர்களை பார்க்கலாம். சோழ ஆசாரியன் எழுத்து. அன்பன் ஆன 'ரதகாரசக்கரவர்த்தி' எழுத்து. பத்தொன்பது நாட்டு பதினெண்பூமி இரதகாரச் சக்கரவர்த்தி எழுத்து. இளையாண்டான் ஆன இராஜகம்பீர ஆசாரியன் எழுத்து. தச்சரில் திருவேம்படிப்பிச்சன் மாருதராயன்

31

ரதகாரர்

ரதகாரன் என்ற ஒரு சொல் கல்வெட்டில் வருகிறது. இதன் பொருள் என்ன? வேலை செய்கிறவன் என்ற பொருளில் வேலைக்காரன் என்கிறோம். அதுபோல தையல்காரன் என்றால் தையல் செய்பவன் என்பது பொருள். அதேபோல ரதகாரன் என்றால் ரதம் செய்பவன் – அதாவது தேர் செய்பவன் என்று பொருள். 2000 ஆண்டுக்கு முற்பட்ட புறநானூற்றில் அப்படி ஒரு சொல்லாக்கம் வருகிறது. “எம்முளும் உளன் வைகல் எண்தேர் செய்யும் தச்சன்” என்று ‘ஒரே நாளில் எட்டு தேர்களை செய்யும் வல்லமை உள்ள தச்சன்’ என்று பொருள். இங்கு தேர் செய்பவனை தச்சன் என்று கூறுவதைப் பார்க்கிறோம்.

இதையே கல்வெட்டும் ‘ரதகாரன்’ என்றால் தச்சன் என்று கூறுகிறது. அதுமட்டுமல்ல கிராமப்புறங்களில் தச்சர்களை ‘ஆசாரி’ என்று அழைப்பார்கள். அதையே கல்வெட்டும் கூறுகிறது. ஆசாரி என்பதற்குப் பதிலாக ‘ஆசாரியன்’ என்று கூறுகிறது. இதிலிருந்து ஆசார்யன் என்ற சொல் தான் சுருங்கி ஆசாரி என்று வந்துள்ளது என அறிகிறோம். அந்தக் கல்வெட்டு ஆலங்குடி என்ற ஊரில் ஆபத்சஹாயேசுரர் கோயில் உள்ளது.

இதில் ரதகாரர்களுக்கு என்று ஒரு மெய்க்கீர்த்தியே உள்ளது. அவர்களது முன்னோர் சிறப்பு–புகழ்–குறிக்கோள் இடம்

எழுத்து என்றெல்லாம் பெயர்கள் காண்கிறோம். தச்சன், ஆசாரியன், ரதகாரன் என்றழைக்கப்பட்ட இவர்கள் தான் நம் கோயில்களைக் கட்டினார், மனை கட்டினார், மாளிகை கட்டினார், சிற்பம் வடித்தனர். ஆதலின் தான் யாவரும் தொழும் தொழில் வல்லவர் எனப்பட்டனர். இவர்களை இப்பொழுது ஸ்தபதி என்று கூறுகின்றனர்.



32
கல்

சங்ககாலத் தமிழகத்தில் தலை சிறந்த வள்ளல்களில் ஒருவனாகத் திகழ்ந்தவன் பறம்பு நாட்டின் தலைவன் 'பாரி' பாரிக்கு அங்கவை, சங்கவை என்று இரண்டு பெண்கள் இருந்தனர். சங்கப் புலவர்களில் தலையாய புலவர் கபிலர். பாரியின் நெருங்கிய நண்பர். போரில் பாரி இறந்து போனான். ஆதரவற்ற இரு பெண்களையும் கபிலர் திருக்கோயிலூர் மலையமானுக்கு மணம் செய்து கொடுக்கிறார். அத்துடன் தனது வாழ்நாளின் குறிக்கோள் முடிந்துவிட்டது என, பாரியைப் பிரிந்து வாழ விரும்பாமல், திருக்கோயிலூரில், பெண்ணை ஆற்றங்கரையில் ஒரு குன்றன்ன பாறையில் தீப்பாய்ந்து இறந்துவிடுகிறார் கபிலர். அவர் இறந்த பாறை இன்றும் திருக்கோயிலூரில் இருக்கிறது. அதை "கபிலக்கல்" என்று அழைக்கிறார்கள்.

சங்கப்பாடல்களில் தன் நண்பனுக்காக செயற்கரிய செயல் செய்து உயிர்நீத்த கபிலரின் வரலாற்றை நெஞ்சு நெகிழும் வண்ணம் புறநானூற்றில் பல பாடல்கள் கூறுகின்றன. கபிலருக்குப் பிறகு ஒரு ஆயிரம் ஆண்டுகளுக்குப் பின் வந்த இராஜராஜசோழன், அக்கபிலக்கல்லை திருக்கோயிலூரில் வந்து காண்கிறான். அக்கல் பாரியையும், அவன் பெண்களையும், ஒப்பறிய புலவன் கபிலனையும் எடுத்துரைக்கிறது. வரலாற்றை எடுத்துரைக்கும் சின்னமாக அது தென்படுகிறது. அப்பெரும் புலவனின் புகழையும்

பெயரையும், பாடலாகவே கல்வெட்டில் எழுதி வைத்திருக்கிறான். இராஜராஜ சோழன். சங்ககால வரலாற்றையே நம் கண்முன் நிறுத்தும் இராஜராஜனின் கல்வெட்டைப் பாருங்கள்.

'முத்தமிழ் நான்மை
தெய்வக்கவிதை செஞ்சொல் கபிலன்
மூரிவன் தடக்கை பாரிதன் அடைக்கலப்
பெண்ணை மலையற்கு உதவி பெண்ணை
அலைபுனல் அழுவந்து அந்தரிக்ஷம் செல்ல
மினல் புகும் விசும்பின் வீடுபேறெண்ணி
கனல் புகும் கபிலக் கல் அது'

என்கிறான் இராஜராஜன். இங்கு "கல்" என்ற சொல் வெறும் பாறை, கருங்கல் என்ற பொருளில் இல்லாமல், கபிலனின் புகழையும், பாரியின் புகழையும் எடுத்துரைக்கும் மாப்பெரும் நினைவுச் சின்னம் என்ற பொருளில் இடம் பெறுகிறது. இறந்துபட்ட பெருமக்கள் என்றென்றும் புகழொடு நிலைத்து நிற்கும் சின்னம் என்ற பொருளில் "கல்" என்ற சொல் வரும்.

"கல்" என்ற சொல் இறந்து பட்டோரின் நினைவாக எடுக்கப்பட்ட சின்னம் என்ற பொருளில் பல பாடல்களில் வருவதைக் காணலாம்.

33

கல் நாட்டல்

"கல்" என்ற சொல் பல பொருள்களில் வரும். இடத்துக்கு ஏற்ப இதற்கு பொருள் கொள்ள வேண்டும். கட்டிடம் எழுப்பும் போது முதலில் அடியில் வைக்கும் கல்லை 'அடிக்கல் என்கிறோம். அதுபோல கட்டிடம் முடியுமிடத்து வைக்கும் கல்லை 'தலைக்கல்' என்று சொல்வார்கள். கோயில்களில் கோபுரத்தின் மேல் வைக்கும் கல் தலைக்கல் என்பதாம். அதுபோல் "கல்லும் கள்ளியும் நாட்டல்" என்று பல கல்வெட்டுகளில் சொல்லாக்கம் காண்கிறோம். "கல்லும் கள்ளியும் நாட்டல்" என்றால் பொருள் என்ன?

பண்டைய காலங்களில் நிலம் தானம் கொடுக்கும் மரபு. உண்டு. கோயில்களுக்கோ, படித்தவர்கட்கோ, வீரர்களுக்கோ தானம் கொடுப்பார்கள். பேரரசர்களாக, சக்ரவர்த்திகளாக இருந்தவர்கள் ஊரையே தானமாக அளிப்பது உண்டு. அவ்வாறு தானமாக அளித்த ஊர்களுக்கும், நிலங்களுக்கும் எல்லை குறிக்க வேண்டும். எல்லைகளை எவ்வாறு குறிப்பது என ஒரு மரபே உண்டு. அந்தப் பகுதியில் இருக்கும் அரசனது அதிகாரி, நாட்டார்கள், ஊரார்கள், நிலவரி பொத்தகம் உடையார், சேனை வீரர் என எல்லோரும் கூடுவர். ஒருவர் சிவப்பு வேட்டி தரித்து யானை மீது ஏறி கையில் ஒரு கொடியை பிடித்துக் கொண்டு,

ஊரார் தானம் கொடுக்கும் நில எல்லைகளைக் காட்ட வலமாக வருவார்கள். ஒருவர் கலசத்தில் நீர் கொண்டு அவ்வெல்லையில் நீரை தாரையாக ஊற்றிக் கொண்டு வருவார். எங்கு தொடங்குகிறார்களோ அந்த இடத்துக்கே வந்து முடிப்பர்.

இவ்வாறு தேர்ந்தெடுத்த எல்லையை குறிக்கத் தான் கல்லையும் கள்ளிச் செடியையும் நடுவர். இந்தக் கல் தான் எல்லைக்கல்லாக விளங்கும். அதை கல்வெட்டில் "கல்லும் கள்ளியும் நாட்டி" எனக் குறிப்பர். பிடி சூழ்ந்து, எல்லை தெரித்து, கல்லும் கள்ளியும் நாட்டி" என்று குறிப்பர்.

இவ்வாறு நடப்படும் எல்லைக்கல்லில் சில சின்னங்கள் பொறிக்கப்பட்டிருக்கும். சிவன் கோயிலுக்கு கொடுக்கப்பட்ட நிலமாயின் திரிசூலம் பொறிக்கப்பட்டிருக்கும். இதை "சூலக்கல்லு" என்று சொல்வார்கள். பெருமாள் கோயில் நிலமாயின் 'சக்கரம்' பொறிக்கப்பட்டிருக்கும். இதை "ஆழிக்கல்லு" என்பார்கள். சமணர் பள்ளிகளுக்கு கொடுக்கப்பட்ட நில எல்லைகளில் "முக்குடை" சின்னமோ அல்லது கெண்டியோ பொறிக்கப்பட்டிருக்கும். முக்குடைக்கல் அல்லது கெண்டிக்கல் என்பது. இன்றும் பல நூற்றுக்கணக்கான கிராமங்களிலே இது போன்ற எல்லைக்கற்கள் உள்ளதைக் காணலாம். இது என்ன என்று இப்பொழுது பலருக்குத் தெரியாது. அவை எல்லாம் எல்லைக்கற்கள். இதுபோல் எல்லைக் கற்களை நாட்டுவதைத் தான் "கல்லும் கள்ளியும் நாட்டல்" என்று அக்காலத்தே கூறினர். திருநெல்வேலிப் பகுதியில் இன்றும் "கரிவலம் வந்த நல்லூர்" என்ற ஊர் உள்ளது. அது யானை மீது வலம் வந்து கல் நாட்டி எல்லையைக் குறிக்கும் இம்மரபைத் தான் கூறுகிறது.

34

திருக்கற்றளி

"திருக்கோயில் இல்லாத திருவில் ஊரும்
திருவெண்ணீரணியாத திருவில் ஊரும்
பருக்கோடி பத்திமையாப் பாடாவூரும்
பாங்கினோடு பலதளிகள் இல்லவூரும்
விருப்போடு வெண் சங்கம் ஊதா ஊரும்
விதானமும் வெண்கொடியும் இல்லாவூரும்
அரும்போடு மலர் பறித்திட்டு உண்ணா ஊரும்
அவை எல்லாம் ஊரல்ல அடவி காடே"

என்கிறார் அப்பர் பெருமான். இப்பாட்டில் கோயில்கள் என்ற பொருளில் "பலதளிகள்" என்று கூறுகிறார். தளி என்றால் கோயில் என பலபாடல்களால் அறிகிறோம். "ஓணகாந்தன் தளியுளீரே" என்று பாடுவார் சுந்தரர். திருவாரூரில் "பரவையுள் மண்தளி" என ஒரு கோயில் இருந்தது. மண்தளி என்றால் மண்ணினால் கட்டப்பட்ட கோயில் என்பது. செங்கல்லால் கட்டப்பட்ட கோயிலையும் 'மண்தளி' என்னும் மரபு உண்டு. கோயில்களை மண்ணாலும், மரத்தாலும், கல்லாலும், செம்பு முதலிய உலோகங்களைப் பயன்படுத்தியும் கட்டுவது மரபு. ஒரே பொருளைக் கொண்டு கட்டப்படும் கோயிலுக்கு சுத்தக் கோயில் என்று கூறுவர். முழுவதும் செங்கல்லால் கட்டப்பட்டாலும் அல்லது முழுவதும்

மரத்தால் கட்டப்பட்டாலும் சுத்தக் கோயில் வகைப்படும். மரம், செங்கல், கருங்கல் ஆகிய பல பொருள்களையும் பயன்படுத்திக் கட்டப்பட்ட பொற்கோயிலை மிச்ரக் கோயில் என்று கூறுவர்.

மண்டகப்பட்டு என்ற இடத்தில் பல்லவ மன்னன் முதலாம் மகேந்திரவர்மன் ஒரு கற்கோயில் எடுத்துள்ளான். அதை மரமின்றி செங்கலில்லாமல், மண்ணில்லாமல், உலோகமில்லாமல் கட்டினேன் என்று கூறினான். இது சுத்தமான கோயில். முழுவதும் கல்லினால் கட்டப்பட்ட கோயிலைக் கற்றளி என்று கூறுவர். "கல்தளி" என்பது தான் கற்றளி என்று அழைக்கப்பெறும். காஞ்சிபுரத்தில் பல்லவன் இராஜசிம்மன் கட்டிய கைலாயநாதர் கோயிலை சோழர் கல்வெட்டுகள் "பெரிய திருக்கற்றளி" என்று கூறுகின்றன. தஞ்சாவூரில் இராஜராஜசோழன் தான் கட்டிய கோயிலை "தஞ்சாவூர் நாம் எடுப்பிச்ச திருகற்றளி ஸ்ரீ ராஜாஜீஸ்வரம் என்று கல்வெட்டிலேயே குறிக்கிறான். இது போன்று பல கல்வெட்டுகள் உள்ளன. இவற்றில் கற்றளி என்றால் கற்கோயில் என்று தெளிவாகிறது.

விருத்தாசலம் என்ற முதுகுன்றம் என்னும் பகுதியில் திருக்கற்றளி என்ற ஒரு சொல் வேறு ஒரு பொருளில் பயன்படுத்தப்பட்டுள்ளது. அவ்வூர்க் கோயிலில் குலோத்துங்கச் சோழ காடவராதித்தன் என்பவன் அவ்வூர் சிவபெருமான் முதுகுன்றமுடையாருக்கு மஹா அபிஷேகம் செய்ய ஒரு மண்டபம் கட்டினான். அதற்கு தன் பெயரையே வைத்தான். அதைக் கல்வெட்டில் குறிக்கிறான். "குலோத்துங்கச் சோழ காடவராதித்தனேன், திருமுதுகுன்றமுடைய நாயனார்க்கு மகாஸ்நபனம் பண்ணியருள என்பேரால் ஏழிசை மோகன் திருமண்டபம் என்று திருக்கற்றளி சாத்தி இத்தன்மம் செய்து முடித்தேன்" என்று கூறினான். மண்டபம் என்று திருக்கற்றளி

சாத்தி என்பதால் இங்கு மண்டபத்தையே "கற்றளி" என்ற சொல்லால் குறிக்கிறான். ஆதலின் கற்றளி என்ற சொல் கற்கோயிலை மட்டும் குறிக்காமல், கல்லினால் கட்டப்பட்ட புண்ணிய இடம் என்ற பொருளிலும் பயன்படுள்ளதைக் காண்கிறோம்.

மண்டகப்பட்டு என்னுமிடத்து மஹேந்திரபல்லவன் மலையைக் குடைந்து தோற்றுவித்த திருக்கற்றளி செங்கல்இன்றி, மரமின்றி, உலோகம் இன்றி, சுதை இன்றி, 'இலக்ஷிதாயதனம்' என்னும் இக்கோயிலைத் தோற்றுவித்தேன் என்கிறான்.

35
உருவகம்

உருவகம் என்ற ஒரு சொல் உள்ளது. இது செய்யுட்களில் வரும் ஒருவகை அலங்கார அணி என்பார்கள்.

"பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவன் அடி சேராதார்"

என்ற குறள் நமக்கெல்லாம் தெரிந்தது தான். ஆனாலும் ஒருவகை அலங்காரமாக சொல்வது என்பது பலருக்குத் தெரியாது. பிறவியைக் கடப்பது என்பது மிகவும் கடினமானது. அதே போல ஒரு பெருங்கடலைக் கடப்பதும் மிகவும் கடினமானது தான். இறைவனடியைச் சேர்ந்தவர்களால் தான் இதை கடக்க முடியும் என்பது பொருள். பிறவியையும் கடலையும் கடப்பது என்பது அரிது என்று அறிகிறோம். இரண்டுக்கும் அரிய செயல் என்பது ஒரே தன்மை. இத்தன்மையைக் கொண்டு பிறவியையே கடலாக உருவகிக்கிறோம். ஆதலின் இது உருவகம் என்னும் அலங்காரம் என்று தமிழறிந்தோர் கூறுவர்.

இதுபோல பல அலங்காரங்கள் உள்ளன. இவ்வலங்காரங்கள் எத்தனை தமிழில் உள்ளன. ஒவ்வொரு அலங்காரத்தின் இலக்கணம் என்ன? ஒன்றிலிருந்து மற்றது எப்படி மாறுபட்டது என்றெல்லாம் இலக்கண நூல்கள் கூறும். தண்டி அலங்காரம் போன்ற பல தமிழ் இலக்கண நூல்கள் உள்ளன. இவற்றில் வீர

சோழியம் என்று ஒரு நூல் உண்டு. அதை புத்தமித்ரா் என்பவா் இயற்றியிருக்கிறார். கங்கை வரை வெற்றி கண்டு கடல் கடந்து கடாரம் வரை வெற்றி கண்டானே முதலாம் இராஜேந்திர சோழன் அவனுடைய மூன்றாவது மகனுக்கு வீரராஜேந்திரன் என்று பெயர். அவன் பெயரால் இயற்றப்பட்டது. ஆதலின் இந்த இலக்கண நூலுக்கு வீர சோழியம் என்று பெயர். இதை ஆசிரியரே கூறுகிறார்.

"தேமேவாய் தொங்கல் தேர் வீரசோழன் திருப்பெயரால்
பூமேல் உரைப்பன் வடநூல் மரபும் புகன்று கொண்டே"

இவர் பௌத்த சமயத்தைப் பின்பற்றியவர். அக்காலத்தில் நாகப்பட்டணத்தில் ஒரு பெரிய பௌத்தப் பள்ளி இருந்தது. பௌத்த துறவிகள் பலா் இருந்தனர். ஆதலின் பௌத்தச் சார்பு இந்நூலில் தெரிகிறது. இந்நூலுக்கு பெருந்தேவனார் என்பவர் நல்ல உரை எழுதியிருக்கிறார்.

அவரது உரையில் தான் திருக்குறளில் பல பாடல்களை மேற்கோள்களாகக் காட்டி இந்த குறள் இன்ன அணியைச் சேர்ந்தது என்று குறள்களின் சொல் நயமட்டுமின்றி கவிதை நயத்தையும் ஆய்ந்துள்ளார். செய்யுட்களின் கவிதை நயத்தை ஆய்வது இக்காலத்தில் மறைந்து விட்டது என்றே சொல்லலாம்.

36
பொன் காண்பது

பொன்காண்பது என்று ஒரு சொல் இருக்கிறது. இதற்கு என்ன அர்த்தம். தங்கத்தை சுத்தமான தங்கமா பத்தரை மாத்து தங்கமா இல்லையா என்று உரைகல்லில் தேய்த்து பார்க்கிறதைத்தான் "பொன்காண்பது" என்று பழைய காலத்தில் கூறினார்கள். ஒரு கல்வட்டில் இது குறிக்கப்பட்டிருக்கிறது. 920ல் எழுதப்பட்டது. ஆயிரத்து நூறு வருஷம் ஆகிறது. உத்திரமேரூரில் இக்கல்வெட்டு இருக்கிறது.

அக்காலத்தில் கிராமங்களில் ஏராளமாக தங்கம் புழக்கத்தில் இருந்திருக்கிறது இக்காலம் போல் ஆசாரியார் மட்டும் தேய்த்துப் பாக்கிறத்தில்லை. ஊரில் தங்கம் தேய்த்து பாக்கிறவர்கள் ஆறு பேரைத் தேர்ந்தெடுத்தார்கள் பஞ்சாயத்துக்கு குடவோலை முறைப்படி தேர்ந்தெடுப்பார்கள் அல்லவா ? அதுபோல. அவர்கள் என்ன செய்ய வேண்டும் என்று கல்வெட்டு கூறுகிறது. அதைத்தான் "பொன் காண்பது" என்று கூறுகிறது. "இவர்கள் எல்லா ஜனங்களுக்கும் ஒக்க பொன் காண்பாராகவும்" ஊர் ஜனங்கள் எல்லாரும் ஒத்துக் கொள்ளும் வகையில் பார்க்க வேண்டும்.

தங்கத்தை உரைக் கல்லில் உரைத்துத்தான், அது நல்ல தங்கமா என்று பார்ப்பார்கள். அந்த உரைகல்லு சொறசொறன்னும்



பொன்காணும் முறை கூறும் கல்வெட்டு உள்ள
உத்தரமேரூர் வைகுந்தப் பெருமாள் கோயில்

இருந்து அழுத்தி தேய்த்தால் ஒரு பவுனுக்கு அரைக்கால பொன் தேய்மானமே போய் விட்டால் என்ன செய்வது? அதனால் கல்வெட்டு சொல்கிறது ரொம்ப தேய்க்கக் கூடாது. பெருங்கல்லில் தேய்க்கக் கூடாது என்று. "பருங்கல்லில் உரையாதே பொன் அறியுந்தனையே உரைப்பதாகவும்" என்று கூறுகிறது. அவ்வாறு உரைத்துப் பார்க்கும்போது கொஞ்சம் தங்கம் அந்த உரைகல்லில் இருக்கும். அதை அன்றன்றைக்கு ஏரிவாரிய மக்களிடத்து கொடுத்துவிட வேண்டும். "அற்றைக்கற்றைக்கு உரைத்த மெழுகு ஏரிவாரியப் பெருமக்கள் கைக்கே வெட்டி முதலாக, வஞ்சியாதே கொடுப்பதாகவும் என்று கூறுகிறது." குடுத்துட்டேன்னு ஏமாத்தக்கூடாது. அதைத்தான் வஞ்சியாதே கொடுப்பதாகவும். அதுமட்டுமில்லை. மூனு மூனு மாதத்துக்கு ஒரு முறை இன்னும் ஒரு பெரிய கமிட்டியாரிடம் போய் நாங்கள் கல்வெட்டில் இருக்கிறபடியே செய்து கொண்டு வருகிறோம்னு சத்யம் பண்ணனும். அதைக் கல்வெட்டு "மும்மூன்று மாஸம் போன வாறே சம்வத்ஸர வாரியப் பெருமக்களிடைக்கே சென்று எங்களுற்றது நாங்கள் எடுத்தனை நாளும் சிலாலேகைப்படி பிழைக்க எடுத்தோமாகில் பசித்து வாழ்வோம் என்று சொல்லி தூளிற்று விடுவார்களாக்வும்" என்று கல்வெட்டு கூறுகிறது. தங்கத்தை உரைச்சுப் பார்க்கறதில் அதுவும் கிராமப்புற மக்களை ஏமாத்தக் கூடாது, ஏமாத்தவும் முடியாது. அவ்வளவு கட்டுப்பாடு அக்காலத்தில் இருந்தது. இதைத்தான் "பொன் காண்பது" என்று கூறினார்கள். அந்தக் காலத்தில் பெண்கள் தைரியமாக நல்ல தங்க நகைகள் நிறைய வாங்கியிருப்பார்கள் என்பதில் சந்தேகம் இல்லை.

37
அத்வைதத் தொண்டர்

ஆதிசங்கரர் அருளிச்செய்த சமயக் கோட்பாடுகளை அத்வைத சிந்தாந்தம் என்று அழைப்பர். அது சமுதாயத்தில் எல்லோராலும் பேணி வளர்க்கப்பட்டது என்பதற்கு பல சான்றுகள் உண்டு. ஒரு நூறு ஆண்டுகளுக்கும் முன்னர் கூட அத்வைதக் கோட்பாடுகளை ஆய்ந்து படித்திருக்கிறார்கள்.

தூத்துக்குடியைச் சேர்ந்த வேளாளர் குடியைச் சேர்ந்தவர் மாணிக்க வாசகன் என்பவர். நல்ல சிறந்த சிவபக்தர். நெற்றியிலே விபூதியும் மற்ற சிவச்சின்னங்களையும் அணிந்தவர்கள் யாரைக் கண்டாலும் சிவன் எனவே எண்ணி வணங்கக் கூடியவர். அவரைப் பற்றிய ஒரு பாடல் உண்டு.

“பாற்கடல் விடத்தைப் பருகிய மிடற்றுடை
மூர்த்தியே பொருளென முன்னுறு மதியோன்
பூதி சாதனங்கள் பூண்டிடும் அடியார்
எல்லாம் சிவன் என எண்ணும் மெய்கண்டன்”

என்று அவரைக் குறிக்கிறது. சத்தியம், சாந்தம், அடக்கம் முதலிய நிறைந்த குணமுடைய அவர் ஒரு பெரும் கொடைவள்ளல்.

அவர் தம் காலத்தே நிலவுகின்ற எல்லாச் சித்தாந்தங்களிலும்

அபேதமுக்தி (இரண்டற ஒன்றாய் விடும்) வேதாந்தமே மெய்ப்பொருள் என்று கருதினார். இவற்றை எடுத்துக் கூறும் 'பிரும்மசூத்ர பாஷ்யம், பகவத்கீதா பாஷ்யம்' முதலிய நூல்கள் மிகச் சிறந்தவை. அவற்றின் முடிவுகள் சிறப்பாக அறிய உதவும் நூல் "அத்வைத சித்தி" என்னும் நூல். ஆனால் இவை எல்லாம் அந்த பாஷையை நன்கு கற்றவர்களால் தான் அறிந்து கொள்ள இயலும். அப்பாஷையிலே முதிர்ச்சி இல்லாதவர்கள் அம்முடிவுகளை அறிய வேண்டும் என்று அவாவும் நற்குணங்களும் நிறைந்தவர்களுக்கு தமிழ் மொழியில் தெரிவிக்க வேண்டும். குறிப்பாகத் தமக்கு தமிழில் மொழி பெயர்த்துத் தர வேண்டும் என குப்புசாமி என்பவரை வேண்டிக் கொண்டார்.

இக்குப்புசாமி என்பவர் தஞ்சாவூரில் பிறந்தவர் என்றும் கிருஹஸ்தாஸ்ரமத்தில் (மனையாளுடன்) வாழ்ந்தவர் என்றும் அறிகிறோம். அகத்தியம், பாணினி ஆகியோர் எழுதிய நூற்களை நன்கு கற்றவர் என்றும் அறிகிறோம். அகத்தியம் என்பது தமிழையும், பாணினி என்பது சமஸ்கிருத மொழியையும் குறிக்கும். இருமொழியிலும் உள்ள இலக்கணங்களை நன்கு கற்றவர் என்பது பொருள். அதாவது இருமொழி வல்லுநர். நல்ல ஒழுக்க சீலர். "அபரோக்ஷானுபூதி" போன்ற நூல்களை நன்கு அறிந்தவர். இவர் பல அத்வைத நூல்களை மொழி பெயர்த்தவர். அவரால் மொழிபெயர்க்கப்பட்ட நூல்களின் பெயர்களும் நமக்கு கிடைக்கின்றன. "விசார சந்திரோதயம்", "ஹடயோகபிரதீபிகை", "தத்வமஸி மஹாவாக்யார்த்தம்", "தர்க்க கௌமுதி", "தர்க்க கௌமுதி விருத்தி", "பிராபாகரம்" ஆகிய வடமொழி நூல்களை தமிழில் மொழிபெயர்த்துள்ளார். இவற்றில் எந்த நூல்கள் அச்சில் உள்ளன? இவர் மொழிபெயர்க்க எடுத்துக் கொண்ட மூலநூல்கள் எவை? இன்றுள்ள இந்நூல்களுக்கும் இவர் மேற்கொண்ட நூல்களுக்கும் வேறுபாடுகள் உள்ளனவா? என்றெல்லாம்

ஆராய்ச்சி மேற்கொள்ளலாம். இவர் மொழி பெயர்ப்பில் எவ்வளவு இன்று கிடைக்கின்றன எனவும் தேடலாம்.

மொழிபெயர்ப்பில் சிறந்த இந்த பெரியவரைத்தான் தூத்துக்குடி மாணிக்கவாசகம் அவர்கள் கேட்டுக் கொண்டுள்ளார். அவர் வேண்டுகோளுக்கிணங்க தஞ்ாசவூர் குப்புசாமி, ஹிந்தி மொழியிலிருந்து தமிழுக்கு மொழிபெயர்த்திருக்கிறார். பண்டிட் பீதாம்பர்ஜி என்பவர் ஹிந்தியில் எழுதிய 'பாலபோதம்' என்ற நூலைத் தான் இவ்வாறு மொழி பெயர்த்திருக்கிறார். இந்நூல் அத்வைத பரமானது. சீடனுக்கு குரு கேள்விகளுக்கு விடையளித்து தத்துவங்களை எடுத்துரைப்பது போல எழுதப்பட்டுள்ளது. பெரும்பாலும் தமிழிலேயே உள்ளது. ஒரு சில இடங்களில் சமஸ்கிருத சுலோகங்கள் மேற்கோள்களாக காட்டப்பட்டுள்ளன. 'பாலபோதம்' ஆதலின் வேதாந்தக் கருத்துக்களை சீடனுக்குப் புரியும் வகையில் தமிழில் எழுதப்பட்டுள்ளது. இருப்பினும் வேதாந்தக் கருத்துக்களை அறிய பல வடமொழி சொற்களை அறிய வேண்டும். ஆதலால் ஒரு விரிவான வேதாந்த அகராதியே தமிழில் இணைக்கப்பட்டுள்ளது. இந்நூல் சுமார் நூறு ஆண்டுகளுக்கும் முன்னர் அச்சிடப்பட்டது. இப்பொழுது இந்நூலை அறிந்தோர் யாருமில்லை. நூலும் கிடைப்பது அரிது.

இங்கு ஒன்று குறிக்க விரும்புகிறேன். சென்னையில் வளசரவாக்கத்தில் காஞ்சிகாமகோடி பீடாதிபதி ஸ்ரீ ஜயேந்திர பெரியவாளை தரிசிக்கும் பேறு பெற்றேன். அப்போது பெரியவாளிடம் இந்நூலை காண்பித்தேன். இந்நூலை மொழிபெயர்த்தவர் தஞ்சாவூர் குப்புசாமி என்று கூறினேன். பெரியவாள் சிரித்துக் கொண்டே, "அவர் பல நூல்களை மொழிபெயர்த்திருக்கிறார். பெரும் தொண்டு ஆற்றியிருக்கிறார்" என்றும் எடுத்துக் கூறினார்கள். நான் அசந்தே போய்விட்டேன். பெரும்பாலும் யாரும் அறிந்திலாத இந்நூலையும் இந்நூலை

மொழிபெயர்த்த குப்புசாமியைப் பற்றி எடுத்த எடுப்பிலேயே பெரியவாள் கூறியது, அவாள் எவ்வளவு ஆழ்ந்து பல்வேறு நூல்களையும் ஆய்ந்திருக்கிறார்கள் என்பதற்கு எடுத்துக்காட்டு. ஒவ்வொரு நாளும் ஆயிரக்கணக்கான பக்தர்களைப் பார்க்கவும் பிற நிகழ்ச்சிகளில் பங்கு பெறுவதற்கே நேரம் போதவில்லை. அவ்வாறு இருக்க இது போன்ற ஆய்வுக்கு எப்பொழுது முடியும் என்று எண்ணினேன். அது பெரும் மஹாத்மாக்களால் தானே முடியும். அதுமட்டுமல்ல அந்நூலை ரகுவிடம் கொடுத்து இந்நூல் நம்மிடம் இல்லை. உடனடியாக இதை மைக்ரோபிலிம் எடுத்து சி.டி.யில் போட வேண்டும் என்று அனுப்பி வைத்தார்கள். ஆழ்ந்த ஆய்வு மட்டுமல்ல. உடனடியாக அதைக் காப்பதற்கும் செயல் முறையில் ஈடுபட்டது என்னை மேலும் வியப்பில் ஆழ்த்தியது. இம்மஹானை மனதார வாயார வாழ்த்திக் கொண்டே வெளிவந்தேன்.

அச்சமயம் எனக்கு மற்றுமொரு எண்ணமும் தோன்றியது. நூறு ஆண்டுகளுக்கு முன்னர் வேளாளர் குடியைச் சேர்ந்த ஒருவர், அதுவும் சைவமரபைச் சேர்ந்த ஒருவர், உபநிடதங்களின் வழியிலே அத்வைத முக்தியே சிறந்தது என்று கருதி, வடமொழி, ஹிந்தி என்றெல்லாம் கருதாது தமிழில் மொழிபெயர்க்கச் சொல்லி மொழிக் காய்ப்பு இன்றி தத்துவக் காய்ப்பு இன்றி இத்தமிழகத்திலே சிறந்திருக்கிறார்களே. இது போன்று இன்னம் எத்தனை பெரியவர்கள் இருந்திருக்கிறார்கள் என ஆராய வேண்டும் எனவும் தோன்றியது.

38
சொல்லின் செல்வன்

நாம் சொல்லையும் பொருளையும் ஆய்ந்து வருகிறோம். பொருளை எப்படிச் சொல்ல வேண்டும்? அச்சொல் எத்தன்மையதாய் இருக்க வேண்டும், என அறிந்த ஒருவனைத் தமிழ்க் காப்பியங்கள் நமக்கு காட்டுகின்றன. அப்போப்பட்ட பண்பாளன் யார்? அவன் பெயர் என்ன எனில் அவனை 'சொல்லின் செல்வன்' என்று கூறுவர். அவன் தான் கம்பன் காட்டும் அனுமன். அனுமன் முதன் முதலில் இராமனைக் கண்டு பேசியதும், இராமனே இலக்குவனிடம் கேட்கிறான். 'யார்கொல் இச்சொல்லின் செல்வன்? விரிஞ்சனோ, விடைவல்லானோ? நான்முகனா, அல்லது ஓசை ஒலியெல்லாமாகத் திகழும் சிவபெருமானா யாரிந்த சொல்லின் செல்வன் என்று கூறும் அளவுக்கு சொல்லின் நயமறிந்து சொல்லக்கூடிய வல்லமை பெற்றவன் அனுமன்.

அவன் உள்ளத்தின் உள்ளே எப்பொழுதும் இராமனையே தெய்வமாக வணங்குபவன். அவனே சீதை எங்குள்ளாள் எனக் கண்டுவரும் ஆற்றல் பெற்றவன் என தன் கணையாழி அளித்து தென்திசை நோக்கி அனுப்பினான் இராமன். அனுமன் இலங்கை செல்கிறான். அசோகவனத்தில் சீதையைக் காண்கிறான். பின்னர் இலங்கைக்கு எரியூட்டி விட்டு இராமனிடத்துக் கூற திரும்பி வருகிறான். இராமனை அடைந்ததும் அவன் என்ன கூறினான்? 'கண்டேன் சீதையை' என்று கூறினான் என கதை சொல்பவர்கள்

தோள்கண்டார் தோளே கண்டார் தொடுகழல் கமலம் அன்ன
தாள் கண்டார் தாளே கண்டார் தடக்கை கண்டாரும் அஃதே
வாள் கொண்ட கண்ணார் யாரே வடிவினை முடியக் கண்டார்

கூறுவர். சீதையை கண்டேன் என்று சொன்னால் சீதை என்றவுடனேயே காணவில்லை என்று சொல்லிவிட்டால் எங்கே இராமன் மூர்ச்சித்து வீழ்ந்து விடுவானோ என எண்ணி 'கண்டேன் என முதலில் கூறி, பின்னர் சீதையை எனப் பின் கூறினான் என கதை சொல்வோர் கூறுவர். சாதாரணமான அனுமனாயிருந்தால் அப்படித் தான் சொல்லியிருப்பான். ஆனால் மாபெரும் கவிச் சக்ரவர்த்தியாகிய கம்பன், அனுமன் எவ்வாறு கூறினான் எனக் காட்டுகிறான்.

எந்த இராமன் சீதை இருக்கிறாளோ, மாய்ந்தனளோ என்று ஏங்கி இருக்கிறானோ, எந்த இராமனை தன் உள்ளத்தின் உள்ளே தெய்வமாக அனவரதமும் வணங்குகிறானோ அந்த இராமனை அடைந்த அனுமன், ராமனின் திருவடிகளை வணங்க வில்லையாம். பின் என்ன செய்தான்? எந்த திசையிலே கற்பின் தேவியான ஜானகி இருக்கிறாளோ, அந்த திசையை நோக்கி, திரும்பி உச்சிமேல் கரம் கூப்பி தரையின் மீது வீழ்ந்து வணங்கினானாம்.

"எய்தினன் அனுமனும் எய்தி ஏந்தல் தன்
மொய்கழல் தொழுகிலன் முளரி நீங்கிய
தையலை நோக்கிய கையினன் தலையினன்
வையகம் தழீஇ நெடுதிறைஞ்சி வாழ்த்துவான்"

சீதை இருக்கும் திசையை வணங்கி வாழ்த்தினானாம். இவன் செய்கையில் இருந்தே இராமன் அறிந்து கொண்டான். இவன் கண்டதும் உண்டு அவள் கற்பும் நன்று, என்று அனுமனின் குறிப்பிலிருந்தே அறிந்து கொண்டானாம் இராமன். சொல்லாமலேயே குறிப்பினால் செப்பரும் செய்தியைக் கூறினான் அனுமன். சிலவற்றை சொல்லால் இல்லாமல் குறிப்பினாலே சொல்லலாம் என இவ்வுன்னத காப்பியத்தின் வாயிலாகக் கூறினான் கம்பன். அவ்வளவு பெரும் பண்புடைய சமுதாயத்தில் வந்தவர் யாம் என மனமகிழ்ந்து ஒப்பரும் காப்பியங்களை படித்து இன்புறுவோம்.



Vidyavacaspati, Kalaimamani, Dr. R. Nagaswamy, Former Director of Archaeology, Tamilnadu and Former Vice Chancellor, Kanchipuram University, Author of many books in English and Tamil including Master pieces of South Indian Bronzes, Siva Bhakti, in English and Mamallai. Oviyappavai and Yavarum Kelir in Tamil. Has also Edited several books including Foundations of Indian Art (Proceeding of the Chidambaram Seminar on Art and Religion). He has organised several Conferences – District, State, National and International conferences – the last being the International Seminar on Arts and Religion organised at Chidambaram, in 2001. Dr. R. Nagaswamy has delivered lectures in almost all leading Universities of the World at France, Germany, Denmarg, USSR, Sweden, UK, Canada and USA (including at Harvard, Pennsylvania, Cornell, Berkeley, Los Angeles, Austin, South Carolina and other places). Directed Sound and Light programme at the 17th cent. Nayak Palace at Madurai. Was the first to undertake under water Archaeological exploration off the coast of Pumphar in Tamilnadu. Appeared as an expert witness in the London High Court in London on behalf of Government of India, in the famous London Nataraja Case. Recipient of several public honours including the tittle Kalaimamani conferred by the Government of Tamil Nadu for his signal contribution to Tamil art and literature. He is the Founder Trustee of the Chidambaram Natyanjali trust. His family members to celebrate his 70th birthday have founded the Tamil Arts Academy.

1988, Justice Ian Kennedy, Judge, London High Court : Dr. Nagaswamy, who I am satisfied is an unequalled expert in his subject.

1988, Mr. Adrian Hamilton, Queen's Counsel, London: Dr. Nagaswamy has brought to bear unequalled learning and experience, in the historical, cultural and religious aspect of the Chola empire, and the Hindu religion.

1977 C. Sivaramamurthi: Dr. R. Nagaswamy, has been dynamic in his archaeological activity and his department has been working wonders, with his discovery of rare material in close succession every year, exposition through valuable books published and achievement for exceeding available resources.

1997: Dr. Michael Peter - Cain, University of IOWA, USA: Do you know or know R. Nagaswamy, of Madras. I think he is the most brilliant and interesting person I met on my entire trip. World class archaeologist, art historian, numismatist etc. probably the leading Indian Authority in the field of South Indian Bronzes and an outspoken advocate of his views on Vedic tradition.

2001 May Professor Dr. Joachim Bautze, (SAI, Kunsigeschichle, Berlin, Germany,) on Dr. Nagaswamy's lecture on South Indian Bronzes at Heidelburg University, Germany.

We all liked your lecture at Heidelburg very much, especially the fact that you have so many feelings for the objects that you showed. When you said something "this piece is so beautiful" then it really was. You are an art-historian, as an art historian should be I am sure that you must be the greatest connoisseur in the field of early South Indian classical bronzes. Most of the pieces you had shown were absolute masterpieces.